கல்கி

KALKI 27.2.2005 ரூ.6.00



அழகா படிங்க....



கல்கி

27.2.2005



ரஜினியின் அழ

மகள் ஐஸ்வர்யாவின் திருமணத்தில் கண்கள் ஒடுங்கி, கன்னங்கள் உள்வாங்கிக் காட்சியளித்த ரஜினியா இது?! ரஜினி வீட்டில் நடந்த வருமான வரிச் சோதனையைவிட ஒருபடி வியப்பான விஷயமாக, அவரது திடீர் அழகு ரகசியத்தைப் பற்றி பேசுகிறார்கள் அவரின் ரசிகர்கள். ரஜினியின் உதடுகளில் இருந்த வெள்ளைத் தழும்புகள் இப்போது இல்லை. அவரது இடது கண்ணையொட்டியிருந்த நீண்ட நாள் தழும்பையும் காணோம். மோவாய்க்கு கீழேயும், காதுகளை ஒட்டியும் தொங்கிக் கொண்டிருந்த சதைக் கோளங்கள் மாயமான காரணம் தெரியவில்லை. மொத்தத்தில் முகத்தில் சின்ன சுருக்கம் கூட இல்லாமல், சந்திரமுகியில் சிக்கென்று இருக்கும் ரகசியம் தெரியவில்லை என்று மண்டையைப் பிய்த்துக் கொண்டிருந்த கோடம்பாக்கத்துக்கு, விடை கிடைத்து விட்டதாக காதில் விழுகின்றன.

ரஜினி இத்தாலிக்குச் சென்று மூன்று வித காஸ்மெடிக் அறுவை சிகிச்சை செய்து கொண்டு திரும்பியிருக்கிறார். ஹாலிவுட் கறுப்பு நடிகர் டென்செல் வாஷிங்டனுக்கு ஒப்பனை செய்து வந்த இத்தாலிய மேக்-அப் கலைஞரையும் கையோடு கூட்டி வந்திருக்கிறார் என்று கிசுகிசுக்கிறார்கள். ஆனால் இதை மறுக்கிறார், ரஜினியின் பர்சனல் மேக்-அப்மேனாகப் பணிபுரிந்து வரும் சுந்தரமூர்த்தி.

"ரஜினி யோகாவில் நம்பிக்கையுடையவர். அவர் தமது ஸ்கின்னை மிகச் சரியாகப் பராமரித்து வருகிறார். காட்சியில் பயன்படுத்தப்படும் ஒளியமைப்பைப் பொறுத்து அவர் முகத்துக்கு பேஸ் மேக்-அப் போடுகிறேன். எப்போதுமே இறக்குமதி செய்யப்பட்ட மேக்-அப் சாதனங்களைத்தான் அவருக்காகப் பயன்படுத்துகிறோம். இந்த முறை ஹாலிவுட்டிலிருந்து மேக்ஸ் (max) பிராண்ட் மேக்-அப் வண்ணங்களை வாங்கி வந்து பயன்படுத்துகிறோம். சந்திரமுகி பாத்திரப்படி, இந்த முறை ரஜினிக்கு தாடி இல்லை என்பதையும் நீங்கள் மனதில் கொள்ள வேண்டும்" என்கிறார்.

இன்னொரு பக்கம் கோட்டக்கல் ஆரிய வைத்தியசாலாவுக்குச் சென்று வருடத்தில் இருமுறை ஆயுர்வேத மசாஜ் மற்றும் ஆயுர்வேத பத்தியச் சாப்பாடு சாப்பிட்டுத் திரும்புவாராம் ரஜினி. மகளின் திருமணத்தை முடித்த கையோடு,

கோட்டக்கல்லில் இருந்து ஆயுர்வேத மருத்துவர் குழுவை சென்னைக்கே வரவழைத்து, தமது போயஸ் தோட்டம் வீட்டிலேயே சிகிச்சையை நிறைவு செய்திருக்கிறார் என்று தகவல். தவிர தமது அருணாசலா கெஸ்ட் ஹவுஸில் யோகா மற்றும் கொஞ்சம் உடற்பயிற்சி செய்ய, இரண்டு அறைகளை மினி ஜிம் மற்றும் தியானக் கூடமாக பயன்படுத்தி வரும் ரஜினி, அந்த அறைகள் நீங்கலாக கெஸ்ட் ஹவுஸை குத்தகைக்கு விட்டிருக்கிறார் என்கிறார்கள்.

ரஜினியின் மீண்ட இளமைக்கு மற்றொரு முக்கியமான காரணம் இருக்கிறது.

'சந்திரமுகி' படம் முடியும் வரை மதுப் பழக்கத்தை நிறுத்தி வைத்திருக்கிறார் என்கிறது நம்பத்தகுந்த வட்டாரம். இதனோடு ரஜினியின் உணவுக் கட்டுப்பாடும் அவரது முகத்தில் இளமையை ஊஞ்சலாட விட்டிருக்கிறது. ஷூட்டிங் ஸ்பாட்டில் ரஜினி டீ, காபி, ஜூஸ், இளநீர் எதுவும் சாப்பிடுவதில்லை. பகலில் ஒவ்வொரு மணி நேரத்துக்கு ஒருமுறை ஒரு கப் நீர் மோர். காலை எட்டு மணிக்கு மிளகாய்ப் பொடி நல்லெண்ணெயில் நான்கு இட்லிகள், பதினொரு மணிக்கு நூறு கிராம் அவித்த கொண்டைக்கடலை, மதியம் ஒரு கப் சாம்பார் சாதம், அரைக் கப் தயிர் சாதம், ஐந்து மணிக்கு நான்கு சோயா பிஸ்கட். கொஞ்சம் பிளாக் லைம் டீ, இரவு இரண்டு இட்லிகள், ஒரு கொய்யா. இதுதான் ரஜினியின் டெய்லி டயட் என்கிறார்கள்.

இவற்றோடு, "ரஜினி அணியும் காஸ்ட்யூம்கள்

ரகசியம்!

அவரை மேலும் ஒருபடி அழகாகக் காட்டுகின்றன" என்கிறார் சந்திரமுகியில் ரஜினியின் காஸ்ட்யூமராகப் பணிபுரிந்து வரும் சிவாஜி ஃபிலிம்ஸ் கிருஷ்ணன். "சென்னையில் அறிமுகமாகும் முன்பே மும்பையில் பிரபலமாகத் தொடங்கியிருக்கும் ஜீன்ஸ், டீ-ஷர்ட்ஸ், ஜெர்கின்களை அங்கிருந்து அள்ளிக் கொண்டு வந்தோம். லாஸ் ஏஞ்சல்ஸிலிருந்து போலோ மற்றும் போலீஸ் ஆகிய சர்வதேச பிராண்ட்களிலிருந்து லேட்டஸ்ட் கூலிங் கிளாஸ்களையும் அவருக்காகத் தருவித்தோம்" என்கிறார் இவர்.

இந்தமுறை சொல்லி வைத்து ரஜினி ஜெயிப்பார் என்று அடித்து ஆருடம் சொல்கிறது கோடம்பாக்கம்.

- ஸ்ரீ

கல்கி

பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்டிற்காக பரதன் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடுபவர் :
கி. ராஜேந்திரன்

கல்கி பில்டிங்க்ஸ்,
47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32

ஆசிரியர் :
சீதா ரவி

ஆசிரியர் குழு :
அனுராதா சேகர்
ஆர்.சி. ஜெயந்தன்

வடிவமைப்பு :
எஸ். ஸ்டீஃபன்
பி.ஆர். ராஜன்

தொலைபேசி :
22345622, 23, 24
தொலைநகல் :
044 - 22345621

மின்னஞ்சல் :
ஆசிரியர் குழு :
kalki@kalkiweekly.com
சந்தா பிரிவு :
subscription@kalkiweekly.com
பிற தகவல்களுக்கு :
info@kalkiweekly.com
கல்கி இன்டர்நெட் முகவரி :
www.kalkionline.com

சந்தா விவரம் :
உள்நாடு :
ஒரு வருடம் : ரூ.330/-
ஆறு மாதம் : ரூ.165/-
வெளிநாடு (விமானத்தபால்) :
ஒரு வருடம் : 62 யு.எஸ். டாலர்
இலங்கை : ரூ.2000/-

Bharathan Publications
Private Limited,
Kalki Buildings,
47-NP, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 032.

ஒவ்வொரு இதழும் உங்கள் மேன்மைக்கு

'கொஞ்சிடும் கிளிமொழி
அஞ்சன மைவிழி
குமரனின் கைவண்ணத்தால் எழில்
மயமாக்குதே'

- எழுபதுகளில் இப்படி பைந்தமிழில் உருவான விளம்பரங்களை, தள்ளி நின்று வேடிக்கை பார்த்தனர் நம் மக்கள். பெரும்பாலும் நடிகைகளையே மாடல்களாகப் பயன்படுத்தி வந்ததால், ஒரு சராசரி மனிதனிடமிருந்து அந்நியப்பட்டு நின்றது அன்றைய விளம்பர உலகம்.

ஓர் இலையுதிர் காலம். அடுத்தது வசந்த காலம். இயற்கையின் சுழற்சியோடு ஒன்றுபட்டது மனித வாழ்க்கை.



• மேதா



• த்ரிஷா

நம் பக்கத்து வீட்டுப் பெண்போல் தோற்றமுடையவர், நம் வீட்டு வரவேற்பறையிலுள்ள டீவி திரையில் தோன்றி 'சர்ஃப் எக்ஸெல் வாங்குங்க, ஒரு பக்கெட் தண்ணியை மிச்சப்படுத்தலாம்' எனும் பொழுது, 'அட' என்று நம் கண்கள் ஆச்சர்யத்தில் விரிய, நம்மோடு கலந்து விடுகின்றன விளம்பரங்கள்.

இதே அலைவரிசையில் முன்னணி நடிகைகளுக்கும், மும்பை மாடல்களுக்குமே உரித்தாயிருந்த விளம்பர உலகமும், மாடலிங்கும் இன்று கல்லூரிப் பெண்கள் வசம் வந்து விட்டன என்பது, புரட்சிகரமான ஒரு மாற்றம். 'மாடலிங் உலகிற்குள் சென்றால் பாலியல் குற்றங்களுக்கு ஆளாக நேரிடும். உறவினர்களின் அரசல் புரசலான பேச்சுக்கு ஆளாக வேண்டியிருக்கும். வாழ்க்கை தடம் மாறிவிடும்' என்பது போன்ற கிலிகள் எல்லாம் இன்று சுத்தமாக அழிந்து போயினவா? ஒரு தனியார் கம்பெனிக்கு அச்சமின்றி பணிக்குச் செல்வதுபோல், மாடலிங் தொழிலுக்கும் மிகச் சுலபமாகச் செல்ல முடிகிறதா? அச்சங்களெல்லாம் துச்சமாக மாறிவிட்டனவா?

''என் அப்பா கேமராமேன், அம்மாவும் நடிகைதான். ஆனால், என் மாடலிங் விருப்பத்தை முதலில் மறுத்தவர்கள் அவர்கள்தான்.

'இல்லம்மா. என்னை யாரும் ஒண்ணும் பண்ண முடியாது. ஐ ஆம் வெரி ஸ்ட்ராங்' என்று மெனக்கெட்டுத்தான் இந்த ஃபீல்டுக்குள் நுழைந்திருக்கிறேன்'' என்கிறார் முன்னணி மாடலாக உயர்ந்து கொண்டிருக்கும் மானஸா. ப்ளஸ் டூ முடித்த கையோடு விளம்பரத்துறைக்குள் நுழைந்த இவர், ஒரு சில விளம்பரங்களில் நடித்துவிட்டு, இன்று பி.சி. ஸ்ரீராம் பணிபுரியும் படத்துக்கு ஹீரோயினாகியிருக்கிறார்.

தமிழ்ப் பெண்கள் நுழையவே அச்சப்படும் மாடலிங் உலகில், நீண்டகாலமாக கோலோச்சிக் கொண்டிருப்பவர் மேதா. "டிராமாவில் நடிப்பது, டான்ஸ் பண்ணுவது போல் மாடலிங்கும் ஒரு கலைதான். நான் முன்பு படித்த எத்திராஜ் கல்லூரியில் நான் மட்டுமே மாடலாக இருந்தேன். ஆனால் இன்று, வகுப்புக்கு ஒருவர் என்று தலைகீழாக மாறிவிட்டது' என்றவர், பாதுகாப்பு குறித்து அழகான பாயிண்டைத் தெரிவித்தார். "வேறு எந்த வேலைக்குப் போனாலும் அங்கே நம் அப்பா அம்மாவைக் கூட்டிப் போக முடியுமா? ஆனால் இந்தத் துறையில் அதுவொரு பெரிய வசதியாக இருக்கிறது. என் அம்மாவின் துணையில்லாமல் நான் ஷூட்டிங்கிற்குச் சென்றதேயில்லை" என்கிறார்.

தமிழ்நாட்டுப் பெண்கள் நுழைவதற்காகத் தன் வாயிலை விளம்பர உலகம்



மயக்கும் மாடலிங் உலகம்!

• ஸ்ரேய்யா

பெரிதாகத் திறந்து வைத்திருந்தாலும் 'கன்சர்வேடிவ்' என்கிற அடைப்புக் குறிக்குள் தமிழகம் இன்னமும் அடங்கியிருப்பதாகவே அனைவரும் குறைப்பட்டுக் கொள்கிறார்கள். இந்தக் குறைபாட்டோடு, மும்பை, ஹைதராபாத் போல நல்ல தரமான மாடலிங் பயிற்சி நிலையங்கள் சென்னையில் இல்லாததும் இணைந்துகொள்ள, அஷ்டலட்சுமிகளையும், அழகு தேவதைகளையும் நாம் தாராளமாய் கொண்டிருந்தும், சரியான வழிகாட்டுதலின்றித் தத்தளிக்கிறது தமிழ் மாடலிங் துறை.

"மும்பையில் எல்லாமே பக்கா புரொஃபஷனலாக நடக்கிறது. அங்கு வெறும் மாடல்கள் மட்டுமே ஏழாயிரத்துக்கும் அதிகமான பேர் இருக்கிறார்கள். ஆனால் சென்னையில் குழந்தைகள், பெரியவர்கள், ஆண் - பெண் என்று முப்பது பேர்தான் இருக்கின்றனர். அதுவும் கடந்த சில வருடங்களில்தான் இந்த முப்பது பேரும் நுழைந்தனர்.



• ஆண் மாடல்

மாடலிங் என்றாலே கிளாமர் என்கிற காலம் மலையேறி, இன்று டீசன்ட்டான விளம்பரங்கள்தான் பெரும்பாலும் வருகின்றன. பல விளம்பரங்களுக்கு, தமிழ்ப் பெண்களின் முகவெட்டுதான் தேவைப்படுகிறது. திறமையோடும் தைரியத்தோடும் உள்ளே நுழைந்தால், ஆச்சர்ய உலகம் காத்துக் கொண்டிருக்கிறது" என்கிறார் பிரபல மாடல் கோ ஆர்டினேட்டரான மனோஜ் கிருஷ்ணா. எந்தவொரு வர்த்தக நிறுவனமும் தங்களுக்கான விளம்பர அஸைன்மெண்டை விளம்பர கம்பெனிகளுக்குக் கொடுக்க, அவர்கள் நல்ல மாடல்களுக்காகத் தேடிச் செல்வது இவர் போன்ற மாடல் கோ ஆர்டினேட்டர்களைத்தான். ஆக, நல்ல மாடலாக விரும்பும் எவரும் இதுபோன்ற கோ ஆர்டினேட்டர்களை அணுகி, அவர்களிடம் 'போர்ட்ஃபோலியோ' எனப்படும் புகைப்பட ஆல்பத்தைத் தயார் செய்து கொடுத்து விட்டால் போதும்... அவர்களது வாழ்க்கைச் சக்கரம் அதன் பின்பு எத்திசையிலெல்லாம் சுழலும் என்பதை யாராலும் கணிக்க முடியாது.

"தைரியமாக வளர்ந்த நான், அதே தைரியத்துடன் மாடலிங் ஃபீல்டுக்குள் நுழைந்தேன். இன்று நான் காட்பரீஸ் சாக்லெட்டின் பிராண்ட் அம்பாஸடர். அடுத்ததாக ஃபேன்டா, டாடா டெலிகாம் கம்பெனிகளுக்காகவும் மாடலிங் செய்ய இருக்கிறேன். ஆங்காங்கே நடந்த ஒரு சில சம்பவங்கள் தவிர மாடலிங்கிலும் சரி, சினிமாவிலும் சரி, எனக்கு எவ்வித மோசமான ஒழுக்கக்கேடான அனுபவங்கள் நடந்ததே கிடையாது" என்று கூறியிருக்கிறார் நடிகை த்ரிஷா. ஆனாலும், ஒரு காலத்தில் பெண்கள் அண்ணாந்து பார்த்துக் கொண்டிருந்த மாடலிங் உலகம், கண்ணின் நேர்க்கோட்டிற்கு சமமாக வந்து நின்றிருக்கிறதேயொழிய, இன்னமும் இதற்குள் காலடி எடுத்து வைக்க தயக்கம் ஏற்படுத்துவது, பூச்சாண்டியாய் பயம் காட்டுவது பாலியல் குற்றங்களும், வரம்பு மீறல்களும்தான்.

ஒரு சில வருடங்களுக்கு முன்பு



• குழந்தை மாடல்

மாடலிங் உலகில் பாலியல் பலாத்காரத்தில் பாதிக்கப்பட்ட மேதா அது பற்றி பேசவே மறுக்கிறார். "ப்ளீஸ்... அதை மறக்க நினைக்கிறேன். மீண்டும் அது பற்றிப் பேச விரும்பவில்லை" என்று தயக்கம் காட்டுகிறார். "மாடல் கோ ஆர்டினேட்டரான என்னிடமே போன் பண்ணி 'ஆள் அனுப்பு' என்றிருக்கிறார்கள். ஆனால் இன்றைக்கு இந்நிலைமையெல்லாம் அடியோடு மாறிவிட்டது" என்று மனோஜ் கிருஷ்ணா உத்தரவாதம் தந்தாலும், புதிதாய் மாடலிங் உலகிற்குள் நுழைந்த மானஸாவோ, "மாடலிங் ஃபீல்ட் நாட் பேட். தவறுகள் நடக்கத்தான் செய்கின்றன. நாம் ஸ்ட்ராங்கா இருந்தாத்தான் தைரியமாக உள்ளே நுழைய முடியும்" என்கிறார் படபடவென்று. மிஸ் சவுத் இந்தியா பட்டம் வென்ற ஸ்ரேவ்யாவின் அம்மா கௌரி சுதாகர், "முதலில் பேசும் பொழுது எல்லாமே சரியாக இருக்கும். ஆனால் ஷூட்டிங் ஸ்பாட்டிற்குப் போனபிறகு கவர்ச்சியான உடை உடுத்தச் சொல்லும் சம்பவங்களும் நடக்கின்றன., பணம் சம்பாதிக்க மட்டுமே இத்தொழிலுக்குள் நுழைவதால், பாலிடிக்ஸ் நிறைய உள்ளது. ஒழுக்கமாக இருந்தால் வாய்ப்புகள் வருமா என்கிற சந்தேகம் பலருக்கும் எழத்தான் செய்கிறது" என்று அதிர வைக்கிறார்.

ஆனால் விளம்பர நிறுவனங்களும், இயக்குனர்களும் வேறு மாதிரியான குற்றச்சாட்டுக்களை வீசுகின்றனர்: "மும்பை மாடல்கள் போல் தமிழ்நாட்டு மாடல்களுக்குத் தொழில் பக்தி கிடையாது. தனிப்பட்ட முறையில் துணிச்சலாக நவீன உடை உடுத்தி வலம் வரும் மாடல்கள், விளம்பரங்கள் எடுக்கும் பொழுது ஸ்லீவ்லெஸ் அணிய மறுக்கிறார்கள். ஆண்களோடு சேர்ந்து நடிக்கவும் மறுக்கிறார்கள். உடலை பேணிக் காப்பதில் அக்கறையில்லை" என்று சொல்கின்றனர்.

தன்னை முன்னிலைப்படுத்திக் கொள்ள தனியொரு மனிதனுக்கே விளம்பரம் தேவைப்படுகிற இன்றைய காலகட்டத்தில், அரசு நிறுவனங்களும் தனியாரும் போட்டி போட்டுக் கொண்டு விளம்பர உலகைச் செழிக்க வைக்கின்றனர். கனவுப் பிரதேசத்தில் பண மழையில் நனைந்தபடி வேலை செய்வதுதான் மாடலிங் பணியில் கிடைக்கும் சொகுசு அனுபவம். நிலைக் கண்ணாடி முன் நிற்கும்போது என்னவாக இருக்கிறோமோ, அப்படித்தான் அது நம்மைப் பிரதிபலிக்கும். அது போல்தான் மாடலிங் உலகில் ஒருவரது வாய்ப்புகளும், பாதுகாப்பும்.

- ச.ந.கண்ணன்

அட்டைப் படம் : **சந்தோஷ்**

பிடியுங்க பரிசை!

ராணி சீதை மன்ற வளாகத்தில் உள்ள வி.பி.ஜே. நகைக் கடைக்குள் நாம் நுழைந்தபோது, அங்கே ஏற்கெனவே நடிகை குஷ்பு வந்திருந்தார். சமையல்கலை நிபுணர் ரேவதி ஷண்முகம் இருந்தார். இன்னும் சிறிது நேரம் போனதும், ஜீன்ஸ், டீ-ஷர்ட் அணிந்து வந்த முகம் ரொம்பப் பரிச்சயமானதாக இருந்தது. அட! நடிகை ஸ்ரீபிரியா! ஏற்கெனவே 'ஜில்' என்று ஏஸியில் குளிர்ந்த நகைக் கடை, மேலும் குளிர்ந்து ஐஸ்வர்யம் பெற்றது.

பொன்னகைகளால் டாலடித்துக் கொண்டிருந்த கடைக்குள் நம்மை வரவேற்ற வி.பி.ஜே.வின் உரிமையாளர் ரகுநாத், அவரது மனைவி சியாமளா இருவரிடமும், "நாங்கள் வெயிட் பண்றோம்! வி.ஐ.பி. கஸ்டமர்களை கவனித்து அனுப்பிவிட்டு வாருங்களேன்" என்று சொன்ன போது, "அவங்கள்லாம் எங்க கடையின் ரெகுலர் கஸ்டமர்கள்! அவர்களை கவனிக்க ஸ்பெஷல் ஆட்கள் இருக்கிறார்கள்! இன்று உங்கள் வாசகர்கள்தான் எங்கள் வி.ஐ.பி." என்றனர்.



• பரிசு பெறுகிறார் வாசகர் ஹுமாயூன்...

விசாரித்தபோது, நடிகைகள், நடிகர்கள், டைரக்டர்கள், தொழிலதிபர்கள் என்று 'பிரபலமானவர்களின் விலாசங்கள்' புத்தகத்தில் இடம் பெற்றுள்ள பாதி பேர் வி.பி.ஜே. வாடிக்கையாளர்கள் என்று தெரிய வந்தது.

நாகர்கோவிலைச் சேர்ந்த கல்கி வாசகர் ஏ. முஹமது ஹுமாயூனை, அவர்களுக்கு அறிமுகம் செய்து வைத்தோம். கல்கியில் கலக்கல் காமெடித் தொடரை எழுதப் போவது யார் என்று கண்டு பிடிக்கும் 'கலக்கப் போவது யாரு?' பம்பர் பரிசுப் போட்டியில், வி.பி.ஜே. வழங்கிய ஐம்பதாயிரம் ரூபாய் மதிப்புள்ள தங்க நகை பரிசு பெற்ற ஹுமாயூன், சென்னையில் வசிக்கும் தமது உறவினர் குடும்பத்துடன் கடைக்கு வந்திருந்தார்.

வெள்ளி, தங்கம், வைரம், பிளாட்டினம் என்று கடையின் பல்வேறு பகுதிகளையும் சுற்றிக் காட்டினார்கள் ரகுநாத் - சியாமளா தம்பதியின் மகன்களான ஜிதேந்திராவும், அமரேந்திராவும். பெல்ஜியத்தில் ஜெம்மாலஜியில் சிறப்புப் படிப்பு படித்தவர்கள்.

தங்க நகைகள் பகுதியில், முஹமது ஹுமாயூன் மற்றும் அவரது உறவினர்களிடம் "எங்களுக்கென்று பிரத்யேகமாக பலவிதமான நகைகளை டிசைன் செய்வதற்கென்றே மூன்று நகை டிசைனர்கள் இருக்கிறார்கள். அவர்கள் மூவருமாய்ச் சேர்ந்து நூறு விதமான டிசைன்களை உருவாக்கிக் கொடுத்தால், நாங்கள் அவற்றில் மிகச் சிறந்த

• இந்துமதி





* கலகலக்கும் வி.பி.ஜே. நகைக்கடை...

பத்து, பன்னிரண்டு டிசைன்களை மட்டுமே தேர்ந்தெடுப்போம். அவற்றை மெழுகில் முதலில் வடிவமைத்து, திருப்தியில்லாத ஒன்றிரண்டை ஒதுக்கிவிடுவோம். மீதி டிசைன்கள் தான் நகைகளாக மாறி ஷோரூமுக்கு வரும். அப்படி வந்துள்ள தங்க நகைகள்தான் இங்கே இருப்பவை. உங்களுக்குப் பிடித்த டிசைனில், பரிசுக்குரிய நகைகளை நீங்களே தேர்ந்தெடுங்கள்" என்றார் சியாமளா.

ஹுமாயூன் குடும்பத்தினர் நகை தேர்ந்தெடுப்பில் மூழ்கி முத்துக் குளித்தனர். தேர்ந்தெடுத்த நகைகளை கல்கி ஆசிரியரிடம் கொடுக்க, அதை அவர் வி.பி.ஜே. உரிமையாளர்களிடம் வழங்க, ரகுநாத் - சியாமளா - ஜிதேந்திரா, அமரேந்திரா நான்கு பேரும், பம்பர் தங்க நகைப் பரிசை வாசகர் ஹுமாயூனுக்கு அளிக்க, வேடிக்கை பார்த்த மற்ற வாடிக்கையாளர்கள் உட்பட அனைவரும் கைத்தட்டி மகிழ்ச்சியைத் தெரிவித்தனர்.

பம்பர் பரிசு விழா ஒரு பக்கம் என்றால், இன்னொரு பக்கம் அதே போட்டியில் ஆறுதல் பரிசாக போத்தீஸ் வழங்கிய இரண்டாயிரம் ரூபாய் மதிப்புள்ள பட்டுப் புடைவைகளைப் பரிசு பெற செங்கல்பட்டிலிருந்து பாலசுப்பிரமணியன், பாண்டிச்சேரியிலிருந்து இந்துமதி, மதுரையிலிருந்து திருவள்ளுவன், கிராப்பட்டியிலிருந்து ஷேக் தாவூத் மற்றும் கோவில்பட்டி வேங்கடலட்சுமி சார்பில் அவரது கணவர் ஆகியோருடன், நாகர்கோவில் முஹம்மது ஹுமாயூனும் வந்திருந்தனர். நியூ உட்லண்ட்ஸ் ஓட்டலில் மதிய விருந்துடன் கூடிய பரிசளிப்பு நிகழ்ச்சி. ஆறுதல் பரிசுடன், வாசகர்களுக்குக் கூடுதல் பரிசாக, போட்டி நடத்தப்பட்ட தொடர் கதையினை எழுதி வரும் எழுத்தாளர் அனுராதா ரமணனைச் சந்தித்துப் பேசவும் வாய்ப்புக் கிடைத்தது. உணவு சாப்பிட்டபடியே, அவருடன் கதைகள், கல்கி உள்ளிட்ட பல்வேறு விஷயங்கள் குறித்து ஆர்வமாய் உரையாடினார்கள் வாசகர்கள். முடிவில் வயிறும், மனதும் நிறைய விடைபெற்றனர்.

- எஸ்.சந்திரமௌலி

படங்கள் : ஸ்ரீஹரி

* பால் திருவள்ளுவன்




* ஷேக் தாவூத்



* வேங்கடலட்சுமி கணவர் கேசவன்





* பாலசுப்ரமணியன்

முழிக்கும் கழகங்கள்...

இன்னமும் பதினைந்து மாதங்களுக்குப் பின்னர் வர விருக்கும் தமிழக சட்டமன்றத் தேர்தல் குறித்த பேச்சுக்கள் சூடு பிடிக்கத் துவங்கிவிட்டன. இரண்டு கழகங்களும் சமீ



பத்தில் நடத்திய பொதுக் குழுக் கள்தான் அதற்குக் காரணம்.

கிட்டத்தட்ட ஓராண்டுக்குப் பின் கூட்டப்பட்டது அ.இ. அ.தி.மு.க. பொதுக்குழு. சென்ற பாராளுமன்றத் தேர்தலில் பலத்த அடி வாங்கியும், அ.இ. அ.தி.மு.க. இன்னமும் கட்டுக் கோப்பாக ஜெ. தலைமையில் இருக்கிறது என்றால், அதற்குக் காரணம், அது ஆளும் கட்சி யாக இருப்பதுதான். எதிர் கட்சியாக இருந்து தோல்வி யைச் சந்தித்திருந்தால் அந்தக் கட்சியில் பல 'தலைகள்' தடம் புரண்டிருக்கும். ஆனாலும் பாராளுமன்றத் தேர்தல் தோல்விக்குப் பிறகு அ.இ.அ.தி. மு.க. தொண்டர்களும், பிரமுகர்களும் நம்பிக்கை யிழந்து காணப்படுகிறார்கள் என்பதே உண்மை.

இந்த மனநிலையைத்தான் பொதுக்குழுவில் வெளிப்படுத்தினார் கோ.கலிவரதன். ஆனால் வழக் கறிஞர் ஜோதி, கலிவரதனுக்குப் பதில் சொல்வது போல் ஆரம்பிக்க, ஒட்டுமொத்தக் கூட்டமும் ஜோதியை எதிர்த்து கோஷம் போட்டது. பிரமுகர் களின் மனநிலை எப்படி இருக்கிறது என்பதை உணர்த்தி விட்டது. இருந்த ஒரே கூட்டணிக் கட்சி யான பா.ஜ.கவும் சங்கராச்சார்யார் விவகாரத்தில் கழன்று கொண்டு போன பிறகு, கூட்டணி அரசி யலில் தனிமரமாகிவிட்டார் ஜெ. இந்தச் சூழலில் தொண்டர்களை உற்சாகப்படுத்த, தெம்பேற்ற வேறு வழி தெரியாததால்(?) "பாராளுமன்றத் தேர்தலில் தி.மு.க. அணி, வாக்காளர் பட்டியலில் அதிகாரிகள் ஒத்துழைப்போடு கோல்மால் செய்து வெற்றி பெற் றது" என்று சொல்லி விட்டார். "நாங்கள் ஆளும் கட்சியாக இருக்கிறோம். வாக்காளர் பட்டியல் தயாரிப்பு அனைத்தையும் செய்தது எங்கள் கீழ் இருந்த அரசு அதிகாரிகள்தான். நாங்களே அதி காரிகள் மேல் பழிபோடுவது சரியல்ல தான். என்ன செய்வது? அரசியல் என்று வந்து விட்டால் எதையும் பேச வேண்டியதாக இருக்கிறது" என்று வருத்தப்பட்டார் சீனியர் அ.இ.அ.தி.மு.க. பிரமுகர் ஒருவர்.

'ஒன்றரை வருடம் கழித்து பாராளுமன்றத் தேர் தலுக்கும் தயாராக இருங்கள்' என்றும் ஜெ. சொல்லி யிருக்கிறார். குறிப்பாக மூன்று மாநில தேர்தல் முடிவுகளுக்குப் பிறகு, தேசிய அளவில் அரசியலில் பெரிய மாற்றங்கள் வரும் என்று நினைக்கிறார். திரைப்பட உலகம் தம்மை முழுமையாக ஆதரிக்கத் தயாராக இருந்தாலும், தி.மு.க. கூட்டணியில் உள்ள காங்கிரஸ் அல்லது பா.ம.க. இடம் மாறி வரும் சூழல்தான் தேர்தலுக்கு உகந்தது என்று ஜெ. கருதுகிறார். எனவே "இப்போதைக்கு அடுத்த ஆண்டுதான் தேர்தல்" என்றும் சொல்லி விட்டார். இருந்தும் மாநில பட்ஜெட் தாக்கலுக்குப் பிறகு, அரசியல் சதுரங்கத்தில் அவர் வேகமாக காய்களை நகர்த்தக் கூடும்.

சரி, எதிர்முகாமான தி.மு.க. எப்படியிருக் கிறது? இப்போது அவர்களுக்கு இரண்டு கவலைகள். ஒன்று, இந்தக் கூட்டணியை எந்தச் சேதாரமும்

இல்லாமல், தொகுதிப் பங்கீட்டில் பிரச்னை இல்லாமல் சட்ட மன்றத் தேர்தல் வரை எடுத்துச் செல்ல வேண்டும். மற்றொன்று கட்சியை வாட்டும் கோஷ்டிப் பூசல். அண்மையில் நடந்த தி.மு.க. பொதுக்குழுவில் தஞ்சை மாவட்டப் பிரமுகர் ஒருவர், "அணி அணியாக வந்திருக்கிறோம்"என்று மாவட்டத்தில் நிலவும் கோஷ்டிப் பூசலை மறைமுகமாகச் சொன்னபோது, உஷ்ணமாகிப் போன கலைஞர், "அணிக்குப் பின்னால் உள்ள பிணி என்னவென்று தெரியும்" என்று எரிச்சலுடன் சொன்னது குறிப்பிடத்தக்கது. அது உண்மையும் கூட. தமிழகம் முழுவதும் பல்வேறு மாவட்டங்களில் உள்ளூர்த் தலைவர்களின் எதேச்சாதிகாரம் காரணமாக தி.மு.க.வில் கோஷ்டிப் பூசல் தலைவிரித்தாடுகிறது. போதாததற்கு ஸ்டாலின், அழகிரி மோதல் வேறு ஆங்காங்கே கோஷ்டிகளை உருவாக்கியிருக்கிற இந்த நிலையில், 'மத்தியில் உள்ள கூட்டணி அரசு போன்று மாநிலத்திலும் கூட்டணி அரசு உருவாக வேண்டும்' என்ற ஈ.வி.கே.எஸ். இளங்கோவனின் பேச்சு, கழகத்தினருக்குக் கடுப்பை உண்டாக்கியிருக்கிறது. சொல்லப் போனால், தி.மு.க. கூட்டணி கட்சித் தலைவர்கள் பலர் கூட்டணி அரசு என்ற கருத்தோட்டத்தை உளப்பூர்வமாக ஆதரிக்கிறார்கள். வெளிப்படையாகச் சொல்லத் தயங்குகிறார்கள் என்பதே உண்மை.

ஒரு பக்கம் அ.தி.மு.க. சுதலைத் தட்டும் நிலையிலும், மறுபக்கம்

முறுக்கும் காங்கிரஸ்!



தி.மு.க. தங்களை விட்டுப் போகவே வாய்ப்பில்லை என்ற நிலையிலும், காங்கிரஸ் கொஞ்சம் முறுக்கிக் கொண்டுதான் இருக்கிறது. "வரும் சட்டமன்றத் தேர்தலில் தொகுதி ஒதுக்கீட்டைப் பொறுத்த மட்டில் பாராளுமன்ற தேர்தலில் போட்டியிட்ட இடங்களின் அடிப்படையில் தொகுதிகள் கொடுக்கப்பட வேண்டும் என்று நாங்கள் கருதுகிறோம்"என்றார் மூத்த காங்கிரஸ் தலைவர் ஒருவர். இந்த அடிப்படையில் பார்த்தால், தி.மு.க. அதிகபட்சம் நூறு தொகுதிகளுக்கு மேல் போட்டியிட வாய்ப்புக் கிடைக்காது. 'இதற்கு தி.மு.க. ஒப்புக் கொள்ளவில்லையென்றால் என்ன செய்வீர்கள்?' என்றபோது, "சிதம்பரத்தை முன்னிறுத்தி மூன்றாவது அணி கூட அமைக்கலாம். 'கூட்டணி அரசு' என்பதை முன்னிறுத்தினால், பா.ம.க., ம.தி.மு.க. கூட எங்களை ஆதரிக்குமே" என்கிறார் அந்தத் தலைவர்! சவால்கள் பலவற்றைச் சந்தித்து வெற்றி கண்ட அனுபவசாலியான தி.மு.க. தலைவருக்கு மேலும் பல சவால்கள் காத்திருக்கின்றன!

- ஸ்ரீநி

நாட்டை நேசி, காட்டை நேசி!


எல்லாரும் ஒரு முறை ஜோரா கை தட்டுங்க...!

நோ நோ! சுமிக்கு சாஹித்ய அகாடமி அவார்ட்லாம் வரலை... ஊஹூம், சுமிக்குக் கல்யாணம் கூட இல்லை! பின்னே...?

ஆஃப்கானிஸ்தான் அதிபர் ஹமீத் கர்சாய், பாலிவுட்டுக்கு ஒரு சூப்பர் அறிவுரை சொல்லியிருக்காரு. "இந்தியாவி லேயே அசத்தலான லொகேஷன்லெல்லாம் இருக்கிறபோது, ஏன் அதையெல்லாம் விட்டுட்டு பாலிவுட்காரங்க வெளிநாட்டுக் குப் போகணும்? உன்நாட்டுலயே ஷூட் பண்ணத்தான் அவங்க முயற்சி பண் ணணும்''னு 'ஆஜ் தக்' பேட்டியிலே சொல்லியிருக்கார்! சிம்லாவில் பிறந்து வளர்ந்தவராம் ஹமீத் கர்சாய். "நான் ஒரு இந்தியத் தயாரிப்பு''ன்னு பெருமையா சொல்லிக் கிறார் மனுஷர்.

தஸ்லிமா நஸ்ரீனைத் தான் பாருங்களேன்... இந்தியாவுக்கு வந்து





கொல்கத்தாவில் தங்கியிருக்கணுமாம் அவருக்கு. "அரசியல் ரீதியா அடைக்கலம் கேட்கலை... குடியேற அனுமதி அல்லது, குடியுரிமை கேட்கறேன் இந்திய அரசிடம்''னு என்.டி.டிவிக்கு பேட்டி தந்திருக்கார். "நான் வங்காளி. மேற்கு வங்கத்துல இருக்கிறது தான் எனக்குச் சுகம். வங்காள மொழி பேசறதும் கேட்கறதும் பரமசுகம்''ன்றார்!

ஜோய் கொல்கத்தா!


'இங்கே' படிச்சுட்டு 'அங்க' போய் இன்கம் தேடறவங்க கவனிக்க! இன்னும் இரண்டு விஷயம் இந்த வாரம். பிரிட்டிஷ் வெளியுறவுத் துறைச் செயலர் ஜாக் ஸ்டிரா, நம்ம அம்ரித்ஸர் கோயிலுக்கு வந்து கரசேவை - ஸாரி - சப் பாத்தி ஸேவை (அதுவும் 'கர'ஸேவை தானே) பண்ணியிருக்கார். தலைல துண்டு கட்டிக்கிட்டு டர்பன் சீக்கியர்களோட உட்கார்ந்து, அவர் மரக்குழவி உருட்டற படத்தை பேப்பர்ல பார்த்திருப்பீங்களே...?

நாலாவது ஃபாரினர் ஜான்டி ரோட்ஸ். யெஸ்... தென்னாப்பிரிக்க கிரிக்கெட் அணியின் ஃபீல்டிங் மந்திரவாதி. இவர் ஒரு முக்கியமான வேலையா இந்தியாவுக்கு வந்தார். டெட்ரா பாக்குக்கு தபு பிராண்ட் அம்பாசடர் ஆகியிருக்கற மாதிரி, ஆச்சி மசாலாவுக்கு தேவயானி மாதிரி, ரோட்ஸ் தூக்கிப் பிடிக்கிறது 'சி.சி ஆஃப்ரிக்கா' அப்படிங்கற வனப்பாதுகாப்பு அமைப்பின் கொடியை. தென்னாப்பிரிக்க சரணால யங்களுக்கு டூரிஸ்ட் கூட் டத்தை இழுக்கறது அவர் வேலை. இப்போ சி.சி. ஆஃப்ரிக்கா, இந்தியாவில தாஜ் க்ரூப்போட சேர்ந்து மத்தியப் பிரதேசத்துல உள்ள பாந்தவ்கர் சரணாலயத்தை யும், ராஜஸ்தான் பரத்பூர் பறவைகள் சரணாலயத்தையும் பிரபலப்படுத்த புராஜக்ட் போட்டாச்சு. ஸோ, ஜான்டி ரோட்ஸ் 'ஆஃப்ரிக்க யானை யும் இந்திய யானையும்'னு கம்பாரிடிவ் ஸ்டடி பண்ணால் ஆச்சரிய மில்லே.

"திறந்த ஜீப்ல காட்டுக்குள் போறப்போ ஒரு யானைக் கூட்டத்தை நேருக்கு நேர் பார்த்தா, சோயப் அக்தர் 160 கி.மீ. வேகத்துல போலிங் போடறது ஒன்னுமில்லேன்னு தோணும்''னு சொல்ற ரோட்ஸுக்கு, லைஃப்ல மூணு விஷயங்கள் பேர்ல உசு ராம்: கிரிக்கெட், வனவிலங்குகள், மனைவி! தேன்நிலவுக்கு... கரெக்ட்! வனவிலங்கு சரணாலயத்துக்குத்தான் போனாராம்!

"வேஸ்ட்டு! வீட்டை விடவா வொய்ல்ட் லைஃப் சாங்கவரி?''ன்னு சில பல சம்சாரிங்க பேசிக்கறது ரோட்ஸுக்குக் கேட்காட்டாலும், எனக்கு நல்லாவே கேட்குது!

சுமி



காவல் துறையிடமிருந்து காப்பாற்றுங்கள்!

குற்றம் எதுவுமே நிரூபணம் ஆகவில்லை என்ற போதிலும், அப்பு, ரவிசுப்ரமண்யம் போன்றோருடன் காஞ்சி பீடாதிபதிக்கு இருந்த தொடர்பு யாராலும் மறுக்கப்படவில்லை. இந்த நபர்களின் பின்னணியும் கேள்விக்குரியதாகவே இருந்து வந்திருக்கிறது - இதுவும் மறுக்கப்பட வில்லை.

சீசரின் மனைவி சந்தேகத்துக்கப்பாற்பட்டவராக இருக்க வேண்டும் என்பதைப் போல், 'இத்தகைய நபர்களுடன் காஞ்சி மடத்தினர் தொடர்பு வைத்துக்கொள்ளாமலே இருந்திருக்கலாமே; அரசியலில் ஆர்வம் காட்டாமல் இருந்திருக்கலாமே; துறவு என்று மேற்கொண்ட பிறகு உறவினர்களை அண்ட விடாமல் இருந்திருக்கலாமே' என்று பல அன்பர்கள் ஆதங்கப்படுகின்றனர்.

எனினும், சந்தேகத்தின் அடிப்படையில் மட்டுமே சட்டம் செயல் படாது. தகுந்த, அசைக்க முடியாத ஆதாரங்களின் அடிப்படையில்தான் நீதி வழங்க முடியும். காவல் துறையின் பொறுப்பும் சாமர்த்தியமும், சட்டம் ஏற்கும் வகையிலான ஆதாரங்களைத் தேடிச் சமர்ப்பிப்பதில் தான் இருக்கிறது.

ஆனால், சங்கரராமன் கொலை வழக்கில், இதுவரை வெளி யாகியுள்ள நீதிமன்றத் தீர்ப்புகளும், ஆணைகளும், காவல் துறைக் குப் பெருமை சேர்ப்பனவாக இல்லை.

ஜயேந்திரருக்கு ஜாமீன் வழங்கிய உச்சநீதிமன்றம், காவல்துறை சமர்ப்பித்த ஆதாரங்கள் வலுவாக இல்லை என்று கடுமையாக இடித்துரைத்திருக்கிறது.




கல்கி



2005 பிப்ரவரி 27
தாரண மாசி 15
மலர் : 63
இதழ் : 31

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.




விஜயேந்திரருக்கு ஜாமீன் அளித்த சென்னை உயர்நீதி மன்றமும், காவல்துறை சமர்ப்பித்த ஆதாரங்கள் வலுவானதாக இல்லை எனக் கருதி ஏற்க மறுத்துவிட்டது. 'ஜாமீன் தரப்பட்டால், வழக்கின் போக்கைத் தமக்குச் சாதகமாக்கிக் கொள்ளும் வகையில் விஜயேந்திரர் செயல்படுவார்' என போலீஸ் கூறியதையும் ஏற்கவில்லை. 'அவ்வாறு நடப்பதற்கான சாத்தியக்கூறுகள் மிகக் குறைவே; ஆதலால் விஜயேந்திரருக்கு ஜாமீன் மறுக்கப்படலாகாது' என்றும் அந்நீதிமன்றம் கூறியிருக்கிறது.

'சங்கர மடத்தின் வங்கிக் கணக்குகளை அரசு முடக்கியது தவறு' என்று உயர்நீதிமன்றம் கூறியதுடன், சிறப்புப் புலனாய்வுக் குழுவைக் கடுமையாக எச்சரித்தும் உள்ளது. 'நீங்கள் திசை மாறிப்போனால், உங்கள் பேரில் சந்தேகத்தின் கருநிழல் படரும்' என்று இடித் துரைத்திருக்கிறது.

'மடம் வேறு; மடாதிபதி வேறு. மடாதிபதியின் பேரில் குற்றச்சாட்டு இருப்பதாலேயே மடத்தின் நற்பணிகள் நின்றுபோய்விடக் கூடாது' என்று நீதிமன்றம் கூறியிருப்பது மிக முக்கியமாக கவனிக்கப்பட வேண்டிய விஷயம்.

தமிழக காவல்துறையின் செயல்பாடுகள், மடத்தையும் அதன் பக்தர்களையும் மிகத் தீவிரமாக அவமானப்படுத்தும் வகையில் அமைந்து வந்துள்ளன. விசாரணைக்கு முழுமையாக ஒத்துழைத்து வந்த விஜயேந்திரர் கைது செய்யப்பட்ட விதமும் சரி, ஜயேந்திரரிடம் நடத்திய ரகசிய விசாரணை ஒளிப்பதிவுகள் மீடியாவுக்குக் கசியவிடப்பட்ட செயலும் சரி, குற்றப் பத்திரிகையை வரதராஜப் பெருமாள் கோயிலில் வைத்து வழிபட்டு அவரையே சாட்சி என்று அழைத்ததும் சரி, குற்றப் பத்திரிகை நகலை வழங்க ஜயேந்திரர் - விஜயேந்திரரை நீதிமன்றத் துக்கு வரவழைத்து விட்டு, அதனை வழங்காமலே அவர்களைத் திருப்பி அனுப்பியதும் சரி... தமிழக காவல் துறையினரின் கண்ணியத்துக்கும் நற்பெயருக்கும் இழுக்கு ஏற்படுத்தும் சம்பவங்கள்.

மிக மிக முக்கியமான ஒரு வழக்கில், அதுவும் மக்களின் உணர்வுபூர்வமான ஆதரவைப் பெற்ற பெரியவர்கள் பேரில் குற்றம் சாட்டும் வழக்கில், காவல்துறை மிக வலுவான ஆதாரங்களை வைத்துக்கொண்டு செயல்பட வேண்டாமா? தாமதங்களுக்கும், அதன்



விளைவான வதந்திகளுக்கும் இடங்கொடாமல் வழக்கை நடத்தி முடித்துக்காட்ட வேண்டாமா? மக்களின் உணர்வுகளை மதித்து, குற்றம் சாட்டப்பட்டவர்களை மிக கௌரவமாக நடத்தி பண்பு காக்க வேண்டாமா?

"இந்த வழக்கு மனவருத்தத்துடன் தொடரப்படுகிறது. சட்டம் தன் கடமையை ஆற்றும்" என ஆரம்பம் முதலே கூறிவரும் தமிழக முதல்வர்தான், உள்துறை பொறுப்பையும் வகிக்கிறார்.

இவ்வழக்கில் காவல்துறை இதுவரை சந்தித்த பின்னடைவுகள் குறித்து, முதல்வர் எந்தவொரு கருத்தோ அறிக்கையோ வெளியிடவில்லை. ஆனால், காவல்துறையின் அத்து மீறல்களையும், சின்னத்தனங்களையும் நியாயப்படுத்தி மட்டும் பேசி வருகிறார்!

கடந்த சில ஆண்டுகளில் காவல்துறை என்பது, ஆளுங்கட்சியின் தனிப்பட்ட படையாகச் செயல்பட்டு வருவது கண்கூடு. அரசியல் விருப்பு - வெறுப்புகள், தனி நபர் விருப்பு - வெறுப்புகள் அனைத்துக்கும் ஏற்ப காவல்துறை சமரசங்கள் செய்துகொண்டு செயல்பட நிர்ப்பந்திக்கப்படுகிறது. அப்படையின் நடுநிலைமை சிதைவுறுகிறது. காவல் துறை அதி காரிகளின் ஆதிக்க உணர்வும், வெறித்தனமும் மேலோங்குகின்றன.

தமிழகத்தில் மட்டுமல்ல... இந்தியாவெங்கும் இதே நிலைதான் என்பது தமிழனுக்கு ஆறுதல் அளித்துவிடாது.

தமிழக காவல் துறை, என்கவுன்டரில் வேண்டுமானால் 'சாதித்து'க் காட்டியிருக்கலாம். ஆனால் சட்டம் - ஒழுங்கைப் பாதுகாப்பதிலும், சிக்கலான சூழல்களைக் கையாள்வதிலும் படுதோல்வியையே சந்தித்து வந்திருக்கிறது. நாளொரு கொலையும் பொழுதொரு கொள்ளையும் நடந்து வருகின்றன.

இப்போது சங்கரராமன் கொலை வழக்கில், தும்பை விட்டுவிட்டு வாலைத் துரத்தும் விதமாக, குருமூர்த்தி பேரில் வழக்கு; சோ, சொந்தாலியாவிடம் விசாரணை என்று மேலும் சொதப்பல்கள் தொடர, அரசுக்கு வேண்டாதவர்களெல்லாம், காவல்துறைக்கும் வேண்டாதவர்களாகி வருகிறார்கள்.

இப்படியே போனால், 'காவல் துறையிடமிருந்து நம்மைக் காப்பாற்றிக்கொள்ள என்ன செய்யலாம்?' என்று ஒவ்வொரு தமிழனும் தீவிரமாக யோசிக்க வேண்டியிருக்கும்! ○

ஆசிரியர் பக்கம்

தாழ்ந்து, தாழ்ந்து பாதாளத்துக்கு...

“வொய் நாட்?” என்று கேட்கிறார் தகவல் - ஒலிபரப்புத் துறை அமைச்சர் ஜெய்பால் ரெட்டி. “ ‘ஏ’ படங்களைத் திரையிட தொலைக் காட்சிகளுக்கு ஏன் அனுமதி வழங்கக் கூடாது? அதற்கான ஏற்பாடுகளை மத்திய அரசு செய்து வருகிறது. பின்னிரவு நேரங்களில் இப்படங்களைத் திரையிட அனுமதி தரப்படும். சானல்கள் பொறுப்போடு இந்த உரிமையைக் கையாள வேண்டும்” என்றும் தெரிவித்திருக்கிறார்!

செய்தித்தாள்களையும் சானல்களையும் சென்ஸார் செய்வது சாத்தியமில்லைதான். ஆனால், ‘ஏ’ படங்கள் என்பவை வயது வந்தவர்களுக்கான பிரச்னைகளைச் சித்திரிப்பதற்குப் பதில், வக்கிரங்களைச் சித்திரிப்பனவாக இருப்பது இன்றைய பிரச்னை.

இன்று செய்தித்தாளைப் பிரித்தாலே வக்கிரமான ‘ஏ’ படம் பார்ப்பது போல்தான் இருக்கிறது:

• ‘செக்ஸ்’ டாக்டர் பிரகாஷ் வழக்கில் சாட்சி விசாரணை • மனைவியுடன் பழகிய வாலிபரைக் கொன்றவருக்கு ஆயுள் தண்டனை • ‘செக்ஸ்’ சாமியார் சதுர்வேதிக்கு ஜாமீன் • சாமியார்களின் நிர்வாண ‘சிடி’ விவகாரம் • நிர்வாணமாக போஸ் கொடுக்கத் தயாராகும் பிரபலங்கள் • செல்போனில் பெண்களிடம் ‘செக்ஸ்’ தொல்லை • இளம் பெண்கள் மீது நாயை ஏவி கடிக்க விட்ட சினிமா அதிபர் • மாமனார் கண் எதிரே... கொடுமை; இளம் பெண் தற்கொலை! • சவாரி வந்த பெண்ணைக் கற்பழிக்க முயற்சி - ரிக்ஷாக்காரர் கைது • சிறுவனிடம் தவறாக நடந்த பாதிரிக்கு ஜெயில்


• ஜெய்ப்பால் ரெட்டி

- இத்தனையும் பிப்ரவரி 17 அன்று வெளியான ஒரு முன்னணி செய்தித்தாளில் இடம் பெற்ற தலைப்புகள்!

சமுதாய விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காக, இத்தகைய தலைப்புகளில் செய்திகள் வெளியாகின்றன என வாதிடலாம். அவ்வாறாயின் விழிப்புணர்வு பெருகப் பெருக, இத்தகைய செய்திகள் குறைய வேண்டும் அல்லவா...? ஆனால் அவை குறைவதற்குப் பதில் அதிகமாகிக்கொண்டுதான் வருகின்றன.

செய்திகள் வெளியிடப்படும் தொனியில் எச்சரிக்கையைக் காட்டிலும் வக்கிர இச்சைத் தூண்டுதல் அதிகமாக இருப்பது, சமுதாய வீழ்ச்சிக்குக் காரணமாகி விடுகிறது.

‘தமிழ் சினிமாப் பாடல்களில் காமம் அதிகமாக இருப்பது வருத்தம் அளிக்கிறதே?’ என்று தராசுக்குக் கேள்வி அனுப்பியுள்ளார், மேலையூர் டி.சுப்ரமணியன்.

காமத்தின் கேடே அதுதான்... சென்ற முறையைக் காட்டிலும் அதிக ஆபாசமாக வழங்கினால்தான் எடுபடும். அப்படியே தாழ்ந்து தாழ்ந்து, பாதாளத்துக்குப் போகின்றன பாடல்கள்.

செய்தித்தாள்கள், பத்திரிகைகள் வெளியிடும் செய்திகள், படங்களும் இதே கதியைத்தான் சந்திக்கின்றன.

அரிதாக ஓரிடத்தில் நடக்கும் வக்கிரம் முரசறையப்படுகிறபோது, ஆரம்பத்தில் அதிர்ச்சி தரும். போகப் போக மெல்லுணர்வுகள் நசிந்துபோய், அதனினும் வக்கிரமான செய்தியை எதிர்பார்க்க வைக்கும்.

இன்று தொலைக்காட்சியில் ‘ஏ’ படங்களை அனுமதித்தால், நாளை எக்ஸ் ரேட்டட் நீலப்படங்களையும் அனுமதிக்க வழிபிறக்கும்.

அப்புறம்...? பிப்ரவரி 17 செய்தித்தாளில் இடம்பெற்ற பத்து தலைப்புகள், பத்து மடங்காகப் பெருகினால் ஆச்சர்யமில்லை. ○

ஜி



மாணவர்கள் ஒன்றிணைந்து அரசியலைத் தீர்மானிக்க வேண்டும் என்ற கருத்தை, தமிழ் சினிமாவில் முன்மொழிந்தவர் மணிரத்னம். அதையே கையிலெடுத்துக் கொண்டிருக்கிறார் லிங்குசாமி. யதார்த்தத்தின் விரல்களை இறுகப் பற்றிக் கொண்டு இறுதிவரை நடைபோட வேண்டும் என்ற அவரது பகீரத முயற்சி, பின்பாதியில் அஜித் ரசிகர்களை மட்டும் திருப்திப்படுத்தும் சுய பழிவாங்கலாக ஸ்தம்பித்துவிடுகிறது.

அரசுக் கல்லூரியில் இறுதியாண்டு பயிலும் மாணவர் வாசுவை (அஜித்), மாணவர் பேரவைத் தேர்தலில் நிறுத்துகிறார்கள் அவரது சகாக்கள். ஆனால் தேர்தலில் யார் நிற்க வேண்டும் என்பதை முடிவு செய்கிறார், உள்ளூர் அரசியல்வாதியான வரதராஜன் (சரண்ராஜ்). வெற்றியை விட்டுக் கொடுத்து விட்டு ஒதுங்கிப் போகும் வாசுவையும், அவரது நண்பர்களையும் குண்டர்களை விட்டுத் தாக்க, கொதித்தெழுந்து, வரதராஜனுக்கு எதிராக அரசியல் களம் காண்கிறார் வாசு. அதில் அவருக்கு வெற்றி கிடைத்ததா என்கிற ரீதியில் நகரும் திரைக்கதை. அதில் விறுவிறுப்புக்கு எந்தப் பஞ்சமும் இல்லை. ஆனால் மாணவர்கள் அரசியலுக்கு வந்தால் இழப்புக்களே அதிகம் என்பது போன்ற எதிர்மறையான தொனி பிதுங்கிக் கொண்டு தெரிவதால், இயக்குனர் தரும் மெசேஜ், படத்துக்குள் எங்கோ பதுங்கி விடுகிறது.

முதல் பாதிப் படத்தில் நம்மை கும்பகோணத்துக்கே அழைத்துப் போய் விடுகிறார் இயக்குனர். காட்சிகளில் அப்படியொரு தஞ்சை நேட்டிவிட்டி. திடீர் மழைக்கு நண்பர்கள் சகிதம் த்ரிஷா வீட்டின் தாழ்வாரத்தில் ஒதுங்கும் அஜித்தை, அக்காவைப் பெண் பார்க்க வந்திருக்கும் மாப்பிள்ளை என்று தவறாகப் புரிந்துகொள்வது, த்ரிஷாவின் மிதிவண்டியை தலைகீழாகத் தொங்கவிட்டிருக்கும் சைக்கிள் கடை மணிவண்ணனை ஒருவழி பண்ணுவது என்று, அஜித்-த்ரிஷா காதல் காட்சிகள் மென்மையான புதுக் கவிதைகள்.

இதுவரை பார்க்காத ஃப்ரெஷ்ஷான அஜித். "அவங்க அவங்களுக்கு அவங்க அவங்க வாழ்க்கை முக்கியம். நான்தான் அதிகம் எதிர்பார்த்துட்டேன்" எனக் குறைவாக வசனம் பேசி, அதிகமாக நடித்திருக்கிறார். ஓடும் ரயிலில் சண்டைக் காட்சியில் ரயிலைப் போலவே எக்ஸ்பிரஸ் வேகம். காட்சியின் தன்மைக்கு ஏற்ப கோணங்களால் கதையை தூக்கிப் பிடிக்க முயற்சித்திருக்கிறார் ஒளிப்பதிவாளர் ஆர்தர் வில்சன். துடிப்பான இசையை வழங்கியிருக்கும் வித்யாசாகர், உயரமாகத் தெரிவது பின்னணி இசையில். பாதி வழியில் பாதை மாறினாலும், இன்றைய முதல் தேவையான அரசியல் விழிப்புணர்வை அள்ளித் தராவிட்டாலும் சொல்லித் தருகிறது ஜி.

● அபவ் ஆவரெஜ் - **விஷுவல்தாசன்**

சங்கீதாவின்

மீனாசுந்தர்

தொழிலதிபர் ரத்தினவேலு முன் கைகட்டி பவ்யமாக நின்றிருந்தான் முரடன் மாரிமுத்து. பணத்திற்காக எதையும் செய்பவன்.

"என் மகள் சங்கீதாவுக்கு கல்யாணம் நிச்சயமாயிடுச்சு மாரி. அடுத்த வாரம் கல்யாணம். இந்தச் சூழ்நிலைல யாரோ அவளோட காதலனாம். அடிக்கடி என் மகளைச் சந்திச்சுப் பேசறான். இன்னிக்குக் கூட போன்ல ஏதோ பேசிக்கிட்டாங்க. நான் வர்றதைப் பார்த்துட்டு அவசரமா பேச்சை முடிச்சிட்டு போனை வச்சிட்டா. ஆனா 'இன்னிக்கு சாயங்காலம் ஏழு மணிக்கு பீச்சில் சந்திப்போம்'கிற வார்த்தை மட்டும் கடைசியா காதுல விழுந்தது. அதனால இன்னிக்கு நீ பீச்சுக்குப் போறே... அவனை ஒரு வழி பண்றே. இந்தா பணம்... வேலையை முடிச்சிட்டு வா, இன்னும் தரேன். என்னோட பெண் சங்கீதாவை உனக்கு நல்லாத் தெரியும்தானே?"

"நல்லாத் தெரியும்யா... போய் வேலையை முடிச்சிட்டு வரேங்கய்யா."

புறப்பட்டான் மாரி.

மாலை கடற்கரையில் தயாராய் நின்றிருந்தான் மாரி. தூரத்தில் யாரோ ஒருவனுடன் சங்கீதா பேசிக் கொண்டிருந்தாள். இடுப்பை தொட்டுப் பார்த்துக் கொண்டான்... கத்தி பத்திரமாக இருந்தது.

கொஞ்ச நேரத்தில் சங்கீதா புறப்பட்டுச் செல்ல, அவனுடன் பேசிக் கொண்டிருந்தவன் முன்பு போய் நின்றான் மாரி.

"ஏய்... சங்கீதாகிட்ட உனக்கென்னடா பேச்சு. என்னா, லவ் பண்றியா?"

"லவ்வா...? கல்யாணமே பண்ணிக்கப் போறேன்!" என்றான் அவன் அலட்சியமாக, தனக்கு வரப்போகும் ஆபத்தை அறியாமல்.

"கல்யாணமா கேக்குது உனக்கு... கருமாதிதாண்டா..." - கறுவிய மாரி, கண்ணிமைக்கும் நேரத்தில் அவன் வயிற்றில் கத்தியைப் பாய்ச்சிவிட்டு திரும்பிப் பாராமல் நடந்தான்.

அதே சமயம் -

சங்கீதாவின் காதலன் அரவிந்தன், தொழிலதிபர் ரத்தினவேலு வீட்டுக்கு வந்து, அவரைச் சந்தித்து தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டான்.

"ஓ... நீதானா அவன்... என்ன தைரியம் இருந்தா வீட்டுக்கே வருவே?" என்றார் கோபமாக.

"சார்... உணர்ச்சிவசப்படாம சொல்றதைக் கொஞ்சம் கேளுங்க சார். நானும் உங்க மகளும் உயிருக்குயிராத்தான் காதலிக்கிறோம். ஆனா... இந்தக் காலத்துல காசு பணம் இல்லாம வெறும் காதலை வச்சுக்கிட்டு காலம் தள்ள முடியாது. எனக்கோ வேலையில்லை. உங்க மகளோ செல்வாக்கா வளர்ந்தவங்க. என்கிட்ட வந்து கஷ்டப்பட வேணாம். நான் ஒதுங்கிக்கிறேன். வேலை தேடி மும்பைக்குப் போறேன். என் மாமா வரச் சொல்லியிருக்கிறார். இதைச் சொல்லிட்டுப் போகலாம்னுதான் வந்தேன் சார்..." சொல்லிவிட்டுப் புறப்பட்டான் அரவிந்தன்.

"இரு... இன்னிக்கு நீங்க ரெண்டு பேரும் பீச்ல சந்திக்கிறதா இல்லே...?" என்றார் ரத்தினவேலு படபடப்புடன்.

"ஆமாம் சார், சங்கீதாதான் கூப்பிட்டிருந்தாங்க.

ஆனா நான் போகலை. நாங்க உண்மையிலேயே நேசிச்சோம். இப்ப போய், 'என்னை மறந்துடு. அப்பா பார்த்த மாப்பிள்ளையைக் கல்யாணம் பண்ணிக்க'ன்னு அவங்க கிட்ட நேருக்கு நேர் சொல்ல, எனக்குத் தைரியமில்லை சார். அதனால்தான் உங்ககிட்ட சொல்லிட்டுப் போகலாமேன்னு பீச்சுக்குப் போகாம நேரா இங்கே வந்தேன்'' என்று சொல்லிவிட்டு விடைபெற்றான் அரவிந்தன்.

அவன் சென்ற அதே நேரம் -

மாரியிடமிருந்து போன்.

"அய்யா... நீங்க சொன்னபடி முடிச்சிட்டேன்யா..."

"முடிச்சிட்டியா...?! இப்போதானே சங்கீதாவோட காதலன் இங்கே வந்துட்டுப் போறான். நீ யாரை முடிச்ச...?" - கத்தினார் ரத்தினவேலு.

"பீச்ல நம்ம சங்கீதா கூட நின்னு ஒருத்தன் பேசிக்கிட்டிருந்தான். கொஞ்ச நேரத்துல



காதலன்!

சின்னம்மா புறப்பட்டுப் போனதும், அவனை மடக்கி வயித்துல மூணு சொருவுதான்... சாஞ்சிட்டான்..." - மாரி பேசிக்கொண்டே போக, சங்கீதா வீட்டுக்குள் நுழைந்ததால் செல்லை ஆஃப் செய்தார் ரத்தினவேலு.

நேரே அவரிடம் வந்தவள், "சாயங்காலம் என்னோட சினேகிதி ஒருத்தியைச் சந்திக்க கடற்கரைக்குப் போயிருந்தேன். அங்க உங்க வருங்கால மாப்பிள்ளையைப் பார்த்தேன். எங்கிட்ட பேசிட்டுப் போனார்'' என்று கூறிக் கொண்டே போக, மயங்கிச் சரிந்தார் ரத்தினவேலு.

"காதல் நிரந்தரமல்ல!"

வாணி கணபதி... முன்னணி பரதநாட்டியத் தாரகை. பிஸியான இன்டீரியர் டெகரேட்டர். பெங்களூரின் ஆங்கில தினசரிகளில் தவறாமல் இடம் பிடிக்கும் பிரபல புள்ளி! அழகு ஸ்பெஷலுக்காக அவரைச் சந்தித்தபோது...

டிஸம்பர் கச்சேரியில் சென்னையில் ஏன் ஆடவில்லை?

"சென்னையில் ஆடுவது கௌரவமான விஷயமே. ஆனால் அங்கே சரியான, திருப்தியளிக்கும் பேமென்ட் கிடையாது. நான் என் கையை விட்டு பக்கவாத்தியக்காரர்களுக்குக் கொடுக்கும்படியாகிவிடுகிறது. பெங்களூரில் நிறைய கார்பரேட் விழாக்களில் ஆடுகிறேன். எனக்கென்று சில விதிமுறைகள், கொள்கைகள் வைத்திருக்கிறேன். டான்ஸ் என்பது எனக்கு எல்லாமே. வருமானமும் இதன் மூலம்தான். என்னை நானே தானே பாத்துக்கணும். ஹஸ்பெண்டா இருக்கிறார்?"

இன்டீரியர் டெகரேஷனில் தூள் கிளப்புகிறீர்களே... அதற்கென பிரத்யேகமாகப் படித்தீர்களா?

"இல்லவே இல்லை. சின்ன வயதிலிருந்தே வீட்டை நன்றாக பளிச்சென்று வைத்துக்கொள்வது எனக்குப் பிடிக்கும். என் வீட்டைப் பார்த்து நண்பர்கள் கேட்க, அவர்களுக்கு செய்யப் போக இப்போது அலுவலகங்கள், வீடுகள் என நான் படு பிஸி. ஒரு வீட்டையோ, அலுவலகத்தையோ அழகுபடுத்துவது என்பது எளிதல்ல. மாதக் கணக்கில் வேலையிருக்கும். பெயிண்டிங், எலக்ட்ரிகல், ஃபர்னிஷிங்... எனப் பல துறைகள் இருக்கின்றன. அழகுபடுத்திப் பார்ப்பதில் அப்படி ஒரு சந்தோஷம்!"

'லக்மேயின் சிறந்த சருமம்' விருது பெற்றது குறித்து...?

"எனக்கே சர்ப்ரைஸ்தான்! திடீரென போன். சரி, அழகிகளுக்கு விருது வழங்கக் கூப்பிடுகிறார்கள் என்று பார்த்தால், 'விருதே உங்களுக்குத்தான்' என்றனர். பிரபஞ்ச அழகி, உலக அழகிகளான தனுஸ்ரீ, சயாலி பகத் வந்து கொடுத்தனர்."

நீங்கள் ஏன் சினிமாவில் நடிக்கவில்லை?

"எனக்கு சினிமா உலகில் ஏகப்பட்ட நண்பர்கள். 'உனக்கெதற்கு சினிமா. உனக்கேற்ற ஒரு துறையில் இருக்கிறாய். பெயர், புகழ் இருக்கிறது. சினிமா வேண்டாம்' என அட்வைஸ் செய்தார்கள். எனக்கும் சரியென்றுபட்டது."

தனிமையான வாழ்க்கை போரடிக்கவில்லையா?

"முதலில் கஷ்டமாகத்தான் இருந்தது. திருமணம் ஆகி ஜாயின்ட் ஃபேமிலியில் இருந்தேன். எப்போதும் ஜேஜேவென்று இருக்கும். விவாகரத்தான பிறகு, இங்கு வந்து சில காலம் சிரமப்பட்டது உண்மை. ஆனால் இப்போது அப்படியல்ல... தனிமை என்று எதுவும் இல்லை. ஒரு நாள் என்னிடமிருந்து போன் வரவில்லையென்றால், என் நண்பர்கள் மாற்றி மாற்றி போன் செய்து 'ஏன் இன்னிக்குப் பேசலை? நாங்க அங்க வரலாமா? இல்ல நீ இப்பவே வா' என்று கருத்தாக இருக்கிறார்கள். டைவர்ஸ் ஆன பிறகும் கூட இன்று வரை மணி, சுகாசினி, சாருஹாசன், அவர் மனைவி, சுபாஷிணி... என ஏகப்பட்ட பேர் என்னிடம் அன்பாக இருக்கிறார்கள். அதில் மாற்றமே இல்லை. நாங்கள் இன்னமும் 'டச்சில்' இருக்கிறோம். ஒரு ஆண், பெண்கள் புடை சூழ உட்கார்ந்தாலும், உள்ளுக்குள்

- வாணி கணபதி



வெறுமையாக தனியாக இருப்பான். பெண் என்பவள் ஸ்ட்ராங்! அவள் பிஸியாக தன்னை வைத்துக் கொண்டால் தனிமை ஏது?"

சினிமா நட்சத்திரத்தை மணம் செய்து கொள்ள விரும்பும் பெண்களுக்கு உங்கள் அட்வைஸ்?

"தாராளமாகச் செய்யலாம். ஆனால் இந்த நட்சத்திர ஸ்டேட்டஸ், பந்தா, ஆடம்பரம் எல்லாம் வீட்டிற்கு வெளியே இருக்க வேண்டும். வீட்டிற்குள் நுழைந்தவுடன் நார்மலாகிவிட வேண்டும். இப்ப மணி - சுஹாசினி நட்சத்திர தம்பதிகள்தான். ஆனா இன்னிக்கும் சுஹாசினி தன் பிள்ளைக்கு ஹோம்வொர்க் செய்து, கிச்சனில் நுழைந்து சமையல் பார்த்து, கணவருக்குப் பரிமாறி நார்மலாக வேலை செய்கிறார். அதேபோல, மணி எத்தனை பெரிய டைரக்டர். பந்தா என்பதே கிடையாது. கால்ஃப், டென்னிஸ்... என விளையாடுவார். வீட்டிற்கு வெளியே தான் பெரிய இயக்குநர். மற்றபடி வெரி சிம்பிள்!"

மறுமணம் பற்றி யோசித்ததுண்டா?

"முதலில் திருமணம் என்பதே தேவைதானா என்று எனக்குத் தோன்றுகிறது. துரத்தித் துரத்திக் காதலித்து திருமணம் செய்தாலும், பலருக்கு அது முறிந்து விடுகிறதே! காதல் என்பது நிரந்தரமானதல்ல. அது இடம் மாறிக் கொண்டேயிருக்கிறது என்பது என் கருத்து! இளமையில் வரும் காதலை விட, வயது முதிர்ந்த பக்குவமடைந்தவர்களின் நட்பு, காதல் இன்னமும் ஸ்திரமானதோ என நினைக்கிறேன்."

- பெங்களூரிலிருந்து **லதா சேகர்**



• அமீஷா



சின்னான் செய்திகள்

பிப்ரவரி 15, சென்னையில் 'நவராத்திரி கொலு கண்காட்சி' சிறப்பாக நடந்தேறியது. அட அதாம்பா... அ.தி.மு.க. பொம்மைக் குழு... ச்சீ... பொதுக்குழு கூடியதைத்தான் சொல்றேன். எல்லா பொம்மைகளும் தலையைக் கூட ஆட்டாம 'கம்'முனு நின்னுச்சுங்க. அம்மா வந்து (தி.மு.க.வுக்கு) பூசை பண்ணிட்டுப் போனாங்க. மதியம் கொடுக்கப்பட்ட சுண்டல் (அதான் விருந்து) மட்டும் செம தூள்! செயற்குழுவுல (அப்படி ஒண்ணு செயல்படுதா?) அம்மா, 'மின்னணு இயந்திரத்தை ஒழிக்கணும்'னு குரல் கொடுத்திருக்காங்க. காரணம், தேர்தல்ல 'கண்ணியம்' கெட்டுப்போயிடுதாம்! அதனால ஓட்டுச் சீட்டு முறையையே கொண்டு வரணுமாம். ஆமா... அதுல மட்டும் 'கண்ணியம்' வாழுதோ? பழைய மாதிரி யானையை வைச்சு மாலை போடச் சொல்லி பிரதிநிதிகளை தேர்ந்தெடுக்கலாமா! ம்ஹூம்... இப்ப யானையெல்லாம் அ.தி.மு.க. சப்போர்ட்னு பிரச்னை வரும்... வேண்டாம்பா!

சானியாகிட்ட டென்னிஸ் பேட் இல்லாட்டி, சச்சின்கிட்ட கிரிக்கெட் பேட் இல்லாட்டி எப்படி இருக்குமோ, அப்படித்தான் நம்ம ஒலிம்பிக் மெடலிஸ்ட் ரத்தோர், துப்பாக்கி இல்லாம துவண்டு போயிருக்காரு. காமன்வெல்த் போட்டியில கலந்துக்க, அவர் புதுசா ஆர்டர் பண்ணின துப்பாக்கி இன்னும் வந்து சேரலையாம். என்னத்தச் சொல்ல... நாட்டுல எவனெவனோ லைசென்ஸே இல்லாம துப்பாக்கியோட அலையறான். ஆனா ஒலிம்பிக்ல இந்தியாவுக்கு 'லைசென்ஸ்' வாங்கிக் கொடுத்தவரோட நிலைமை?

காங்கிரஸ் கட்சிக்கு சினிமான்னா என்னன்னே தெரியாது. நக்மாவா யாரது... சினிமா நடிகையா... எப்ப நடிச்சாங்க, 1940லயாங்கற ரேஞ்சில 'ஜகா' வாங்கியிருக்கு காங்கிரஸ். நக்மாவுக்கும் தாவூத் இப்ராஹிம் கேஸ்ல தொடர்பு இருக்குன்னு தெரிஞ்ச உடனே, காங்கிரஸ் அடிச்ச சூப்பர் 'பல்டி' இது. டியர் நக்மா, (அய்யய்யோ வம்பே வேண்டாம்) நக்மா... நீங்க இப்ப பி.ஜே.பி.கிட்ட போனாலும் அவங்களும் பதறுவாங்க. ஸோ... ஒரே வழி லல்லுகிட்ட சரணடைஞ்சிருங்க. 'எதையும்' தாங்கும் 'எதையும்' கொண்டவரு அவருதான். ஆங்... ஒன் மோர் அறிவிப்பு... அமீஷா படேல் அவங்க 'அம்மா-அப்பா'கிட்ட இருந்து டைவர்ஸ் வாங்கிக்கிட்டாங்களாம். ஸோ... அமீஷாவுக்கு 'ஆதரவுக்கரம் நீட்ட' சின்னான் எவர் ரெடி! ○

அனுபவம் அழகு!

சென்னை நகரை தூய்மைப்படுத்தி, அழகுபடுத்தும் பணியை ஏற்றிருக்கும் பிரெஞ்சு நிறுவனம் ஓனிக்ஸ். அதன் இரண்டாயிரம் பணியாளர்கள் சென்னையின் மூன்று மண்டலப் பகுதிகளில் துப்புரவுப் பணி செய்கிறார்கள். குப்பை அள்ளியபோது தங்களுக்கு ஏற்பட்ட மறக்க முடியாத அனுபவங்களை நம்மிடம் சிலர் பகிர்ந்து கொண்டனர்...

• பரிதாப சிறுவன்...





• காக்கை நண்பி!

மாரியம்மா : நான் குப்பை அள்ளும் பகுதியில் உள்ள மின்சார டிரான்ஸ்ஃபார்மர்களின் அடியில் அடிக்கடி காக்கைகள் ஷாக்கால் அடிபட்டு கீழே விழுந்து கிடக்கும். நான் அவற்றுக்கு உயிர் இருக்கிறதா என்று பார்ப்பேன். உயிர் இருந்தால் தண்ணீர் கொடுத்து, தடவிக் கொடுத்து, சிறிது நேரம் கழித்து, தூக்கிப் பறக்க விட்டால், அப்படியே பறந்துபோவதைப் பார்த்து சந்தோஷப் படுவேன். இப்படி நான் நிறைய காக்கைகளைக் காப்பாற்றி இருக்கிறேன். என் சக பணியாளர்கள் எனக்கு காக்கா மாரியம்மா என்றே பெயர் சூட்டி விட்டார்கள்.

கலாவதி : ஒரு நாள் காலை ஆறு மணி அளவில், மனவளர்ச்சி குன்றிய ஒரு சிறு பையன் தெரு ஓரத்தில் நின்று கொண்டிருந்தான். எது கேட்டாலும் பதில் சொல்லத் தெரியவில்லை. டிராயரிலேயே சிறுநீர், மலம். ரொம்பப் பரிதாபமாக இருந்தது. துடைத்து சுத்தம் செய்த பின், அந்த வழியே போய்க் கொண்டிருந்த ஒருவரிடம் நான் விஷயத்தைச் சொல்ல, அவர் மனநலம் குன்றியவர் இல்லத்துக்கு போன் செய்ய, அந்தப் பையனை அவர்களிடம் ஒப்படைத்தேன்.



• பீரோ சாவி...

மூர்த்தி : நான் துப்புரவுப் பணிபுரியும் பகுதியில் வசிக்கும் வி.ஐ.பி. ஒருவர் வீட்டுக்கு அருகிலிருந்து, குப்பையை அள்ளிக் கொண்டு போன சிறிது நேரத்தில், அந்த வீட்டு வேலைக்காரர் தேடிக் கொண்டு வந்துவிட்டார். பீரோ சாவிக் கொத்து, தவறி குப்பையோடு வந்திருக்குமோ என்று சந்தேகம். மொத்தக் குப்பையையும் கீழே கொட்டித் தேடியதில், பீரோ சாவி கிடைத்துவிட்டது.

- மானஸா

படங்கள் : **கௌதம் ராம்**



ஆர்டிஸ்ட், சைகாலஜிஸ்ட், ஃபெமினிஸ்ட் என நாட்டில் ஏகப்பட்ட 'இஸ்ட்'கள் உண்டு. இதையும் தாண்டி, 'ஸ்டைலிஸ்ட்' என்றொரு வித்தியாசமான தொழில், விளம்பரத் துறையிலும் மீடியாவிலும் உண்டு என்பது நம்மில் எத்தனை பேருக்குத் தெரியும்?

''விளம்பரங்களிலோ அல்லது சினிமாவிலோ எடுக்கப்படும் ஒவ்வொரு காட்சியும், அழகுணர்ச்சியோடும் சமமான வண்ணக் கலவையோடும் எடுக்கப்படுவதை பொறுப்பேற்று நடத்துபவர்தான் ஸ்டைலிஸ்ட்'' என்று நமக்கு இதன் அருஞ்சொற்பொருள் கூறுகிறார் 'தக்ஷா' என்று விளம்பரத்துறையில் பெயர் பெற்றிருக்கும் தாட்சாயிணி.

''என் தாத்தா சி.கே.கண்ணன், தமிழ் சினிமாவில் ஆயிரம் படங்களுக்கு மேல் காஸ்ட்யூமராகப் பணியாற்றியவர். அவர் உருவாக்கிய ஹீட்டரில்தான் நானெல்லாம் இன்று குளிர்காய்ந்துகொண்டிருக்கிறேன். சிறுவயதில் அவருடன் அந்தக் கால டவுனான சென்னை பாரிஸ் கார்னருக்கு துணிகள் எடுக்கச் சென்றது முதல், கலர்களில் விளையாடும் பழக்கம் எனக்கு ஆரம்பமானது.

இதே அலைவரிசையில் ஸ்டெல்லா மாரிஸில் ஃபைன் ஆர்ட்ஸ் படித்தேன். ஒருமுறை சிங்

அழகு பிசினஸ்—2

''அந்தக் காலத்தில் பெண்கள் ப்யூட்டி பார்லருக்குச் செல்வதையே தவறாக நினைத்திருந்த காலம் போய், இன்றைக்கு குடும்பப் பெண்கள் பலரும் அதிகமாக ஈடுபடும் தொழிலாக இது மாறிவிட்டது'' என்று பெருமையோடு கூறும் ஷிபானி வசுந்தரன், சென்னையின் பெருமைக்குரிய ப்யூட்டி பார்லரின் நிறுவனராக இருப்பவர்.

ஆம்... சென்னை தி.நகரிலுள்ள 'அனுஷ்கா' என்கிற இவரது உயர்தர நவீன ப்யூட்டி பார்லர்தான், இந்தியாவிலேயே மிகப்பெரிய அழகு நிலையம்! எழுபத்தைந்து லட்ச ரூபாய் செலவில், லாரியான் என்கிற ஃப்ரெஞ்ச் ஹேர் கேர் ப்ரொடக்ட் கம்பெனியுடன் இணைந்து ஆரம்பித்துள்ள 'அனுஷ்கா'விற்குள் நுழைபவர்கள் அனைவரும் ஏதோவொரு பிரம்மாண்ட சினிமா செட்டிற்குள் வந்துவிட்டது போல் பிரமிப்பார்கள்.

''நம் ஊரில் தரமில்லாத ப்யூட்டி பார்லர்களின் வளர்ச்சியைக் கண்டு அதை மாற்றும் விதத்தில்தான் உலகத் தரத்துடன் அனுஷ்காவை ஃப்ரெஞ்ச்

அழகு பிசினஸ்-1

'ஏன் தமிழ் சினிமாவில் கால் பதித்து வசீகரப் பார்வையை சுழலவிடவில்லை?' என்றதும்

கப்பூருக்குப் போயிருந்தபோது சாங் லிம் என்பவர் எப்பொழுதும் கலர் கலரான கார்ட்ஸ்களை வைத்து விளையாடியது எனக்கு ஆச்சர்யமாகப் போக, அவரே என்னை அழைத்து கலர்களிலுள்ள மகிமையையும், அதன் குணநலன்களையும் விளக்கியபோது வண்ணங்களின் எண்ணங்களை அன்று புரிந்து கொண்டேன்.

நான் டி.வியில் எல்லாத் துறைகளிலும் வேலை செய்திருக்கிறேன். சினிமாவில் டைரக்ஷன், ஆர்ட் துறைகளில் அஸிஸ்டெண்டாகப் பணியாற்றிய சமயத்தில், கைமல் என்கிற கேமராமேனின் அறிமுகத்தால் விளம்பரத்துறைக்குள் நுழைந்தேன். அன்றிலிருந்து காஸ்ட்யூம் டிசைனராக, பல வருடங்கள் நான் மட்டுமே ஸ்டைலிஸ்டாக இத்துறையில் சாதித்தது, சாதிக்கப் போவது எல்லாம் என் தாத்தாவின் உழைப்புக்கும், வழிகாட்டுதலுக்கும் அர்ப்பணம்'' என்று ஒரே டேக்கில் பேசிய தக்ஷாவிடம்,

வெகுண்டெழுந்து விட்டார்.

''உலகத்திலேயே தமிழ் சினிமாவில்தான் ஒரு படத்தின் இயக்குனரே அத்தனை வேலைகளையும் தூக்கி தன் தலையில் வைத்துக்கொள்வார். உலகத் தரத்தில் படமெடுக்க ஆசைப்படுபவர்கள், ஏன் ஹாலிவுட்டின் வொர்க்கிங் ஸ்டைலை பின்பற்றக் கூடாது? ஆங்கிலப் படங்களில் எடுக்கப்படும் காட்சிகளில் வலது பக்கத்திலிருந்து ஃப்ரேமுக்குள் நுழைபவர் என்ன கலர் ட்ரெஸ் போட வேண்டும் என்பதைக்



கம்பெனியுடன், மூவாயிரம் சதுர அடியில் ஆரம்பித்துள்ளேன். மேல் தட்டு மக்கள்தான் இதன் வாடிக்கையாளர்கள். ஹேர் கட் செய்ய இருநூறு ரூபாய், ஃபேஷியல் ஆயிரத்து ஐந்நூறு முதல் ஐந்தாயிரம் வரைக்கும் செய்கிறோம். வேலையின் திறன், நேர அளவு இதை வைத்துத்தான் விலையை நிர்ணயித்துள்ளோம்'' என்று கூறும் ஷிபானி, ப்யூட்டி பார்லர்களின் இன்றைய அவலங்களையும் வேதனையுடன் வெளிப்படுத்தினார்.

''இரண்டாயிரம் ரூபாய் ஃபீஸ் என்று, ஒரே வகுப்பில் நூறு மாணவர்களை வைத்து அரசு நிறுவனங்களில் பயிற்சிகள் எதுவுமில்லாத ப்யூட்டிஷியன் கோர்ஸ் நடத்துவதால்தான், இன்றைக்கு

கூட நுணுக்கமாக கவனிப்பார்கள். ஜேம்ஸ்பாண்ட் போன்ற டிடெக்டிவ் ஹீரோக்கள், பெரும்பாலும் இண்டிகோ கலர் பேண்ட், லைட் கலர் சர்ட்தான் அணிவார்கள். ரொமான்டிக் படங்களில் எல்லாவற்றிலும் ஹீரோயின்களின் உடைகளில் குட்டி குட்டிப் பூக்கள் நிறைந்திருக்கும். ஆனால் இங்கு தேவையில்லாத கலர்களை உபயோகிப்பதால், ஒரு காட்சி இன்னொரு காட்சியோடு கைகோப்பதேயில்லை. தெலுங்குப் படங்களின் பாடல்களைப் பார்த்தால் தலைவலி வந்துவிடுகிறது. ஹிந்தி அதற்குமேல்'' என்று லெப்ட் ரைட் வாங்கியவருக்கு, 'காதல்' படம் மட்டும் பிடித்திருக்கிறது.

''காதலில் நேச்சுரல் கலர்ஸை படம் முழுக்கப் பயன்படுத்தியதால் நம்மால் அதில் ஒன்றிப்போய் ரசிக்க முடிந்தது. அதேபோல் 'அலைபாயுதே'வில் வரும் 'பச்சை நிறமே பச்சை நிறமே' பாடல் முழுக்க, ஒவ்வொரு ஃப்ரேமிலும் வண்ணங்களை அழகாகத் தெளித்திருப்பார் மணிரத்னம். ராஜீவ்மேனன் படங்களிலும் கலர்ஸ் கலக்கலாக இருக்கும்'' என்றவர், அடுத்ததாக ஸ்டான்லி இயக்கும் படத்தின் மூலமாக தமிழ் சினிமாவிற்குள் ஒரு ஸ்டைலிஸ்டாக இறங்க விருக்கிறாராம்.

''**நா**ன் காஸ்ட்யூம் டிசைனராகவும் இருப்பது என் 'ஸ்டைலிஸ்ட்' பணிக்கு கூடுதல் பலம் சேர்க்கிறது. நான் பணியாற்றிய விளம்பரங்களில் சென்னை சில்க்ஸின் 'ஜிகுபுகு' ரெயில் விளம்பரம் மனதிற்குக் கூடுதல் இதம் அளித்தது. வயது வித்தியாசங்களோடு அத்தனை பெண்கள் இருந்தாலும், கலர்ஸ் அழகாக உட்கார்ந்திருக்கும். அதில் பலருக்கு பாவாடை சட்டை, பாவாடை தாவணி உடுத்தியது கூடுதல் இன்பம். சேலையில், குறிப்பாக பாவாடை தாவணியில் பெண்கள் அழகாகத் தெரிவது போல் வேறெதிலும் தெரிவதில்லை. நமக்கு அதன் அருமை புரியாவிட்டாலும், யு.எஸ்.ஸிலிருந்து வேலைப்பாடு உள்ள பாவாடை தாவணிகளின் ஆர்டர்ஸ் நிறைய வருகிறது'' என்று கலாசாரத்தின் மீது நிறைய காதல் கொண்டு பேசுகிறார் தாட்சாயிணி.

மாறுதல் உலகத்தில் உலகத்தரம் நாடும் மணிரத்னம், ஷங்கர் போன்ற தமிழ் சினிமா இயக்குனர்களுக்கு, இவரின் நுண்ணறிவு நிச்சயம் ஒரு முழுமையான படைப்புக்கு வழிவகுக்கும் என்பதில் சந்தேகமில்லை. ○

அதிலிருந்து அரைகுறை விஷயங்களோடு வெளிவரும் மாணவர்கள் அழகு நிலையங்களின் மீதான மதிப்பைப் பாழ்படுத்துகிறார்கள். அவர்களை வேலைக்குச் சேர்த்தாலும் மீண்டும் ஒரு முழுப் பயிற்சி கொடுத்தாலொழிய அவர்களை நம்பி கஸ்டமர்களை ஒப்படைக்க முடியாது. இன்று மிகப்பெரிய நிறுவனங்களும் மூலைக்கு மூலை ப்யூட்டி பார்லர்கள் திறந்து, தகுதியில்லாதவர்களைப் பணிக்கு அமர்த்துவதால் இன்று இத்தொழிலின் மகத்துவமே பாதிக்கப்பட்டுள்ளது. ஒன்று தெரியுமா, அழகு சாதனப் பொருள்களில் கெமிக்கல்ஸ் கலந்திருந்தாலும், அதை சரியான முறையில் பயன்படுத்தினால் எவ்வித பாதிப்பும் நேராது'' என்றவர், 'ஏன் அழகு நிலையங்கள் பெரும்பாலும் பெண்கள் வசம் உள்ளதென்'கிற ரகசியத்தைச் போட்டுடைத்தார்...

'' 'வுமன்ஸ் டச்' என்பார்களே... அதுதான் காரணம். பெண்களின் தொடுதலில் ஒரு காந்தசக்தி உள்ளதால் அவர்களால் இத்துறையில் பிரகாசிக்க முடிகிறது. ஆக, லாபகரமான இத்தொழிலில் மேலும் பல பெண்கள் நல்ல பயிற்சியோடு நுழைந்தால், அவர்களுக்கு வாய்ப்புகளும் நல்ல வாழ்க்கையும் கொட்டிக் கிடக்கின்றன.''

- சநகன்

படம் : **ஸ்ரீஹரி, பப்பி**

வட்டமேஜை



நெகிழ்ந்தது நெஞ்சம்!

✉ 'என்னை உலுக்கிய காதல்' ஸ்ரீகாந்தின் பேட்டியைப் படித்தவுடன், கோபிகாவுடன் ஸ்ரீயின் உள்ளம் பத்திக்கிச்சு என்பதை உணர முடிகிறது.
சென்னை - 5,
கே.தெய்வசிகாமணி

✉ கலக்கிவிட்டது 'காதல் ஸ்பெஷல்' கல்கி! இல.கணேசன் பேட்டி ரொம்ப சுவாரஸ்யம்.
தென்பாதி,
சீர்காழிசாமு

✉ மக்களுக்குத் தொண்டாற்ற வேண்டிய மாண்புமிகுக்கள் தங்கள் கட்சியின் விளம்பர அதிகாரிகளாக மாறி நடந்து கொள்ளும் அரசியல் அரைவேக்காட்டுத் தனத்தினை, துணிச்சலுடன் தட்டிக் கேட்டுள்ள தலையங்கம் வெகு ஜோர்!
நெய்வேலி -7, எஸ். கண்ணன்

✉ எம்.ஜி.கன்னியப்பனின் காதல் டைரிக் குறிப்புகளில் சற்றே மிகை உணர்வு இருந்தாலும் கவித்துவ நறுக்குகள்!
ஸ்ரீரங்கம், சி.சௌரிராஜன்

✉ 'காதல் ஒன்று - கதாநாயகி இரண்டி'ல் லதா, ஸ்ரீதேவி இருவரிடமும் புத்திசாலித்தனத்தையும் சாதுர்யத்தையும் காண முடிந்தது.
சென்னை - 28,
காஞ்சனா ராதாகிருஷ்ணன்

✉ 'தேசமே என் காதல்' என்று தனது தாய்நாட்டுப் பற்றினை ஒரு வரி இலக்கியமாக்கியுள்ள இல.கணேசன், இணை இல்லா கணேசன்!
லோயர் அணைக்கட்டு,
பி.இராஜேந்திரன்

✉ மலரோனின் 'மாமன் மகள்' பாசாங்கில்லாத உணர்வுபூர்வமான சிறுகதை.
மேலகிருஷ்ணன்புதூர்,
ஆர்.கே.லிங்கேசன்

✉ விட்டில் சூப்பர் ஸ்டார் சிம்பு எழுதிய 'அழகி' சிறுகதை அழகாகவே இருந்தது.
காமநாயக்கன்பாளையம்,
மா.மோகனராசன்

✉ பல கண்ணியமான காதல் நிகழ்வுகளைத் தாங்கி வந்த காதல் ஸ்பெஷல் கல்கி, எங்கள் நெஞ்சங்களை நெகிழ்ச்சியடையச் செய்துவிட்டது. பாராட்டுகள்!
ஈரோடு -1, ரேவதிப்ரியன்

✉ காலத்திற்கேற்ற கண்ணியமான மாற்றங்கள் தென்படுகின்றன கல்கியில். வரவேற்கிறோம்.
தஞ்சை, பன்னீர் செல்வம்

✉ தேசியவாத காங்கிரசின் மாநிலத் தலைவருக்கு ஆனாலும் இவ்வளவு நகைச்சுவை உணர்வு கூடாது. பின்னே! மாநிலத்தில் அக்கட்சிக்கு 50,000 பேர் உறுப்பினர்கள் எனக் கூறுகிறாரே!
சென்னை - 91, பால. சூர்யா

✉ 'ஒரு காதல் சந்திப்பு' கலந்துரையாடல் ஒவ்வொரு காதலரும் வாசிக்க வேண்டியது.
சென்னை - 83, கே. வி. ராமன்

✉ வழவழ அட்டையுடன் காதல் சிறப்பிதழைத் தந்ததெல்லாம் இருக்கட்டும்; வழக்கமாகப் போடுகின்ற ஜோக்குகளின் மீது கைவைத்தது என்ன நியாயம்?
பெங்களூர், யமுனா ரெங்கநாதன்

'பூத க்ருத் பூத ப்ருத் பாவோ
பூதாத்மா பூதபாவன:'

'பூத க்ருத்' என்றால் என்ன...? சமஸ்த வேதங்களையும் உண்டாக்கினவன்.


'பூத ப்ருத்...?'- எல்லா பூதங்களையும் தரிக்கிறவன்.

வேதம் நான்காம் காண்டத்தில் சொல்வதைத்தான் சஹஸ்ரநாமம் சொல்கிறது.

'எவன் பொருட்டு இந்த ஹவிஸானது சமர்ப்பிக்கப்படவேண்டும்?' என்று கேட்டு வேதம் சொல்கிறது:

"சதுர்முக பிரும்மாவுக்கும் முன்பே இருந்தவனாக, பூதங்கள் அனைத்துக்கும் எவனொருவன் மூலப்பொருளாக இருக்கிறானோ, அவனை உணர்ந்து, எல்லாவற்றையும் தரிக்கும்படியான - தாங்கும்படியான - அந்த எம்பெருமானை உணர்ந்து, அப்படிப்பட்டவனுக்கு இந்த ஹவிஸை சமர்ப்பிப்பாயாக" என்று சொல்லிச் சமர்ப்பிக்கிறது.

இப்படியொரு அர்த்த ஞானத்தோடு சமர்ப்பிக்கிறபோது, இன்னும் விசேஷமான அனுபவம் நமக்குக் கிடைக்கிறது.



உபநிஷத் என்ன சொல்கிறது...?

ஏழாம் பாகம்
16

குறையொன்றுமில்லை

முக்கூர் லக்ஷ்மிநரசிம்மாச்சார்யார்

'ஒருவன் தான் முன்பு இருந்தான்' என்கிறது - 'ஏகோவை நாராயணா ஆஸீது' 'அந்த எம்பெருமான் மட்டுமே முன்பு இருந்து, சமஸ்தத்தையும் உண்டாக்கினான். அவனிடமிருந்து எல்லாம் தோன்றின' என்பது உபநிஷத்தில் காட்டப்படும் பொருள்.

'பூதங்களுக்கெல்லாம் அந்தராத்மாவாக அந்த பூதங்களிலெல்லாம் அவனே இருப்பதனாலேயும், அந்த பூதங்களையெல்லாம் தாங்குவதனாலேயும், பூதங்களையெல்லாம் உண்டாக்கியதனாலேயும், அப்படிப்பட்டவனுக்கு இந்த நமஸ்காரம்' என்கிறது உபநிஷத்:

'பூத க்ருத் பூத ப்ருத் பாவோ:
பூதாத்மா பூத பாவன:'

'பஞ்சனிம்ச:' என்று சாஸ்திரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. இதைத்தான் நாராயண பட்டத்திரி குருவாயூரப்பனி



டம் பேசுகிறபோது எடுத்துக் காட்டுகிறார். கபில - தேவபூதி சம்வாதத்தில் எடுத்துக் காட்டுகிறார்:

பிரக்ருதி என்று ஒரு தத்துவம். அந்த பிரக்ருதியிலிருந்து மகத் என்றொரு தத்துவம் தோன்றுகிறது. மகத்திலிருந்து அகங்காரம் என ஒன்று தோன்றுகிறது. அகங்காரத்திலிருந்து பஞ்சதன்மாத்ரைகள் ஐந்தும் தோன்றுகின்றன. பஞ்சதன் மாத்ரைகளிலிருந்து பஞ்ச பூதங்களான ஐந்தும் தோன்றுகின்றன. பூஞ்சபூதங்களிலிருந்து கர்மேந்த்ரியங்கள் ஐந்தும், ஞானேந்த்ரியங்கள் ஐந்தும், மனதும், ஆகமொத்தம் பதினொரு தத்துவங்கள் தோன்றுகின்றன. - இவை அனைத்துக்கும் பிரக்ருதி தத்துவம் என்று பெயர். இதிலே மொத்தம் எத்தனை என்று எண்ணிப் பார்ப்போம்:

பிரக்ருதி, மகத், அகங்காரம் - மூன்று

அகங்காரத்திலிருந்து தோன்றிய பஞ்ச தன்மாத்ரங்கள் - ஐந்து.

தன்மாத்ரம் என்றால் என்ன? தன்மாத்ரத்தை நாம் புரிந்து கொள்ள வேண்டுமானால், அதை 'இளம் தோய்ச்சல்' என்று ஆசார்யர்கள் விவரிப்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

பாலைத் தோய்த்து வைக்கிறோம் ராத்திரியில். அது பிராதஹ் காலம் நாம் பார்க்கிறபோது, கட்டித் தயிராக நன்றாகத் தோய்ந்து விடுகிறது. ஆனால் அர்த்த ராத்திரியில் திறந்து பார்த்தோமானால், கட்டித் தயிராக இராது. பாலும் தயிருமாகச் சேர்ந்திருக்கும். இதைத் தான் இளம் தோய்ச்சல் என்பது. அந்த மாதிரி, அகங்காரத்துக்கு அப்பாற்பட்ட, ஆனால் பஞ்ச பூதங்களாக மாறாத நிலை என்பதுதான் பஞ்சதன் மாத்ரம். அதாவது அகங்காரத்துக்கும் பஞ்ச பூதத்துக்கும் இடைப்பட்ட நிலை.

இந்த பஞ்சதன்மாத்ரங்களிலிருந்து பஞ்ச பூதங்கள் தோன்றின.

பஞ்ச பூதங்களிலிருந்து இந்த்ரியங்கள் தோன்றின - கர்மேந்த்ரியங்கள் ஐந்து. ஞானேந்த்ரியங்கள் ஐந்து. மனது ஒன்று.

மனது இருக்கிறதே... மிகப் பெரிய இந்த்ரியம் அது!

கடோபநிஷத்தானது எடுத்துச் சொல்கிறது பாருங்கள்: 'இந்த ஆத்மா இருக்கிறதே, அது நம் சரீரத்துக்குள்ளே இருக்கிற ரதி (ரதத்தை ஓட்டக்கூடியவன்). சரீரம் இருக்கிறதே, அதுதான் ரதம். பஞ்சேந்த்ரியங்களும் குதிரைகள். மனசே கடிவாளம். ஆகவே மனஸ் என்ற இந்த்ரியம் மிக முக்கியமானது.

மனஸ் பஞ்ச இந்த்ரியங்களுக்குக் கடிவாளம்; புத்தியானது ஸாரதி. ஆத்மா தான் ரதி (ரதத்தைச் செலுத்துபவன்) என்கிறது உபநிஷத்.

ஆக கர்மேந்த்ரியங்கள், ஞானேந்த்ரி

யங்கள், மனஸ் மூன்றும் சேர்ந்து பதினொன்று ஆகிறது. இவற்றை உள்ளக்கிய நமது சரீரமானது, ராவணனுக்கு ஒப்பிட்டுச் சொல்லப்படுகிறது.

அவன் எப்படி இருந்தான் - ராவணன்...? அவனுக்குப் பத்துத் தலைகள். அதற்கு மேல் அவன் எப்படிப்பட்டவன்..? மனதை மாதிரி மிகவும் கொடியவன் அவன்.

மனது எதனால் கொடியது...?

இந்த மனம் இருக்கிறதே, அது கொஞ்சமும் வணக்கமில்லாதது (பணிவு இல்லாதது) ராவணனுக்கும் 'வணங்கலில் அரக்கன்' என்று பெயர். யாருக்கும் வணங்காதவன் அவன். துஷ்டன்! இந்த மனது கொடியது என்பதால், இப்படி சரீரத்தில் இருக்கிற இந்த்ரியங்களையும் ராவணனையும் ஒப்பிட்டுப் பெரியவர்கள் பேசினார்கள்.

எண்ணிக்கைக்கு வருவோம். கர்மேந்த்ரியங்கள் ஐந்து, ஞானேந்த்ரியங்கள் ஐந்து, மனம் ஒன்று என பதினொரு இந்த்ரியங்கள். மொத்தத்தையும் கூட்டினோமானால்,

ப்ருத்வி, மகத், அகங்காரம்	- 3
பஞ்சதன்மாத்ரைகள்	- 5
பஞ்சபூதங்கள்	- 5
இந்த்ரியங்கள்	- 11
மொத்தம்	- 24

இந்த இருபத்திநாலும் ப்ரக்ருதி தத்வம் என்று சொல்லப்படுகிறது. இதைக் காட்டிலும் பின்னமானவன் - வேறொருவன் - இருபத்தைந்தாவதாக வரும் இந்த ஜீவாத்மா, ஆக, இருபத்தைந்தாவது தத்வம் ஜீவாத்மா.

'ம' என்ற சப்தம் (கடபயாதி சங்க்யை வரிசைப்படி) இருபத்தைந்தாவது அக்ஷரம். ஆக, 'ம' என்பது இருபத்தைந்தாவது தத்வம்; இருபத்தைந்தாவது அக்ஷரமும் கூட. இந்த அக்ஷரத்துக்கு உரியவன் ஜீவாத்மா. நல் அறிவை உடையவன் அவன். அறிவாகவும் அவன் இருக்கிறான்; அறிவை உடையவனாகவும் இருக்கிறான்.



சூரியனானவன் எவ்வாறு ஒளியாகவும், ஒளிக்கற்றையை உடையவனாகவும் இருக்கிறானோ, அந்த மாதிரி இந்த ஆத்ம வஸ்து, அறிவை உடையதாகவும், அறிவாகவும் இருக்கிறது.

ஆகவே, அசேதனங்களாகிய இருபத்து நான்கைக் காட்டிலும், இருபத்தைந்தானது வேறானது.

அசேதன தத்வங்கள் எல்லாமே ஸ்வரூபத்தில் மாறுபாட்டை உடையவை. அவை மாறிக்கொண்டே இருக்கும்.

ஜீவாத்மா இருபத்தைந்தாவது இடத்தில் இருக்கிறானே, அவன் சுவபாவத்தில் மாறுபாடு உடையவனாக இருப்பான்.

ஒருத்தர் மஹா ஞானியாக இருக்கிறார். எல்லாவற்றிலும் நல்ல வல்லுனராக விளங்குகிறார். இன்னொருத்தர் அப்படி இல்லை... சுவபாவத்தில் மாறுபாடு இருக்கும். அசேதனங்களுக்கெல்லாம் சுவருபத்தில் மாறுபாடு இருக்கும்.

ஆனால், இந்த இரண்டைக் (ஜீவாத்மா, அசேதனங்கள்) காட்டிலும் வேறானவன் பரமாத்மா. இருபத்தாறாவது தத்வமான அவனுக்கு, சுவபாவத்திலயும் மாறுபாடு கிடையாது; சுவரூபத்திலேயும் மாறுபாடு கிடையாது:

'அவிகாராய சுத்தாய
நித்யாய பரமாத்மனே
சதைக ரூப ரூபாய விஷ்ணவே
சர்வ ஜிஷ்ணவே'

- விகாரமற்றவன் (அவிகாராய) பரமாத்மா.

நாமெல்லாம் பல விதமான விகாரங்கள் உடையவர்கள். நேற்றுப் பார்த்த மாதிரி இன்று இருப்பதில்லை.

'என்ன! இளைத்துப் போய் விட்டீர்கள்?' என்று கேட்கிறோம். 'வாடி இருக்கிறீர்களே?' என்கிறோம். அப்படிப் பல விகாரங்கள் இந்த சரீரத்திலே தென்படுகின்றன.

நமது புத்தியும் அவ்வளவு குசலமாகச் செயல்படுவதில்லை. ஒரு நாள் நன்றாக வேலை செய்கிறது புத்தி. ஒரு நாள் எல்லாவற்றையும் மறந்து

விட்டு நிற்கிறது. ஒரு நாள் எதையும் மறவாமல் இருக்கிறது. அந்த மாதிரியான அவஸ்தை நமக்கு.

ஆனால், பகவானுக்கு எந்த விகாரமும் கிடையாது. விகாரமற்றவனாய், எப்போதும் சுத்தமாய் பரமாத்மா இருக்கிறான்.

'சரணாகதி கத்யம்' என்ற கத்யத்திலே அழகாக எடுத்துக் காட்டப்படுகிறது:

'ஞானானந்த ஸ்வரூபா!' என்கிறார் எம்பெருமானார். ஹேய குணங்களே இல்லாத, உத்தமமான நற்குணங்கள் மட்டுமே நிரம்பியவன். தோஷமே அற்றவன் பரமாத்மா.

ஆகவே 26 என்பது பகவத் தத்வம்; 25 ஜீவ தத்வம்; 24 பிரகிருதி தத்வம்.

பிரக்ருதியைக் காட்டிலும் வேறானவன் ஜீவன். இவை இரண்டைக் காட்டிலும் வேறானவன் எம்பெருமான். பிரக்ருதி, ஜீவன் ஆகிய இரண்டையுமே தனது சரீரமாகக் கொண்டவன். 'ஜகத் சர்வம் சரீரம்தே.'

'சரீர சரீரி பாவம்' என்று இதற்குப் பெயர்.

சரீரி - சர்வத்தையும் தாங்குகிறான். அதனால்தான் **பூதாத்மா - பூத க்ருதே பூத ப்ருத்;** எல்லாவற்றையும் தாங்கக் கூடியவன்.

சரீரமாகிய அனைத்தையும் பரமாத்மா அந்தராத்மியாக இருந்து தாங்கிக் கொண்டிருக்கிறான். அனைத்தும் அவனுக்குச் சரீரமாய் அமைந்துள்ளன. ஆத்மாவும் அவனுக்குச் சரீரம்.

எவனுக்கு இந்த ஆத்மா சரீரமாக இருக்கிறதோ...

எவனுக்கு இந்தச் சரீரம் சரீரமாக இருக்கிறதோ...

எவனுக்கு இந்தப் பிருத்வி சரீரமாக இருக்கிறதோ... இதற்கெல்லாம் அந்தராத்மாவாக எவன் இருக்கிறானோ, அவன் சேஷி. இவையெல்லாம் சேஷம் - அதாவது அவனுடைய ஆராதனத்தின் பொருட்டே ஏற்பட்டவை. இந்த ஞானம் தான் நமக்கு வேண்டும். அனைத்தையும் அவனுக்கு அர்ப்பணம் பண்ண வேண்டும். அப்படி அர்ப்பணம் பண்ணக் கூடிய நிலையிலே, சமஸ்தமும் அவனுடையது.

இதைத்தான் சுவாமி தேசிகன் சுலபமாக, நியாஸதசகம் என்ற சுலோகத்தில் அழகாக எடுத்துக் காட்டினார்.

(வளரும்)



பார் புகழும்...


கலாப்ரியா

எண்ணிக்கை
சற்று மறந்து விடாமல் இருக்க
ஏற்கெனவே
பள்ளிப் பிள்ளைகள்
பரீட்சை எண்கள்
எழுதி வைத்திருக்கும்
பிராகாரச் சுவரில் மஞ்சளால்
கோடுகள் இட்டபடி
குளித்த கூந்தலுடன்
காலடி காலடியாய் காலத்தைப் பின் தள்ளி
கன்னிப் பெண்கள்
கோயில் சுற்றி வருவதை

தல விருட்சத்தில் அமர்ந்து
வேடிக்கை பார்த்துப்
பொழுது போக்கும் புறாக்கள் -
புதிய ஒலி பெருக்கி
பாசுரங்களைப் பாடி ஓய
மறுபடி கோபுரக் கூட்டுக்கு
விரையும் பேடைகளுடன்

புராதன வார்த்தைகள் போல
நடுத்தெருவில் படுத்து
அசைபோட்டுக் கொண்டிருக்கும்
பாதைப் பசுக்கள்
அருகாமை வீட்டின்
வாசலில்
பூசணிப் பூ வைக்கப் பார்த்து
அவசரமாய் எழுந்து செல்லும்

ஞானக்கூத்தன் சொன்னது போல்
''பார் புகழும் மார்கழியை
டிசம்பர் ஏன்
கைவிட்டுப் போகிறது''





குடந்தையிலிருந்து புறப்பட்ட வல்லவரையன் முதலில் அரிசிலாற்றங் கரையை நோக்கிச் சென்றான். வழியில் அவன் பார்த்த காட்சிகள் எல்லாம் சோழ நாட்டைக் குறித்து அவன் கேள்விப்பட்டிருந்ததைக் காட்டிலும் அதிகமாகவே அவனை பிரமிக்கச் செய்தன. எந்த இனிய காட்சியையும் முதல் முறை பார்க்கும்போது, அதன் இனிமை மிகுந்து தோன்றுமல்லவா? பசும்பயிர் வயல்களும், இஞ்சி மஞ்சள் கொல்லைகளும், கரும்பு வாழைத் தோட்டங்களும், தென்னை கமுகுத் தோப்புகளும், வாவிகளும், ஓடைகளும், குளங்களும், வாய்க்கால்களும் மாறி மாறி வந்துகொண்டேயிருந்தன. ஓடைகளில் அல்லியும் குவளையும் காடாகப் பூத்துக் கிடந்தன. குளங்களில் செந்தாமரையும், வெண்தாமரையும், நீலோத்பலமும், செங்கழு நீரும் கண்கொள்ளாக் காட்சியளித்தன. வெண்ணிறக் கொக்குகள் மந்தை மந்தையாகப் பறந்தன. செங்கால் நாரைகள் ஒற்றைக் காலில் நின்று தவம் செய்தன. மடைகளின் வழியாகத் தண்ணீர் குபுகுபு என்று பாய்ந்தது. நல்ல உரமும் தழை எருவும் போட்டுப் போட்டுக் கன்னங்கரேலென்றிருந்த கழனிகளின் சேற்றை உழவர்கள் உழுது பண்படுத்தினார்கள். பண்பட்ட வயல்களில் பெண்கள் நடவு நட்டார்கள். நடவு செய்துகொண்டே, இனிய கிராமியப் பாடல்களைப் பாடினார்கள்.

கரும்புத் தோட்டங்களின் பக்கத்தில் கரும்பு ஆலைகள் அமைத்திருந்தார்கள். முற்றிய கருப்பங்கழிகளை வெட்டி அந்தக் கரும்பு ஆலைகளில் கொடுத்துச் சாறு பிழிந்தார்கள். கரும்புச் சாற்றின் மணமும், வெல்லம் காய்ச்சும் மணமும் சேர்ந்து கலந்து வந்து மூக்கைத் துளைத்தன.

தென்னந்தோப்புகளின் மத்தியில் கீற்று ஓலைகள் வேயப்பட்ட குடிசைகளும் ஓட்டு வீடுகளும் இருந்தன. கிராமங்களில் வீட்டு வாசலைச் சுத்தமாக மெழுகிப் பெருக்கித் தரையைக் கண்ணாடி போல் வைத்திருந்தார்கள். சில வீடுகளின் வாசல்களில் நெல் உலரப் போட்டிருந்தார்கள். அந்த நெல்லைக் கோழிகள் வந்து கொத்தித் தின்றுவிட்டு, "கொக்கரக்கோ!" என்று கத்திக் கொண்டு திரும்பிப் போயின. நெல்லை காவல் காத்துக் கொண்டிருந்த பெண் குழந்தைகள் அக்கோழிகளை விரட்டி அடிக்கவில்லை. "கோழி அப்படி எவ்வளவு நெல்லைத் தின்றுவிடப் போகிறது?" என்று அலட்சியத்துடன் அக்குழந்தைகள் சோழியும், பல்லாங்குழியும் ஆடிக் கொண்டிருந்தார்கள். குடிசைகளின் கூரைகளின் வழியாக அடுப்புப் புகை மேலே வந்து கொண்டிருந்தது. அடுப்புப் புகையுடன் நெல்லைப் புழுக்கும் மணமும், கம்பு வறுக்கும் மணமும், இறைச்சி

அழகின் சிரிப்பு...



வதக்கும் நாற்றமும் கலந்து வந்தன. அக்காலத்தில் போர் வீரர்கள் பெரும்பாலும் மாமிச பட்சிணிகளாகவே இருந்தார்கள். வல்லவரையனும் அப்படித்தான். எனவே அந்த மணங்கள் அவனுடைய நாவில் ஜலம் ஊறச் செய்தன.

ஆங்காங்கே சாலை ஓரத்தில் கொல்லர் உலைக்களங்கள் இருந்தன. உலைகளில் நெருப்புத் தணல் தகதகவென்று ஜொலித்தது. இரும்பைப் பட்டறையில் வைத்து அடிக்கும் சத்தம் டணார் டணார் என்று கேட்டது. அந்த உலைக்களங்களில் குடியானவர்களுக்கு வேண்டிய ஏர்க்கொழு, மண்வெட்டி, கடப்பாரை முதலியவற்றுடன், கத்திகள், கேடயங்கள், வில்கள், ஈட்டிகள் முதலியன குப்பல் குப்பலாகக் கிடந்தன. அவற்றை வாங்கிக்கொண்டு போகக் குடியானவர்களும், போர் வீரர்களும் போட்டி போட்டுக் கொண்டு காத்திருந்தார்கள்.

சிறிய கிராமங்களிலும் சின்னஞ்சிறு கோயில்கள் காட்சி அளித்தன. கோயிலுக்குள்ளே சேமக்கலம் அடிக்கும் சத்தமும், நகரா முழங்கும் சத்தமும், மந்திர கோஷமும், தேவாரப் பண் பாடலும் எழுந்தன.

மாரியம்மன் முதலிய கிராம தேவதைகளை மஞ்சத்தில் எழுந்தருளப் பண்ணிக்கொண்டு பூசாரிகள் கரகம் எடுத்து ஆடிக்கொண்டு, உடுக்கு அடித்துக்கொண்டு வந்து, நெல் காணிக்கை தண்டினார்கள்.

கழுத்தில் மணி கட்டிய மாடுகளைச் சிறுவர்கள் மேய்ப்பதற்கு ஓட்டிப் போனார்கள்.

குடியானவர்கள் வயலில் வேலை செய்த அலுப்புத் தீர மரத்தடியில் உட்கார்ந்து இளைப்பாறினார்கள். அப்போது செம்மறியாடுகளைச் சண்டைக்கு ஏவிவிட்டு, அவர்கள் வேடிக்கை பார்த்தார்கள்.

வீட்டுக் கூரைகளின்மேல் பெண் மயில்கள் உட்கார்ந்து கூவ, அதைக் கேட்டு ஆண் மயில்கள் தோகையைத் தூக்க முடியாமல் தூக்கிக்கொண்டு ஜிவ்வென்று பறந்துபோய், அப்பெண் மயில்களுக்குப் பக்கத்தில் அமர்ந்தன.

புறாக்கள் அழகிய கழுத்தை அசைத்துக் கொண்டு அங்குமிங்கும் சுற்றின.

பாவம்! கூண்டுகளில் அடைபட்ட கிளிகளும் மைனாக்களும் சோக கீதங்கள் இசைத்தன.

இப்படிப்பட்ட காட்சிகளையெல்லாம் பார்த்துக் களித்துக் கொண்டு வந்தியத்தேவன் குதிரையை மெல்லச் செலுத்திக் கொண்டு சென்றான்.

- 'பொன்னியின் செல்வனி'லிருந்து
வானதி பதிப்பகம்

பளீர் இளமைத் தொடர்

உள்ளம் துறந்தவன்

சுஜாதா

8

விமான நிலையத்தில் இறங்கினவுடன் ராகவேந்தரை வீல்சேரில் வைத்து ஆஸ்பத்திரிக்கு அழைத்துச் செல்வதாகத்தான் பரமேஸ்வரன் ஏற்பாடு செய்திருந்தார். ஆனால் இமிக்ரேஷனை விட்டு வெளியே வரும்போதே, பலர் அவரை அடையாளம் கண்டுகொண்டு 'வணக்கம்' சொல்லிவிட்டு "என்ன ராகவேந்தர், உடம்பு சரியில்லையா? நீங்க வீல்சேர்ல உக்காந்துட்டா, இண்டியன் இகனாமி என்ன ஆறது?" என்று கேட்டதில், ராகவேந்தர் சக்கர நாற்காலியிலிருந்து எழுந்து "எனக்கு ஒண்ணும் இல்லை" என்று நடக்க ஆரம்பித்தார். பரமேஸ்வரன் பதறிப்போய், "நீங்க நடக்கக் கூடாதுன்னு பாலா ஸ்ட்ரிக்டா சொல்லிருக்கார். இப்படி நடமாடலாமா, தப்பில்லையா?" என்றார் பயபக்தியுடன், கவலையுடன்.

"அவன் கிடக்கான். சும்மா இந்த டெஸ்ட்டு, அந்த டெஸ்ட்டுன்னு தொடையெல்லாம் ஊசி குத்தி நெறிகட்டிப்போய், உயிரை வாங்கிட்டான். நீ எதும் ஊரைக் கூட்டாதே"

"இல்லை, ஆனா..."

"எனக்கு எல்லாம் சரியாப் போச்சு. நாக்குக்கு கீழ அடக்கிக்க மாத்திரை கொடுத்தாங்க லண்டன்ல. அதைச் சாப்பிட்டதுமே நெஞ்சு வலி குறைஞ்சுருத்து. லேசா தலை வலிச்சுது. பேசாமப்ளேன்ல படுத்துட்டேன். லைட்டாத்தான் சாப்ட்டேன். சென்னையைப் பார்த்ததுமே தெம்பு வந்துருச்சு. நேரா ஆபீஸ் போப்பா. ஒரு எமர்ஜென்சி மீட்டிங் போடணும். ஸி எஃப் ஓ வரலியா"

"ஸி எஃப் ஓ லண்டன்லதான் இருக்கார்"

"நல்ல வேளை, ஜி.டி.ஆர். தன்னிப் போட்டுருச்சு. டெம்பிள்டன்லயே சொல்லிட்டான், இது சரியான சமயம் இல்லைன்னு"

"அப்ப ஆஸ்பத்திரிக்குப் போக வேண்டாமா"

"எனக்கு தேவலையாயிருச்சு பரமேஸ்வரன். ஆஸ்பத்திரிக்குப் போனா, அதும் வீல்சேர்ல போனா, ஸ்டாக் விழுந்துரும்யா! கோயம்புத்தூர்க்காரனை என்ன பண்ணே? புண்ணாக்கு, ப்ரபோசல அனுப்பலையே"

"அனுப்பிச்சிருக்கார் முதலாளி. நீங்க தர்மம் கொடுக்கறதா இருந்தா, இலவசமா கொடுக்கறதா இருந்தா, ரெண்டு கோடியோட போயிரும். ஃபாக்டரி வச்சு, சம்பாதிச்சு ஆகணும்னு அவருக்குக் கட்டாயமில்லை, நீங்க சொல்லிப் பாருங்க. நான் சொன்னா அடிச்சுர்றார்"

"வெரி ஸாரி"

"நீங்க எதுக்கு ஸாரி சொல்லணும்?



அவர் சுபாவம் தெரிஞ்சதுதானே?"


"எங்க இந்த மஞ்சக்குட்டி?"

"மஞ்சரிக்குக்கூட நீங்க திரும்பி வர்றது தெரியாது. யாருக்கும் சொல்லலை"

"சொல்லியிருக்கலாமே. என்னை இந்த உலகத்தில நேசிக்கிற ஒரே ஒரு ஆத்மா"

''ஏன் நான் இல்லையா?'' என்றார்.

"உன்னை நம்பறதுக்கில்லை. உன் மனசைக் கலைச்சுருவான் நாகரத்தினம்." செல்போனை வாங்கி மஞ்சரியை ஒற்றியதில், போனை அணைத்திருந்தது தெரிந்தது. அதே





நேரத்தில் மற்றொரு டெலிபோனில் ஏர்போர்ட்டிலிருந்து கோவைக்குச் செய்தி போனது.

''நாகரத்தினம் சார், நான் தினத்தூதன்லருந்து மீனம்பாக்கம் குருவி ரமேஷ் பேசறேன் உங்க மாமனாரை ஏர்போர்ட்ல வச்சுப் பார்த்தேன்"

"அவர் லண்டன்லன்னா இருக்காரு? குருவி, மத்யான வேளையிலயே போட ஆரம்பிச்சிட்டியா?"

"இல்லைங்க. அவர்தான். வீல்சேர்ல வெச்சு கொண்டு வந்தாங்க. பரமேஸ்வரனையும் பார்த்தேன். உங்களுக்குத் தெரியாது?"

''இப்ப தெரிஞ்சுருச்சு. போனை வையி"

மஞ்சரி ஆழ்வார்பேட்டையில் டி.டி.கே. சாலையில் புதிதாக முளைத்திருந்த பல சென்டர்களில் ஒன்றில் Life after death என்ற ஒரு என்.ஜி.ஓ. கூட்டத்தில், முன் நாற்காலி வரிசையில் உட்கார்ந்திருந்தாள். மற்ற நாற்காலிகள் அங்கொன்றும் இங்கொன்றுமாகத்தான் நிரம்பியிருந்தன. அழகேசன் 'சோடியம்' அருகில் பேசிக் கொண்டிருந்தான். அவன் முகத்தில் படிப்பு விளக்கு வெளிச்சம் அடித்தது. மஞ்சரி அவன் சொன்னதில் கவனமில்லாமல், அங்க அசைவுகளை ஒரு மகா ரசிகையாகப் பார்த்துக் கொண்டிருந்தாள். கையசைவுகள், கண் சிமிட்டல்கள், இயற்கையான சிக்கனமான புன்னகை, காது மடல் (இஷ்டப்படி காதை

ஆட்டறியே, போன ஜன்மத்தில நீ நாயா?) கறுப்புக் கேசம், திறந்த சட்டைக்குள் தெரிந்த கறுப்புக் கயிறு, மணிக்கட்டை இறுக்கிய லேடீஸ் வாட்ச் (அவள் கொடுத்தது)...

"டோட்டல் பராஸ்தெசிஸ்ம்பாங்க. நம் உடம்பில இருக்கற ஒவ்வொரு அங்கமும் இறந்த பிற்பாடு ஹார்வெஸ்ட் பண்ணலாம். கார்னியாங்கற கண் மேல் திப்பி, இருதயம், ரெண்டு கிட்னி, லிவர்... ஒரு ஆளாத்தான் சாகறோம். பல ஆளா உயிர் வாழலாம். யாருமே சாகறதில்லை. கீதை கூட அதைத்தான் சொல்லுது (எங்கே கேட்டேன் இதை). நீங்க செய்யவேண்டியதெல்லாம், எங்க ஆர்கனைசேஷன்ல ஒரு ஃபாரம் கொடுப்பாங்க. அதில் கையெழுத்துப் போட்டுத் தரணும், அவ்வளவுதான். உங்க அங்கங்கள் அனைத்தையும் அறுவடை செய்ய சம்மதிக்கணும்" "ஒன் மினிட்" என்று மூன்றாவது வரிசையிலிருந்து எழுந்து, கண்ணாடியைக் கழற்றிவிட்டு ஒருவர் கேட்டார் "நம் இந்து நம்பிக்கைகளின்படி..."

"கருட புராணம் வைதரணி நதிக்கரை, அதைத்தானே சொல்றீங்க? தெரியும்ங்க. நம் இந்து நம்பிக்கைப்படி உடல் ஒரு சட்டைங்க. ஆத்மாதான் அழிவில்லாதது. பிரியறது. உடல் அழிஞ்சுர்றது. அப்படி அழியப் போறதைத்தான், எரியப் போறதைத்தான், குறைச்சு எரிங்கன்னு சொல்றோம்."

மற்றொருவர் எழுந்து "இருதயத்தை எப்படி மாற்ற முடியும்? இருதயம் நின்னப்புறம்தானே சட்டப்படி சாவு?"

"இல்லைங்க. சில மாநிலங்களில் அப்படியில்லை. ப்ரெய்ன் ஸ்டெம் டெத்னு இருக்குது. விபத்தில் மூளையின் அடிப்பாகத்தில் அடிபட்டு, நினைவு திரும்பவே முடியாத கோமாவில போய்டறவங்களுடைய இதயத்தை, கத்துப்பட்டவங்க சம்மதத்தோட தானம் கொடுக்கலாம். சமீபத்தில் ஐதராபாத்தில் வெங்கடேஷ்னு ஒரு பையன் கேஸ் படிச்சிருப்பீங்க"



"என்ன சொல்ல வர்றீங்க?"

"லஞ்ச் இஸ் ரெடி" என்றாள் ஒரு பெண்மணி.

"இறுதியா அவர் சொல்றது, நீங்க யாரும் சாகப் போறதில்ல. அப்படி ஏதாவது விபத்து ஏற்பட்டா, உங்களுடைய அங்கங்களை தானம் கொடுக்க இப்பவே சம்மதிக்கிறீங்க. கமல் கூட கையெழுத்துப் போட்டிருக்கார்."

கூட்டம் முடிந்தபின், அந்த ஹாலை ஒட்டிய பகுதியில் உணவு வகைகள் நிறைய வைக்கப்பட்டிருந்தன. "நல்லா சாப்பிடு. நிறைய கூட்டத்தை எதிர்பார்த்தோம். பத்து பர்சன்ட் கூட வரலை. வாஷ் அவுட்"

மஞ்சரி "உனக்கு ஏன் இந்த பொல்லாப்பெல்லாம்? உயிரோட இருந்தா என்ன, செத்து கண்ணாம்பா ஆனா என்ன உனக்கு?"

"யூ ஆர் ரைட். எல்லாரும் தயங்கறாங்க. கண்ணை நோண்டிட்டா, சொர்க்கத்துக்குப் போற வழி தெரியாமப் போயிருச்சுன்னா, என்ன ஆவுறதுன்னு கேக்கறார் மாமா. உனக்கு மறுபிறவில நம்பிக்கை உண்டா மஞ்சன்?"

"மறுபடி இதே பேர்ல, இதே ஊர்ல பிறக்கறதா இருந்தாத்தான் அது மறுபிறவி. இல்லன்னா அது வேறு பிறவி"

"வெல் செட்! மஞ்சன் அறை மர்மம்னு ஆரணி குப்புசாமி முதலியார் ஒரு நாவல் எழுதிருக்காராம்... எல்.எல்.ஏ.ல ஒரு கூட்டத்தில் சொன்னாங்க. இல்லை ஜே.ஆர். ரங்கராஜு'வா"

"ஏதாவது ஒரு சப்ஜெக்ட் ஒரு சமயத்திலன்னு எத்தனை தடவை சொல்லிருக்கேன்?"

"ஸாரி, ஸ்கேட்டர் ப்ரெய்ன்" என்று பின்மண்டையில் தட்டிக் கொண்டான் அவன்.

கண்கள் அலைந்தன. "இந்த மாதிரி பொண்ணுங்க எல்லாம் நம்ம வட்டத்துக்குள்ள வரமாட்டேங்குதே. வளையல் வாங்கத்தானே போறாங்க!"

"எத்தனை பேர் கையெழுத்துப் போட்டாங்க?"

"நானு, ஒரு எழுபத்தெட்டு வயசு மாமி.

அவ்வளவுதான். அதிக அறுவடை பண்ண முடியாது."

"நானும் ஒண்ணு போடவா?"

"போடு, உனக்கெல்லாம் சாவே கிடையாது. நான் போனா எமர்ஜென்சியில யாரை காண்டாக்ட் பண்ணணும்னு உன் பேரைத்தான் கொடுத்திருக்கேன்"

"ரிலேஷன்ஷிப்"

"ஒய்ஃப்" என்றான். "சும்மா போட்டு வைக்கலாமே."

"உதை. எங்கப்பா கேட்டா பின்னிடுவார். நான் யார் மக தெரியுமா? அமெரிக்காவில ஒரு மாப்பிள்ளை காத்திருக்கான். பேரு விஜி. கோயமுத்தூர்ல ஒருத்தன் காத்திருக்கான். பேரு சரவணன். அவங்க ரெண்டு பேரையும் கத்திச் சண்டைல ஜெயிச்சாகணும் நீ"

"தேவையில்லை. நமக்கு போன ஜன்மத்திலயே கல்யாணம் ஆயிருச்சு. நீ துறையூர் ஜமீன்லயும், நான் மருங்காபுரி ஜமீன்லயும் பிறந்தோம். எங்க வீட்டுக்காரங்க கல்யாணம் பேசிக்கிட்டு வந்தாங்க. ஒடிசலா, சாவாடு செத்தாப்பல இருந்தே, கண்ணு மட்டும் இப்ப இருக்கே அதே கண்ணு... இந்தப் பெண்ணு வேணாம்னுட்டு அழுது அடம்பிடிச்சேன்."

அவன் மேல் அந்த கான்ஃபரன்ஸ் அட்டையால் ஒரு நெத்து நெத்தினாள். "சீரியஸா சொல்லு. உங்கப்பா அம்மா யாரு"

"யாயும் ஞாயும் யாராகியரோ!"

"சொல்ல வேண்டாம்னா சரி"

"அப்பாவை ஞாபகமே இல்லை. அம்மாவை நீ மீட் பண்ணத்தான் போறே"

"எங்கே"

"ஒரு வீராணம் குழாய்ல"

அப்போதுதான் ராகவேந்தரின் போன் வந்தது.

"மஞ்சு, அண்யா"

"சோட்டு! லண்டன்லருந்தா?"

"இல்ல கத்திப்பாரா ஜங்ஷன்லருந்து"

"புரியலை"

"உன்னைப் பாக்க திரும்பி வந்துட்டேன்"

"கிரேட், வேலையெல்லாம் முடிஞ்சுதா?"

"செய்கூலி இல்லை, சேதாரம் இல்லைன்னு நகை வாங்க தவணை முறையில் பணம் கட்டினது தப்பாப் போச்சு!"

"ஏன் என்ன ஆச்சு?"

"தவணை முடிஞ்சு போய்க் கேட்டா, கடையும் இல்லை, நகையும் இல்லைன்றாங்க"

- வி.எஸ். அனந்தராமன்

"அதுக்குள்ள நான் முடிஞ்சுருவேன்னு மாப்ளை பயங்காட்டினார். ஓடியாந்துட்டேன். உன்னைப் பாக்காம சாவறதா இல்லை"

"அண்யா, என்ன சொல்றீங்க? உடம்பு சரில்லையா?" என்று சிணுங்கினாள்.

"உன்னை ஒரு முறை பாத்தா எல்லா உடம்பும் சரியாய்ரும். நேரா ஆபீஸுக்கு வந்துரு. எங்க இருக்கே?"

மஞ்சரி செல்போனை மடக்கி வைத்தாள். "புறப்படணும். அண்யா வந்துட்டாரு"

"லண்டன்ல இருக்கறதா சொன்னியே"

"திரும்ப வந்துட்டார்"

"நல்லதாப் போச்சு. வா அவரைச் சந்திச்சுரலாம். 'நான் உங்க மகளிடம் உள்ளம் துறந்தவன்'னு சொல்லிர்றேன்"

"செருப்பு"

"செருப்பு எறிஞ்சாலும் மாமாவை சந்திச்சுத்தானே ஆகணும்? பாரேன், என் கைல அவரை மூணு நிமிஷம் பேசவிடு. அப்படியே என்னுடைய எல்லா பல்லையும் 'ஆன்' பண்ணிடுவேன். உருகிப் போய் அவரே எங்கம்மாகிட்ட வந்து, எப்படி இப்படி ஜம்மா ஒரு பிள்ளையை வளத்து வச்சிருக்கீங்க. அமெரிக்காவாவது, கோயமுத்தூராவது, இந்தாங்க, இதைப் பிடிங்கன்னு கைல கொடுப்பார்."

"அட்சதையா?"

"உன் கையை"

"டி.டி.கே. ரோடின் அத்தனை ட்ராபிக் மத்தியில் ஒரு குட்டி நாய் குறுக்கே கடந்து செல்ல, கார்கள் சீறி "ஏய் நாயே" என்று அதட்டின. அது கவலைப்படவில்லை.

"அந்த நாய்க்குட்டி மாதிரிதான் நீ"

"ஏன், அதுக்குள்ள சான்ஸ்கூட எனக்கில்லைங்கறியா?"

"எங்கப்பாவை உனக்குத் தெரியாது"

(தொடரும்)

“விக்ரம் நிச்சயம்

ஊழலை நெத்தியடியாக விமர்சித்த பல படங்களில் ரமணாதான் இன்னும் சாம்பியன். இந்தப் படத்தின் பாதிப்பில் பல படங்கள் வந்தபடியிருக்க, ரமணாவை இயக்கிய முருகதாஸ், இரண்டு வருடங்கள் மௌனதாஸாக இருந்துவிட்டு, மீண்டும் வந்திருக்கிறார். சூர்யாவை 'கஜினி'யாக வார்த்து வரும் அவரைச் சந்தித்தோம்.

***ர*மணா போன்று ஒரு பிளாக் பஸ்டரைக் கொடுத்த நீங்கள் இரண்டு வருடங்களாக எங்கே இருந்தீர்கள்?**

"இந்த இடைவெளி நானே எதிர்பாராத ஒன்று. ரமணா வெளியான பிறகு, அதைத் தயாரித்த ஆஸ்கர் பிலிம்ஸ் நிறுவனம், தெலுங்கில் சிரஞ்சீவியை வைத்து அதே கதையை இயக்கும்படி கேட்டுக் கொண்டது. எனக்கோ ஒரு மென்மையான காதல் கதையை எடுக்க வேண்டும் என்ற விருப்பம். பெரிய நிறுவனம், பெரிய ஹீரோ என்று தட்ட முடியாமல் ஹைதராபாத்துக்குப் போனேன். ஆனால் சிரஞ்சீவிக்காக தெலுங்குக் கதையில் நிறைய மாற்றம் செய்ய வேண்டும் என்றார்கள். அதற்கு என் மனம் ஒப்புதல் அளிக்கவில்லை. 'உங்களுக்கு வேறொரு புதிய கதை செய்கிறேன்' என்று சொல்லிவிட்டு சென்னைக்கு வந்துவிட்டேன்.

இங்கே வந்ததும் விக்ரமுக்காக ஒரு கதை பண்ணினேன். விக்ரமுக்கு அன்று இருந்த மனநிலையில் கதை பிடிக்கவில்லை என்று சொல்லிவிட்டார். அந்த நிறுவனத்திலிருந்தும் வெளியே வந்து, அஜித்தை வைத்துப் பண்ணலாம் என்று முடிவு செய்து களத்தில் இறங்கினேன். அந்த நேரம் பார்த்து அஜித்துக்கும் அவரது நீண்ட நாள் நண்பர், தயாரிப்பாளர் நிக் ஆர்ட்ஸ் சக்ரவர்த்திக்கும் கருத்து வேறுபாடு வந்து விட்டது. அஜித் ஃபார்முலா கார் பந்தயத்தில் பிஸியாக இருந்ததால், கால்ஷீட் பிரச்னை வந்துவிட்டது. இதனால் 'ஜி' படம் ஏற்கெனவே தாமதமாகிக் கொண்டிருந்த நிலையில், அது முடிந்த பிறகுதான் எனது படம் என்று அந்த நிறுவனத்திலிருந்தும் வருத்தத்தோடு வெளியேறியதில், கடந்த இரண்டு வருடகாலம் எதிர்பார்ப்புகளும், ஏமாற்றமுமாக கழிந்து விட்டது."

அஜித் கார் பந்தயத்தில் பிஸியாக இருந்தார் சரி, ஆனால் விக்ரம் திறமையான

• கஜினி...





"வருத்தப்படுவார்!"

ஏ.ஆர்.முருகதாஸ்



*... படத்தில்...

இயக்குனர்களை உதாசீனப்படுத்தியதாக இதுவரை கிசுகிசு கூட வந்ததில்லையே?

"விக்ரம் நல்ல உழைப்பாளி. ஏனோ தானோ ஹீரோ கிடையாது. நல்ல படம் செய்ய வேண்டும் என்று நினைப்பவர். அவருக்குப் பிடிக்காத விஷயங்கள் கதையில் இருந்திருக்கின்றன. அவரை வைத்துக் கொண்டு மெசேஜ் உடன் ஒரு கமர்ஷியல் படம் பண்ண வேண்டும் என்று நான் நினைத்தேன். அவரோ ராவான மசாலா வேண்டும் என்றார். நான் செய்த தவறு, முதலில் அவருக்குக் கதையின் அவுட் லைனைச் சொல்லியிருக்க வேண்டும். மாறாக, ஆறு மாதம் உட்கார்ந்து முழுத் திரைக்கதையையும் முடித்து, வசனங்களையும் எழுதிய பிறகே கதையைச் சொன்னேன். கதையில் சில திருத்தங்கள் செய்ய வேண்டும் என்றார். படப்பிடிப்பு நெருங்கி விட்ட நிலையில் அவர் எதிர்பார்ப்பு வேறாக இருக்க, 'இந்தக் கதையில் நான் நடிக்கவில்லை' என்று மறுத்துவிட்டார். எங்கள் இருவரது எதிர்பார்ப்பும் வெவ்வேறாக அமைந்து விட்டதால், கொஞ்சம் வருத்தத்தோடு, நிறைய நட்போடும்தான் பிரிந்திருக்கிறோம்."

அப்படியென்ன கதை?

"கஜினிக்குப் பிறகு அந்தக் கதையைத்தான் எடுப்பது என்று தீர்மானமாக இருக்கிறேன். படம் வெளிவரும் போது தென்னிந்தியா முழுக்க மிகப்பெரிய மறுமலர்ச்சியை உண்டாக்கக்கூடிய மெசேஜ் அந்தக் கதையில் இருக்கிறது. அந்தக் கதை, தனக்கான திரைக்கதையைத் தானே எழுதிக் கொண்டது என்றுதான் சொல்ல வேண்டும். அப்படியொரு அற்புதமான திரைக்கதை. விக்ரம் நடிப்பில் பெரிய ஆள். திரைக்கதையிலும் அவர் பெரிய ஆளாக இருக்க வேண்டும் என்று நாம் எதிர்பார்க்கக் கூடாது. அந்தப் படம் வந்ததும் அதைப் பார்த்துவிட்டு நல்ல கதையை மிஸ் பண்ணி விட்டோமே என்று விக்ரம் நிச்சயம் வருத்தப்படுவார். எனது வருத்தமெல்லாம் சமூக அக்கறையோடு கமர்ஷியல் படமெடுக்க நினைக்கிற இளைஞர்களை, ஹீரோக்கள் நசுக்கக் கூடாது என்பதுதான்."

விஜயகாந்தை மனத்தில் வைத்து ரமணாவை உருவாக்கினீர்கள். இப்போது சூர்யாவை மனதில் வைத்து உருவாக்கப் பட்டதுதான் கஜினியா?

"கரு கிடைத்தபோது அஜித்தை மனதில் வைத்துத்தான் உருவம் கொடுக்க ஆரம்பித்தேன். இப்போது சூர்யாவின் பரிணாம வளர்ச்சியைப் பார்க்கும்போது, இந்தக் கதைக்காக அசகாய சூரர்போல பல வித்தைகளை இயல்பாகச் செய்து

அசத்துகிறார். பாத்திரத்தோடு கன கச்சிதமாகப் பொருந்திவிட்டார்."

'கஜினி சூர்யா'வின் ஒப்பனையைப் பார்த்தால் ஹாலிவுட் ஹீரோ டாம் க்ரூஸ் நினைவுக்கு வருகிறாரே?

"ஒரு இளம் தொழிலதிபர். இங்கிலீஷ் பேட்டர்னில் ஹைடெக்காக இருக்கிற ஒரு ஹீரோ. தனக்குத் தொடர்ந்து தொல்லைகள் தரும் தொழில் எதிரியை இவர் எவ்வளவு முயன்றும் அழிக்க முடியவில்லை. என்றாலும் கஜினியைப் போல தொடர்ந்து முயன்று ஜெயிக்கிறார். வீச்சரிவாள், சைக்கிள் செயின் எல்லாவற்றையும் தூக்கிப் போட்டுவிட்டு, கொஞ்சம் ஸ்டைலான ஆக்ஷன் செய்யும் ஹீரோ. இப்படியும் ஒரு தமிழ்ப் படம் இருக்கலாமே என்று யோசித்ததால், இந்த முறை புதிய தொழில்நுட்பக் கலைஞர்களோடு இறங்கியிருக்கிறேன். செம ஸ்டைலான படம். இதிலும் புதிய சூர்யாவைப் பார்க்கலாம்."

டூயட் இல்லாமல் படமெடுக்கிற துணிச்சல் இந்தப் படத்திலும் உண்டா?

"நிச்சயமாக! ஒரு கதையில் பாடல் வைக்கிறோம் என்றால், அது டூயட்டாக இருக்க வேண்டும் என்கிற அவசியம் இல்லை. ஹீரோ, ஹீரோயின்களை வெளிநாட்டு லொகேஷன்களில் ஆட விடுவதில் எனக்கு உடன்பாடு இல்லை."

ரமணாவுக்கு இளையராஜாவின் பின்னணி இசை பெரிய பலமாக இருந்தது. கஜினியில் ஏன் ஹாரிஸ் ஜெயராஜுக்கு மாறினீர்கள்?

"ரமணாவுக்கு ஒரு சீரியஸ் ரீ ரெக்கார்டிங் தேவைப்பட்டது. இதில் மாடர்னும், ஃபான்டசியும் கலந்த இசை தேவைப்படுகின்றன. கதை அப்படி. தவிர இளையராஜா போன்ற மாபெரும் கலைஞரோடு ஒரு படத்திலாவது பணிபுரிய வேண்டும் என்று ஆசைப்பட்டேன், அது நிறைவேறி விட்டது."

ரமணா படத்தின் மூலம் நீங்கள் அதிகம் சந்தித்தது பாராட்டுக்களையா... மிரட்டல்களையா?

"பாராட்டுக்களை விட கசப்பான அனுபவங்கள்தான் அதிகம். அதில் ஒன்றை மட்டும் சொல்கிறேன்... தாத்தா, அப்பா காலத்திலிருந்து, சிறிய அளவில் எங்கள் ஊரில் (கள்ளக்குறிச்சி) நகைக்கடை நடத்தி வர்றோம். இப்போது என்னோட தம்பிதான் பார்த்துக்கொள்கிறார். ரமணா படம் போலீஸ்காரர்களை ரொம்பவே டிஸ்டர்ப் பண்ணிவிட்டது. முன்னே பின்னே பார்த்தே இருக்கமாட்டோம், அதுமாதிரி பெட்டி கேஸ் கிரிமினல்களைக் கூட்டி வந்து, 'நீ திருட்டு நகை வாங்கியிருக்கே... எவ்வளவு அடிச்சாலும் உன் பேரைத்தான் சொல்றான்' என்று மூன்று மாதத்துக்கு ஒருமுறை வழக்குப் போடுகிறார்கள். ஒரு திருடன் வார்த்தையை நம்பும் இவர்கள், ஒரு வியாபாரியின் வார்த்தையை நம்ப மாட்டேன் என்கிறார்கள். காவல் துறையில் இருக்கும் சில நல்ல அதிகாரிகளிடம் விஷயத்தைக் கொண்டு போனால், கொஞ்ச நாள் சும்மா இருக்கிறார்கள். பிறகு திரும்பவும் வந்து விடுகிறார்கள்.

ரமணாவுக்கு சிறந்த படம் என்று முதல்வர் கையால் விருது வாங்கிக் கொண்டு வீட்டுக்கு வந்தால், யதார்த்தம் வேறு மாதிரி இருக்கிறது. என்னால் எனது குடும்பம் பாதிக்கப்படுகிறது. இதற்காகவெல்லாம் சமூகம் மீதான விமர்சனத்தை நான் கொஞ்சமும் சுருக்கிக் கொள்ளப் போவதில்லை."

பேட்டி : ஜெய்

படம் : ஸ்ரீஹரி

"என் பையன் எம்.பி.பி.எஸ். படிக்கணும்னு உயிரை வாங்கறான்."

"அப்ப கட்டாயம் டாக்டராயிடுவான்னு சொல்லுங்க!"

- வி.எஸ். அனந்தராமன்



வேலை

படுதலம் சுகுமாரன்

வீட்டுத் தோட்டத்தில் கொஞ்சம் வேலை இருந்தது.

"தோட்ட வேலை தெரிஞ்ச ஆள் இருந்தால் அனுப்பி வை" என்று நாராயணனிடம் சொல்லி வைத்திருந்தேன்.

ஓர் அதிகாலை நேரத்தில் அவன் வந்து "ஆள் கேட்டிருந்தீங்களாமே" என்றான்.

"நாலு தென்னை மரத்துக்கு தண்ணி பாய்ச்ச வசதியா வாய்க்கால் பிடிச்சு விட்டு, பூச்செடிக்கு மத்தியில கொஞ்சம் கொத்தி விடணும். என்ன கேட்பே?" என்றேன்.

"சொத்துல பாதியா கேட்கப் போறேன். வேலையப் பார்த்துட்டு கூலி கொடுங்க சார்" என்று தோரணையாகப் பேசிவிட்டு மண்வெட்டியும் கடப்பாரையும் வாங்கிக் கொண்டு தோட்டத்துப் பக்கம் போனான்.

எட்டு மணி வாக்கில், தோட்டத்தை எட்டிப் பார்த்த எனக்கு பகிரென்றது. என்ன கண்றாவி இது... நாராயணன், டெலிபோன் டிபார்ட்மெண்டில் குழி வெட்டிப் பழகிய ஆளை அனுப்பி வச்சுட்டாரா என்று பதறிக்கொண்டு தோட்டத்துக்கு விரைந்து,

"இந்தாப்பா... உன்னை பக்கிங்காம் கால்வாயா வெட்டச் சொன்னேன். லேசா ஒரு காவாய் பிடிக்கச் சொன்னால், மரமே சாயற அளவுக்குப் பள்ளம் பறிச்சிட்டியே... அதை மூடு முதல்ல..." என்றேன்.

"என்னா சார், ஒண்ணுக்கு ரெண்டா வேலை வைக்கிறீங்க" என்று சலித்துக் கொண்டே, தோண்டிய குழியில் மண்ணை வாரிக் கொட்டினான். குழி அடைந்து போனது. இருந்த கால்வாயும் காணவில்லை.

"ஏய்... என்ன வேலை செய்யற நீ...? கொண்டா மண்வெட்டியை..." என்று வாங்கி, நானே அளவாய் ஒரு கால்வாய் பிடித்துக் காண்பித்தேன். கிணற்று மேட்டில் கால்மேல் கால் போட்டு உட்கார்ந்து கொண்டு "நீ கூட நல்லாத்தான் வேலை செய்யற சார்" என்றான் அவன்.

நான் முழுக்க அவன் கூடவே இருந்து முக்கால்வாசி வேலைகளை நானே செய்து முடித்தபின், "கூலி கொடுங்க சார், போவணும்" என்று பரபரத்தான்.

அழுதுகொண்டே நூறு ரூபாய் கொடுத்தேன்.

"மீதி...?" என்றான்.

"நீ செஞ்ச கால்வாசி வேலைக்கு இதுவே அதிகம்... நூறு ரூபாய் போதாதோ..."

"நான் மம்முட்டில கை வச்சாலே இருநூத்தம்பது ரூபாய் சம்பளம். நாராயணன் சார் சொல்லலையா?" மிரட்டல் தொனியில் கேட்டுப் பறித்துக் கொண்டான். அதை விடக் கொடுமை, போகும்போது,

"வேறு எதனா வேலை இருந்தாலும் சொல்லி அனுப்புங்க சார்..." என்று சொல்லி விட்டுப் போனான். ○



திரையுலக நினைவுகள்
அந்த நாள் ஞாபகம்
17

நாகேஷின் அழுகை!

ஏவி.எம். சரவணன்

சம்பள விஷயத்தில் நான் மசிந்து கொடுக்காதது நாகேஷுக்கு வருத்தம் ஏற்படுத்தி விட்டது போலும். உடனே என்னைப் பார்த்து சவால் விட்டார்.

"அஞ்சாயிரத்தில் இருந்து ஆறாயிரத் துக்கு, ஒரு ஆயிரம் ரூபாய்க்காக அரை மணி நேரம் வாதாடினீர்கள். ஆனா, நான் என்ன சம்பளம் கேக்கறேனோ, அதை அப்படியே கொடுத்து என்னை நீங்க 'புக்' பண்ற காலம் வரத்தான் போகுது. இதை நான் திமிர்ல சொல்லலே... தன்னம்பிக் கையில சொல்றேன்..."

அவரது தன்னம்பிக்கை எனக்கு மிகவும் பிடித்திருந்தது. 'நானும் ஒரு பெண்'ணில் நாகேஷ் அபார பர்ஃபாமென்ஸ் கொடுத்து அசத்தினார். தங்கையைப் பார்க்க முடியவில்லை என்ற வேதனையில் நாகேஷ் அழுவது போல ஒரு ஸீன் வைத்திருந்தார் திருலோகசந்தர். "வேணாம் ஸார்... அழற சீன் எனக்கு வேணாம். சரிப்பட்டு வராது. நான் அழுதா ஜனங்க சிரிச்சிடுவாங்க. ஸீனே கெட்டுப் போயிடும். இப்படித்தான் நான் முன்னே ஒரு படத்தில் ஒரு ஸீன்ல அழப் போய், ஜனங்க சிரிச்சிட்டாங்க. வீணா ரிஸ்க் எடுக்காதீங்க" என்று கேட்டுக் கொண்டார் நாகேஷ்.

"இல்லை நாகேஷ். இது அப்படியில்ல. ஜனங்க நிச்சயமா ஏத்துப்பாங்க. உங்க ளால பர்ஃபார்ம் பண்ண முடியும். பண்ணுங்க" என்று திருலோக் நாகேஷை கன்வின்ஸ் செய்தார்.

அந்தக் காட்சியில் நாகேஷ் அற்புத மாக நடித்தார். யூனிட்டே அசந்து போய் நின்றது. எங்களுக்கெல்லாம் முழுத் திருப்தி. 'காமெடியனுக்குள் இப்படியொரு அற்புத குணசித்திர நடிகரா' என்று வியந்து போனோம்.

படப்பிடிப்பு முடிந்து எடிட்டிங் வேலைகள் ஆரம்பமாயின. என் தந் தையே எடிட்டிங் டேபிளில் அமர்ந்து எடிட் செய்தார்.

அப்போதெல்லாம் ஒரு படத்தின் நீளம் பதினையாயிரம் அடிக்கு மேல் போகக் கூடாது. ஆனால் எடுத்த வரை யில் பார்த்தால் 'நானும் ஒரு பெண்'



• 'சர்வர் சுந்தரம்' படத்தில் நாகேஷ்...

பதினாறாயிரம் அடி வந்திருந்தது. ஆயிரம் அடி நீளத்தை வெட்டியாக வேண்டும். படத்தைப் பார்த்துக் கொண்டு வந்த போது, நாகேஷ் நடித்திருந்த அழுகைக் காட்சி நன்றாக இருந்த போதும் நீளம் காரணமாக-அதை எடுத்தாலும், படத்தின் வேகம் குறையாது என்பதற்காக - அந்தக் காட்சியில் கத்திரி போட அப்பச்சி முடிவு செய்தார்.

அருகிலிருந்த இயக்குனர் திருலோக சந்தருக்கு அந்தக் காட்சியைப் பலி கொடுப்பதில் கொஞ்சங்கூட உடன்பாடே இல்லை.


"தயவு செய்து இந்தக் காட்சியை விட்டு விடுங்கள். வெட்ட வேண்டாம்'' என்று என் தந்தையிடம் அவர் மிகவும் கெஞ்சிக் கேட்டுக் கொண்டார்.

''ஃபுட்டேஜ் பிராப்ளம் இருக்கே. வேறு என்ன செய்ய முடியும்?"

"நான் வேற ஏதாவது ஒரு காட்சியை வெட்டி அந்தப் பிரச்னையைத் தீர்க்க ஹெல்ப் பண்றேன். ஆனா நாகேஷ் அற்புதமா நடிச்சிருக்கிற அந்த ஸீன் கண்டிப்பா படத்தில் இருக்கணும்" என்று திருலோக் வாதிட்டார்.

ஒரு காட்சிக்காக ஓர் இயக்குனர் இவ்வளவு தீவிரமாக வாதிட்டார் என்றால், அதில் நாகேஷின் நடிப்பு எப்படி இருந்திருக்கும் என்பதை ஊகித்துக் கொள்ளலாம்.

படத்தில் மிகப்பெரிய வரவேற்பைப் பெற்ற காட்சிகளில், நாகேஷின் அந்த



அழுகை ஸீன் சிறப்பிடம் பெற்றது. "அந்த ஸீன் தந்த இன்ஸ்பிரேஷனில்தான் நான் 'சர்வர் சுந்தரம்' எழுதினேன்'' என்று இயக்குனர் கே.பாலசந்தர் 'பேசும் படத்'தில் ஒரு முறை எழுதிய கட்டுரையில் குறிப் பிட்டிருந்தார்.

அந்தப் படத்தின் இசையமைப்பாளர் சுதர்ஸனம் மாஸ்டர். எங்கள் நிறுவனத்தின் ஆஸ்தான வித்வான் அவர் என்றாலும் மிகையில்லை. பெரும்பாலும் அவர் நல்ல வரிகளுக்கு உற்சாகமாக ட்யூன் போடுவார். அவரிடம் செங்கல்வராயன் என்று ஒரு வயலின் கலைஞர் இருந்தார். அவர் மாஸ்டரின் உதவியாளரும் கூட. உதவியாளராக இருந்தாலும், செங்கல்வராயனுக்கும் தனியாக ட்யூன் போடும் திறமை இருந்ததை என் சகோதரர் குமரன் உணர்ந்து அவரை ஊக்கு

• ஏ.சி.திருலோகசந்தருடன் நான்...





• செங்கல்வராயன்

வித்தார். அந்தப் படத்தில் செங்கல்வராயன் போட்ட பல ட்யூன்களை சுதர்ஸனம் மாஸ்டர் பயன்படுத்திக் கொள்ளும்படி செய்ததில் சகோதரர் குமரனுக்குப் பெரும் பங்குண்டு. என் சகோதரர் குமரனுக்கு இசை ஆர்வம் அதிகமிருந்ததால், அந்தத் துறையின் பொறுப்பை அப்பச்சி எப்போதும் முழுமையாக அவரிடம் விட்டு விடுவார்.

'நானும் ஒரு பெண்' படத்தில் 'கண்ணா... கருமை நிறக் கண்ணா' என்ற பாடல் பெரும் புகழ் பெற்றதை அனைவரும் அறிவார்கள். ஆனால், அந்தப் பாடலின் முதல் வரி உண்மையில் 'கமலவதனா' என்றுதான் எழுதப்பட்டிருந்தது. வேறொரு கவிஞர் எழுதியிருந்தார். அதைவிட இன்னும் 'பெப்'பாக முதல் வரி அமைய வேண்டும் என்று முடிவு செய்து, கண்ணதாசனை எழுதச் சொன்னோம்.

சிச்சுவேஷனை மிகச் சரியாக மனத்தில் வாங்கிக்கொண்டு, 'கண்ணா... கருமை நிறக் கண்ணா' என்று அருமையானதொரு வரியைத் தந்தார் கண்ணதாசன். 'தானும் கறுப்பு. கிருஷ்ணனும் கறுப்பு. இதைத்தானே அந்தப் பொண்ணு சொல்றா? இது போன்ற இடங்களில் கத்தி வளைக்காம தேங்காய் உடைக்கிற மாதிரி பட்டுன்னு போட்டு விஷயத்தை உடைச்சிடணும்' என்று அந்த வரிக்கு விளக்கமும் தந்தார் கவியரசர்.

'நானும் ஒரு பெண்' நாங்கள் எதிர்பார்த்த படியே நல்ல வெற்றியைப் பெற்றது.

அதையே தெலுங்கில் எடுத்தோம். எஸ்.வி. ரங்காராவ் அவர்களோடு பார்ட்னர்ஷிப்பில் நாங்கள் அந்தத் தெலுங்குப் படத்தைத் தயாரித்



• ரங்காராவ் - சாவித்திரி... நானும் ஒரு பெண் (தெலுங்கு)

தோம். சாவித்திரி, என்.டி.ராமாராவ் நடித்தார்கள்.

அதன் பிறகு 'நானும் ஒரு பெண்'ணை ஹிந்தியிலும் எடுத்தோம். 'மை பி லட்கி ஹூம்' என்ற பெயரில் நானும் ஒரு பெண் ஹிந்தியில் வெளியானது.

தமிழில் விஜயகுமாரி நடித்தபோது ரொம்பவும் ஃப்ரெஷ்ஷாக இருந்தது. அவர் அப்போது மிகப்பெரிய ஸ்டார் வேல்யூ இல்லாத நடிகை என்பதுதான் அந்த ஃப்ரெஷ்னஸுக்குக் காரணம். எனவே விஜயகுமாரி முன் நிற்காமல், அவர் ஏற்றிருந்த பாத்திரமே மக்கள் மனத்தில் நின்றது.

ஆனால் தெலுங்கில் என்.டி.ஆர்., சாவித்திரி... ஹிந்தியில் தர்மேந்திரா, மீனாகுமாரி போன்றவர்கள் அப்போது பிரபலமானவர்களாக இருந்ததால், காரெக்டரைவிட அவர்கள்தான் அதிகமாக முன் நின்றார்கள்.

'நானும் ஒரு பெண்' தெலுங்கும், ஹிந்தியும் தோல்விப் படமல்ல என்றாலும், தமிழ் நானும் ஒரு பெண் போல அவை இரண்டும் வெற்றி பெறவில்லை என்பதுதான் உண்மை.

(தொடரும்)

அழகா சிரிங்க!





"என் மனைவி ஒரு பெண் தெய்வம்."

"எப்படிச் சொல்றே?"


"கோபம் வந்தா காளியா மாறிடுவா!"

சுரேஷ் கண்ணா



"நாய் வால்ல ஏன் கல்லை கட்டித் தொங்கவிட்டிருக்க?"

"என் மாமியாரைப் பார்த்து ரொம்பத்தான் வாலாட்டுது!"




அம்பை தேவா



"மனைவி பாத்திரத்தை எடுத்து மேல வீசிட்டாங் கன்னு சொல்லி, அடிக்கடி காயங்களோட வந்து நிப்பீங்களே... இப்போ அப்படி வர்றதில்லையே... உங்ககிட்ட அனுசரிச்சிப் போக கத்துக்கிட்டாங்களா?"

"ம்ஹூம்... நான் கேட்ச் பிடிக்கக் கத்துக்கிட்டேன்."

வீ. விஷ்ணுகுமார்



"உன் காதலிக்கு நாளைக்குக் கல்யாணமாமே! போகலியா?"

"ஊஹூம்"

"ஏன்?"

"அவ என் கல்யாணத்துக்கு வரலியே!"



சுரேஷ் கண்ணா






ஒளியமுக















ஸ்ரீஹரி



முந்தும் ஓ.பி.எஸ்!

தமிழக பா.ஜ.கவை பலப்படுத்தி(!), வரும் தேர்தலுக்குத் தயார்ப்படுத்த, கட்சியின் சார்பாக மாவட்ட வாரியாக மாநாடு நடத்தத் திட்டமிட்டுள்ளது தலைமை. இத்தகைய மாநாடுகளின்போது மாற்றான் தோட்டத்து மல்லிகைகளை கணிசமான அளவில் கொண்டு வந்து, கட்சியில் சங்கமிக்கச் செய்ய வேண்டும் என்று தொண்டர்களுக்கு அன்புக்கட்டளை இடப்பட்டுள்ளது.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் நல்லகண்ணுவிற்கு எண்பது வயது ஆகிவிட்டதை முன்னிட்டு 'நல்லகண்ணு-80' என்ற பெயரில் அவரைப் பற்றிய கட்டுரைத் தொகுப்பொன்று தயாராகி வருகிறது. இதில் அவரது பழைய - புதிய நண்பர்கள் மட்டுமின்றி, சகல தரப்பினரிடமிருந்தும் கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன.

ஜனதா கட்சித் தலைவர் சுப்ரமண்ய சுவாமி, தமிழகத்திலுள்ள தலித் தலைவர்களுக்கு வெளிநாட்டு அமைப்புகளுடன் ரகசியத் தொடர்பு உண்டு என்றும், அவர்களிடமிருந்து அந்தத் தலைவர்களுக்கு பெருமளவு பணம் பட்டுவாடா செய்யப்படுவதாகவும், ஒரு அதிரடி குண்டை வீசியுள்ளார். ஆனால் இந்த விஷயத்தை வழக்கமாக சுவாமி அடிக்கும் ஸ்டண்ட் என்று அலட்சியப்படுத்தக் கூடாதென்று, மேலிடத்திலிருந்து காக்கிகளுக்குத் தகவல் வந்துள்ளது. இதனால் சம்பந்தப்பட்ட தரப்புக்கு பி.பி. எகிறியுள்ளது.

அரசியல்வாதிகள் சினிமாவை இழுத்து விளம்பரம் தேடுவதாக அவர்கள் தரப்பிலிருந்து கேட்கப்பட்ட காட்டமான கேள்விக்கு, திமுக. தரப்பு ஆவேசமாக பதிலளித்துள்ளது. அதில் இருவர் படத்தில் தி.மு.க. தலைவர் பற்றியும், இன்னும் பல படங்களில் பல்வேறு அரசியல் தலைவர்களை கேலி செய்ததும் கவனமாகச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. இதைக் கண்ட உடன்பிறப்புகள், இன்னும் நம் தலைவருக்கு நட்சத்திரங்கள் மீதான ஆத்திரம் தீரவில்லை போலும் என்று பேசி வருகிறார்கள்.

சட்டமன்றத் தேர்தல் எப்போது வேண்டுமானாலும் வரலாம் என்ற பீதி இருப்பதால், இப்பொழுதே அதற்குத் தயாராக இருக்க வேண்டும் என்று சர்வ கட்சியினரும் நினைக்கிறார்கள். இந்த விஷயத்தில் முதலில் களமிறங்கியது அ.தி.மு.க.வினர்தான். தத்தமது தொகுதியில் இருக்கும் அதிருப்தியாளர்களைச் சரிக்கட்டும் நடவடிக்கையில் இறங்கியுள்ளனர் அமைச்சர்கள். இதில் முந்திக் கொண்டிருக்கிறார் ஓ.பன்னீர்செல்வம். முன்பு அவரை எதிர்த்துப் போட்டியிட்ட நபர், இப்போது ஓ.பி.எஸ்.ஸின் எடுபிடியாகி விட்டார்.

- கலை

பாலிடிக்ஸ் பஜார்

குறுந்தகை

கனடா இலக்கிய விருது...

முத்துஸ்வாமி சோமசுந்தரம் என்கிற மாத்தளை சோமு வசிக்குமிடம் ஆஸ்திரேலியா. தேசம் மாறிய போதும் நேசம் தமிழோடுதான். 'அந்த உலகத்தில் இந்த மனிதர்கள், எல்லை தாண்டா அகதிகள், மூலஸ்தானம்' போன்ற அவரது பல நாவல்கள் பரிசு பெற்றவை. உலகம் சுற்றும் தமிழ் ஆய்வாளர். கனடா வழங்கும் கடந்த ஆண்டுக்கான 'தமிழ்த் தகவல் இலக்கிய விருது', தற்போது மாத்தளை சோமுவின் விருதுப் பட்டியலில் புதிதாய்ச் சேர்ந்திருக்கிறது. கடந்த கால் நூற்றாண்டு எழுத்துப் பணிக்கான விருது இது. 'ஐயனார் ஆடு' என்ற தலைப்பில், குலதெய்வத்துக்கு ஆடு வெட்டுவதைப் பின்னணியாகக் கொண்டு ஒரு நாவல் எழுதிக் கொண்டிருக்கிறார் தற்போது.

ஆங்கிலோ இந்திய ஜிஞ்சர்...

தமது ஆணித்தரமான மேடைப் பேச்சின் மூலம் புகழ் பெற்ற வழக்கறிஞர் சுமதி, 'கல் மண்டபம்' நாவல் மூலம் இலக்கிய உலகில் பலரது கவனத்தைக் கவர்ந்தவர். 'ரௌத்திரம் பழகு' என்ற சமுதாய உணர்வு நிறைந்த கட்டுரை நூலின் ஆசிரியர். தற்போது ஆங்கிலோ இந்தியர்களின் வாழ்வை மையமாகக் கொண்டு, 'ஜிஞ்சர்' என்னும் தலைப்பில் வித்தியாசமாக ஒரு நாவல் எழுதி வருகிறார். இதன் பொருட்டு ஏராளமான ஆங்கிலோ இந்தியர்களை அடுத்தடுத்து சந்தித்துப் பேட்டி கண்டு வருகிறார். கையில் டேப், கழுத்தில் கேமரா எனக் குரலாகவும், படமாகவும் அவர் பதிவு செய்து வரும் அனைத்தும், அவர் எழுதும் இலக்கிய ஜிஞ்சரில் கைகொடுக்கப் போகின்றன.



* டி.எஸ்.கோதண்டராமன்



* மாத்தளை சோமு

ஒரு லட்சம் பிரதிகள்...

சி.சு. செல்லப்பாவின் 'எழுத்து' இதழில் எழுதத் தொடங்கியவர் தஞ்சாவூர் டி.எஸ்.கோதண்டராமன். இதுவரை டி.எஸ்.கே., அபர்ணா ஆகிய பெயர்களில் 300 சிறுகதைகள் எழுதியுள்ளார். பல கதைகள் 'நட்சத்திரக் கதைகள்' என சாவியால் பாராட்டப்பட்டவை. இவரது அமுதசுரபி பொன்விழா குறுநாவலைத் தேர்வு செய்தவர், தி.ஜானகிராமன். தற்போது செய்வது ஆன்மிக மொழிபெயர்ப்புப் பணி. ஹிந்தி, சமஸ்கிருதத்திலிருந்து இவர் தமிழில் மொழிபெயர்த்த நூல்கள் கோரக்பூர் கீதா பிரஸ் வெளியீடாக வந்துள்ளன. ஸ்வாமி ராம்ஸுகதாஸின் 'குடும்பத்தில் எப்படி இருக்க வேண்டும்?' என்ற வினா விடை நூல் மட்டும், பத்தாண்டுகளில் ஒரு லட்சம் பிரதிகள் விற்றிருக்கின்றன. அத்யாத்ம ராமாயணம், சுந்தரகாண்டம் இவற்றைத் தொடர்ந்து, தற்போது உத்தவ கீதையைத் தமிழாக்குகிறார் டி.எஸ். கோதண்டராமன்.

- திருப்பூர் கிருஷ்ணன்



* சுமதி

எண்பத்தியெட்டு வயது வரை வாழ்ந்து முடித்த பெரியவருக்கு அன்று ஆடி அமாவாசைப் படையல். மகன் சுந்தரராகவும், மருமகள் வள்ளியம்மையும் போட்டிபோட்டுக் கொண்டு படையலை எப்படி யெல்லாம் தடபுடலாக்கலாம் என்பதில் கருத்தாக இருந்தார்கள். பச்சைப் பசேலென்ற முழு நீள இலையில், ஐம்பத்தியொரு வகை பதார்த்தங்கள். பாதாம் அல்வாவிலிருந்து பத்து தினுசு ஊறுகாய் வரை.

"பாட்டி, இன்னைக்கு நம்ம வீட்டுலே என்ன விசேஷம்?" சோபாவில் உட்கார்ந்து கொண்டு மௌனமாக எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டிருந்த எழுபத்தியெட்டு வயது விசாலாட்சி அம்மாளிடம் கேட்டான் பத்து வயதுப் பேரன் சுகுமாரன்.

"உங்க தாத்தா இன்னைக்கு சாப்பிட வரார்டா கண்ணு. அவருக்குப் பிடிச்சதையெல்லாம் செய்து, படையலா படைக்கப் போறாங்க. அது தான் வீடு இத்தனை அமர்க்களப்படுது." என்றவள்,

"வயசான காலத்துல பெரியவர் ஆசைப்பட்டுச் சாப்பிட்ட ஒரே பண்டமான கடலை மிட்டாய்க்குத் தடை போட்டாங்க. மனுஷன் போனப் புறம் படையலை எதுக்கு பிரம்மாண்டப்படுத்தணும்?" என்றாள்.

பத்மா

விசாலாட்சி அம்மாளுக்கு இருந்த இந்த ஆதங்கம் அவள் வார்த்தை களில் தொனித்தது, பத்து வயதுப் பேரனுக்கு புரிந்திருக்க நியாயமில்லை.

கடலை மிட்டாய்



பெரியவர் பெயரே, பெரிய சாமிதான். கைத் தறிச் சேலைகளின் கனம் கழுத்தை அழுத்த, வீடு வீடாகச் சென்று வியாபாரம் செய்து கால் தேய வசூலுக்கு அலைந்து, பசிக்கும்போது நேரத்தையும் காசையும் மிச்சப் படுத்த, ஒரு நிலக்கடலை மிட்டாய் பாக்கெட் வாங்கித் தின்று தண்ணீர் குடித்து வியாபாரத்தைத் தொடர்வார். கணவனின் சிரமம் தெரிந்து விசாலாட்சி அம்மாளும் திறமையாகக் குடும்பம் நடத்தினாள். ஒரே மகன் சுந்தரராக இருபத் தைந்து வயதை நெருங்கும்போது நகரத்தின் பிரதான பகுதிகளில் மூன்று ஷோ ரூம்கள் சொந்தமாயின. வசதிகள் அதிகமானபோது, ஓய்வில்லாத உழைப்பின் காரணமாக பெரியவர் ஓய்ந்து போனார். எல்லாவற்றையும் மகனிடம் ஒப்படைத்துவிட்டுப் படுத்துவிட்டார். வீட்டில் வசதி பெருகி பாதாம் அல்வா செய்தாலும், பெரியவருக்குப் பிடித்தது நிலக்கடலை மிட்டாய்தான். டாக்டர்கள் பெரியவரைச் சோதித்து விட்டு சர்க்கரை நோய்க்கான வாய்ப்புகள் இருப்பதால், உணவுக் கட்டுப்பாடு தேவை என்று எச்சரித்ததை, சர்க்கரை நோயே பெரிதாக வந்துவிட்டதுபோல் சுந்தரராகவும் மருமகள் வள்ளியம்மையும் ஒரே அடியாகக் கூப்பாடு போட்டார்கள். சின்ன வயதிலிருந்து கடலை மிட்டாய்க்கு அடிமை யாய்ப் போனதுதான் தற்போதைய தள்ளாமைக்குக் காரணம் என்று, எண்பதைத் தாண்டிய பெரியவரைச் சாடினார்கள். 'கையில


காக இருக்கறதாலதானே கடலை மிட்டாய் கிடைக்குது!" என்று சந்தர்ப்பத்தை சாதகமாக்கி, வள்ளியம்மை பீரோ சாவியை இடுப்பில் செருகிக் கொண்டு விட்டாள்.

"விசாலம், ஒரே ஒரு கடலை மிட்டாய் கொடுக்க மாட்டியா?" என்று பெரியவர் கெஞ்சலாகக் கேட்கும்போது விசாலாட்சிக்குப் பாவமாக இருக்கும். மகன் மருமகளிடம் பெரியவருக்காகப் பரிந்து பேசினால் "நான் பிஸினஸ் அது இதுன்னு அலைஞ்சிட்டிருக்கேன். நீங்க கண்டதைத் தின்னு படுத்தீங்கன்னா வள்ளியம்மை ஒருத்தியால என்ன பண்ண முடியும்" என்று பெரியவரோடு விசாலத்தின் மேலும் எரிந்து விழுவான் சுந்தரராகவ. பெரியவரும் கடலை மிட்டாய் கேட்பதை நிறுத்திவிட்டார். யாருக்கும் எந்தத் தொந்தரவும் தராமல் பெரியவர் போன வருஷம் போய்ச் சேர்ந்துவிட்டார். கடைசி இரண்டு வருடம் கடலை மிட்டாய் சாப்பிடாமலே பெரியவர் போனதில், விசாலாட்சிக்குத்தான் மனம் கொள்ளாத ஆதங்கம்.

எல்லாம் தயாரானதும் படையலை நடத்திக் கொடுக்க வந்தவர், "எல்லாம் அமைப்பா வந்திருக்கு. பெரியவர் திருப்திப்படுவார். படையலை காக்காவுக்கு வச்சிட்டு, அது கொத்தினதும் நீங்களும் சாப்பிடுங்க" என்று சொல்லிவிட்டு தட்சணையை வாங்கிக் கொண்டு, அடுத்த கிராக்கிக்காக ஸ்கூட்டரில் விரைந்தார்.

அப்போதுதான் இலையின் நுனியில் புதியதாக ஒரு ஐட்டம் வைத்திருந்ததைப் பார்த்தார் சுந்தரராகவ. கடலை மிட்டாய் வில்லைகள்! "யார்ரா இதை வச்சது?" அப்பன் சுந்தினதைக் கேட்டு

"நான்தான் வச்சேன். தாத்தாவுக்கு ரொம்பப் பிடிச்ச கடலை மிட்டாயை வைக்க மறந்திட்டீங்களே" சுகுமாரன் சொன்னதும் "சுத்த பத்தமா நாம படையலைத் தயாரிச்சிருக்கோம். கடையிலே வாங்கின தண்டத்தை இதோடு சேர்க்கக் கூடாது. எடு முதல்லே" கண்டிப்பாக உத்தரவு போடவே சுகுமாரன் வில்லைகளை எடுத்து விட்டான். படையலுக்காகவே காத்திருந்த மாதிரி, ஒரு அண்டங்காக்கையைப் பார்த்ததும் பெரியவரே நேரில் வந்துவிட்ட சந்தோஷம் எல்லோருக்கும். மொட்டை மாடியில் படையலை வைத்துவிட்டு, காக்கை கொத்துவதைப் பார்ப்பதற்காக கூட்டம் பயபக்தியுடன் தள்ளி நின்றது. கம்பீரமாகப் பறந்து வந்து உட்கார்ந்த காக்கை, தலையைச் சாய்த்து இலையிலிருந்த ஐட்டங்களை இரண்டு முறை பார்த்துவிட்டு, யாருமே எதிர்பார்க்காத வகையில் சுகுமாரன் கையிலிருந்த கடலை மிட்டாயைக் கொத்திக் கொண்டு பறந்தது. ●





"அன்பே சிவத்தால் மன வருத்தம் உண்டு!"

– உமா

கமலா காமேஷின் மகள், நடிகர் ரியாஸ்கானின் மனைவி என்பது போன்ற சுலப அடையாளங்கள் உமாவுக்கு இருந்தாலும், சினிமா, டீ.வி. மாடலிங், மிமிக்ரி, பாப் ஆல்பம், கலை நிகழ்ச்சிகள் நடத்துவது என பல துறைகளிலும் காலடி வைத்து, தனக்கென தனித்துவம் கண்டிருப்பவருடன் ஒரு மினி பேட்டி...

சுலபமாக அழுவதை விட்டுவிட்டு ஏன் 'ஹரே ராமா ஹரே கிருஷ்ணா' போன்ற காமெடி சீரியலிலெல்லாம் நடித்து கஷ்டப்படுகிறீர்கள்?

"என் இரு குழந்தைகளிடமும் நிறைய நேரம் இருக்க வேண்டும் என்பதற்காக 'மருமகன்' சீரியலுக்குப் பிறகு இரண்டு வருடங்கள் எந்த சீரியலிலும் நடிக்கவில்லை. எனக்கு இயல்பாகவே காமெடி நல்லா வரும். ஏதாவது பார்ட்டி, கெட்டுகெதர்னாலே என் ஃப்ரெண்ட்ஸ் என்னை மிஸ் பண்ண மாட்டாங்க. நான் ஒரு ஹியூமரிஸ்ட்டாக்கும்."

'அன்பே சிவம்' தோல்வி உங்களை பாதித்ததா?

"அதன் தோல்வியால் பர்சனலாக எனக்கு எந்த பாதிப்பும் கிடையாது. பாலா சார் 'பிதாமகன்' படத்திற்கு சங்கீதா பண்ணின கேரக்டருக்கு அழைத்தும், அப்போது நான் கர்ப்பமாக இருந்ததால் பண்ண முடியவில்லை. இதுபோல் பெரிய படங்கள் சிலதை இழந்தாலும் 'அன்பே சிவமி'ல் நான் கமலை ஒருதலையாகக் காதலிப்பது போல் வரும் காட்சிகள் சென்னை சத்யம் தியேட்டர் தவிர, மற்ற அனைத்து திரையரங்குகளிலும் நீக்கப்பட்டதில்தான் மனவருத்தம். ப்ச்.. கமல் சாரே மனமுவந்து பாராட்டிய ஸீன் அது."

ரியாஸ்கானை தமிழ் சினிமா சரிவரப் பயன்படுத்துகிறதா?

"இல்லை. தமிழ் சினிமாவில் அவரை யாருக்கும் யூஸ் பண்ணத் தெரியலை. இங்கு ஹீரோக்களுக்குத் தரும் முக்கியத்துவத்தை இதர கேரக்டர்களுக்குத் தருவது கிடையாது. மலையாளத்தில் இந்நிலை இல்லாததால் அங்கு ஹீரோவாகவும் வில்லனாகவும் நல்லா பிக்-அப் ஆகிவிட்டார். அவர் மலையாளி என்பதால், மொழிப் பிரச்னையும் இல்லை. இருந்தாலும் தமிழ் சினிமாவில் ஹீரோவாக நடிக்க ஆர்வமாகவே இருக்கிறார். எங்களுக்குத் திருமணமாகி பதிமூன்று வருடங்கள் ஆனாலும் பலசாலியான அவருக்கு 'ஜிம்'தான் முதல் மனைவி."

அடுத்தது?

"பிரேம்ஜி இசையமைப்பில் 'ஜஸ்வி' என்கிற தமிழ் ஆல்பத்தை ஜோஸ்னா, சக்தி என்ற இரண்டு இளம் பெண்களுடன் சேர்ந்து பாடி, விரைவில் ரிலீஸ் செய்யப் போகிறேன். திருமணமாகியும் நான் இன்னும் ஃபிட்டாகவே இருப்பதால், தமிழ் சினிமாவில் மீண்டும் நடிக்கப் போகிறேன். அதற்கான வாய்ப்புக் கிடைத்தவுடன் உடனே ப்ரஸ்மீட் வைத்து சொல்லிவிடுவேன். எனக்குக் குழந்தை பிறந்த பிறகு நான் நடிக்க மாட்டேன் என்பது போன்ற வதந்திகள் பரவியதால் தான் இந்த ஏற்பாடு."

- செந்தில்

உ



ஸ்ரீ ஸர்வாங்க ஸுந்தரீ ஸமேத
ஸ்ரீ ஸற்குணேச்வர ஸ்வாமி திருக்கோயில்
ஸ்ரீ ஸற்குணேச்வரபுரம், கருவேலி - 609 501.
✆ : 04366 273900

ஏகதின ஸ்ரீ மஹாருத்ர யஞ்ஞம், நவசண்டீ ஹோமம், த்ரிதின லக்ஷார்ச்சனை, திருக்கல்யாண உற்சவம் மற்றும் ஸம்வத்ஸராபிஷேகப் பெருவிழா

தாரண வருடம் பங்குனி மாதம் 12 ஆம் தேதி வெள்ளி முதல் 15ஆம் தேதி திங்கள் முடிய (25.3.2005 - 28.3.2005)

அன்புடையீர்,

ஸ்ரீ ஸற்குணேச்வரர் கைங்கர்ய ஸபா பல நற்பணிகளை ஆற்றி வருகிறது. இவற்றின் தொடர்ச்சியாக நிகழும் தாரண வருடம் பங்குனி மாதம் 12ஆம் தேதி வெள்ளி துவங்கி 15ஆம் தேதி திங்கள் முடிய (25.03.2005 - 28.03.2005) **ஸ்ரீ ஸர்வாங்க ஸுந்தரீ உடனுறை ஸ்ரீ ஸர்குணேச்வர பெருமான் திருக்கோயிலில்** உலக நலனை முன்னிட்டு பல விசேஷ ஹோமங்கள், நவசண்டீ ஹோமம், ஸுதர்சன ஹோமம், த்ரிதின லக்ஷார்ச்சனை, ஏகதின ஸ்ரீமஹாருத்ர யஞ்ஞம், திருக்கல்யாண உற்சவம் மற்றும் ஸம்வத்ஸராபிஷேகம் முதலியன நாட்டில் மக்கள் வாழ்வு சிறக்கவும் அறநெறி ஓங்கவும் இறையருளை வேண்டி நடத்தப்பட இருக்கின்றன. இவை சிறப்பாக நடைபெற அனைவரும் தங்களால் இயன்ற ஹோமம், பராயண, ஜப, அர்ச்சனைகளுக்கான கட்டணங்களையோ அல்லது நன்கொடைகளையோ ஸபாவின் பெயருக்கு மணியார்டராகவோ, காசோலையாகவோ அல்லது வரைவுக் காசோலையாகவோ அனுப்பக் கோருகிறோம். அல்லது கீழ்கண்ட முகவரியில் யாரிடமாவது செலுத்தலாம்.

ரூபாய் 600/-ம் அதற்கு மேலும் நன்கொடை அளிப்பவர்களுக்கு பூஜையில் வைத்து அபிமந்திரிக்கப்பட்ட 10 கிராம் எடையுள்ள வெள்ளி டாலர் பிரஸாதமாக வழங்கப்படும்.

என்றும் இறைபணியில்

Dr. V. ***கிருஷ்ணமூர்த்தி***
பரம்பரை அறங்காவலர்

ஸ்ரீ ஸற்குணேச்வரர் கைங்கர்ய ஸபா (Regd).
32/18, டபீர் புதுத்தெரு, கும்பகோணம் - 612 001.
போன்: 0435-2423297 மற்றும் **கிராமவாசிகள்**

எண்	நிகழ்ச்சி	கட்டணம்
1.	ஸ்ரீமஹா கணபதி ஹோமம்	ரூ.50/-
2.	ஸ்ரீ நவக்ரஹ ஹோமம்	ரூ.50/-
3.	ஸர்வதேவதா ஹோமங்கள்	ரூ.50/-
4.	சிறப்பு அபிஷேகம்	ரூ.50/-
5.	லட்சார்ச்சனை	ரூ.100/-
6.	ஸ்ரீ ஸுதர்சன ஹோமம்	ரூ.100/-
7.	ஸ்ரீ சண்டீஹோமம் (பொது)	ரூ.200/-
8.	ஸ்ரீ சண்டீஜப ஹோம ஸங்கல்பம்	ரூ.250/-
9.	வஸ்த்ரதானம் (ஒரு நபருக்கு)	ரூ.400/-
10.	நவகன்னிகா பூஜை (ஒரு கன்னிகைக்கு)	ரூ.450/-
11.	நவஸுவாஸினி பூஜை (ஒரு ஸுவாஸினிக்கு)	ரூ.600/-
12.	தம்பதி பூஜை (ஒரு தம்பதிக்கு)	ரூ.1000/-
13.	ஸ்ரீ மஹாருத்ரம் ஸங்கல்பம் (ஒரு கணத்திற்கு)	ரூ.1000/-
14.	ஸ்வாமி, அம்பாளுக்கு வேஷ்டி, புடவை (**9x5-9** கஜம்)	ரூ.1000/-
15.	ஸந்தர்ப்பணை (ஒருநாள்)	ரூ.2500/-
16.	திருக்கல்யாண உற்சவம்	ரூ.2500/-
17.	அன்னதானம் (ஒருநாள்)	ரூ.5000/-
18.	ஸ்ரீ மஹாருத்ரம் பூர்ண ஸங்கல்பம்	ரூ.5000/-

குறிப்பு: அட்டவணையில் கொடுக்கப் பட்டுள்ள நிகழ்ச்சிகளில் பங்கு கொள்ள விரும்பும் அன்பர்கள் அவற்றிற்கான தொகையை **"ஸ்ரீ ஸற்குணேச்வரர் கைங்கர்ய ஸபா"**விற்கு மணியார்டர் மூலமோ அல்லது வரைவுக் காசோலை (D.D) மூலமோ அல்லது பொருளாகவோ அனுப்பலாம். அல்லது கீழே கொடுக்கப்பட்டுள்ள முகவரிகளில் ஏதேனும் ஒன்றிற்கு அனுப்பவும்.

G. குஞ்சிதபாதம், FCA.,
G. நடேசன் & கோ. டபீர் மேலத்தெரு,
கும்பகோணம்-612 001
போன்: 0435 2420047

V.L. நாராயண சாஸ்திரிகள்,
25/1 சுப்பாரெட்டித் தெரு,
எஸ்.என்.ஆர். கன்ஸ்ட்ரக்ஷன்ஸ்,
மேற்கு மாம்பலம், சென்னை - 600 033.
போன்: 044-24897125

G. கண்ணன், D/127-A, ராஜமன்னார் சாலை, கே.கே.நகர், சென்னை -78.
போன்: 044-24836495

R. வைத்தியநாதன், மேலாளர்,
இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, பிளாட் நெ. 4,
கதவு எண் 12, 29வது தெரு,
தில்லை கங்கா நகர், நங்கநல்லூர், சென்னை - 600 061. போன்: 044 - 22333361

குடந்தை - பூந்தோட்டம் நெடுஞ்சாலையில் குடந்தையிலிருந்து 21 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது அருள்மிகு ஸற்குணேஸ்வரர் ஆலயம்.

மன்னாதி மன்னன் மகாகணபதி!

விந்திய நாட்டில் மசி பாதினி என்றொரு நகரமிருந்தது. தூமாசுரன்தான் அதற்கு மன்னன். அசுரர்களுக்குத் தலைவன். பயங்கரமான கரிய மேனி படைத்தவன்.


அதே நகரத்தில் மாதவராசன் என்றொரு பிரபு இருந்தான். இவன் மனைவி சுமுதை. நீண்ட காலமாக இவர்களுக்கு மகப்பேறு அமையாததால், சுமுதையை மாதவராசன் வெறுத்தான். மன அமைதி வேண்டி, விநாயகரைப் பிரார்த்தனை செய்து தவமிருந்தாள் சுமுதை. கணேசரும் மனமிறங்கி, "அம்மா... கவலை வேண்டாம். யாமே வந்து உனக்கு மகனாகப் பிறப்போம்'' என்று கூறி மறைந்தார். அதன்படியே, சுமுதை கருவுற்றாள். மாதவராசன் அவளுடன் இனிது வாழ்ந்தான்.

அரசன் தூமாசுரனிடம் கொடுமைக் குணம் தலை எடுக்க, எல்லோரையும் படாதபாடு படுத்தினான். மக்கள் வாய்விட்டு அலறி, இறைவனிடம் பிரார்த்தனை செய்தார்கள். அப்போது அசரீரி, "ஏ.. தூமாசுரனே! கொடுங்கோலாட்சியை முறியடித்து, உன்னைக் கொல்லக்கூடிய மகவு, சுமுதையின் வயிற்றில் வளர்கிறது'' என்று கூறியது.

விண்ணொலி கேட்டு வெகுண்ட தூமாசுரன் வீரர்களுடன் வந்து சுமுதை - மாதவராசன் மீது கணை மழை பொழிந்தான். அப்போது சுமுதையின் குழந்தை கணபதி, தமது செவ்வாயால் இலேசாக ஊத, எண்ணற்ற புகைப்படலங்கள் வெளியாயின. அதனால் திசைகள் யாவும் இருண்டன. தூமாசுரனும் அவனது வீரர்களும் மயங்கி விழுந்து மாண்டார்கள். மன்னனை வீழ்த்திய மகாகணபதி, குழந்தை உருவத்திலிருந்து வளர்ந்து சிறப்பான காட்சி தந்தார். தூமம் என்றால் புகை! தூமத்தை உண்டாக்கியபடியால் 'தூமகேது விநாயகர்' என்று பெயர் பெற்றார். இனிமேல், விநாயகருக்கு அர்ச்சனை செய்யும்போது, 'தூமகேதுவே நமஹ!' என்று போற்றினால், அதற்குப் பின்னால் உள்ள கதையும் ஞாபகத்துக்கு வருமல்லவா?



• செல்வ விநாயகர்



• வலம்புரி விநாயகர்



• ஸ்ரீஜெயகணபதி


எங்க ஊர் பிள்ளையார்



கண்கண்ட தெய்வம்!

சென்னை, மைலாப்பூர் அருண்டேல் தெருவிலிருந்தபடி பக்தர்களைக் காத்து வருகிறார் எங்கள் வலம்புரி விநாயகர். 1984ல் இவருக்குக் கும்பாபிஷேகம் செய்யப்பட்டது. அதன்பிறகு விநாயக சதுர்த்தி, கும்பாபிஷேக ஆண்டு விழா ஆகிய இரு தினங்களிலும் விசேஷ அபிஷேகமும், பூஜையும் சிறப்பாக நடைபெறுகின்றன. மைலாப்பூர் மக்களின் கண் கண்ட தெய்வமாக இருந்து எங்களைக் காப்பாற்றி வரும் வலம்புரி விநாயகர், சமீபத்திய சுனாமியிலிருந்தும் எங்களைக் காத்து நின்றார். மக்களின் மனங்களில் புகுந்து சுனாமியால் தாக்குண்ட மீனவ மக்களுக்கு உதவ அருள்புரிந்து வருகிறார்.

- சாந்தா ராஜகோபாலன்,
சென்னை



கருணைக் கடவுள்!

வேலூரிலிருந்து சுமார் ஐந்து கிலோமீட்டர் தூரத்திலுள்ள சேன்பாக்கத்தில் அமைந்துள்ளது, அருள்மிகு செல்வ விநாயகர் ஆலயம். இங்கு தான்தோன்றிகளாக - சுயம்பு வடிவங்களாக பதினொரு விநாயகர்கள் அருள்பாலிக்கின்றனர். வேலூர் மற்றும் சுற்றியுள்ள ஊர் மக்கள் அனைவரும் தவறாது நாடி வந்து, இவரிடம் அருள்பெற்றுச் செல்வது வழக்கம். திருமணமான தம்பதிகள், முதலில் இந்த ஆலயத்துக்கு அழைத்து வரப்பட்டு, அருளாசி பெற்ற பிறகே பிற இடங்களுக்குச் செல்வது இப்பகுதியில் நிலவி வரும் ஐதீகம். வேலூர் வணிகர்கள் பலர் புதுக் கணக்கு, புது வணிகம் துவங்கும் முன், கணக்குப் புத்தகங்கள், கடையின் சாவி போன்ற வற்றை செல்வ விநாயகரின் பாதங்களில் வைத்து வணங்கிய பிறகே எடுத்துச் செல்கிறார்கள். அனைவருக்கும் கருணைக் கடவுளாக விளங்கும் செல்வ விநாயகனைப் போற்றித் துதிப்போமாக!

- காமாட்சி சத்தியநாராயணன்,
வேலூர்

நர்த்தன நாயகன்!

அம்பலவர் நடனமாடி மகிழ்விக்கும் சிதம்பரம் மாநகரின் ஈசான்ய மூலையின் புதுத்தெரு முச்சந்தியில் அருள்பாலித்து வருகிறார் ஸ்ரீஜெயகணபதி. நர்த்தனக் கோலத்தில் வலது காலும், இடது கரமும் தூக்கிய வண்ணம், அங்குச பாசாங்குசம் கைகளில் ஏந்தி காட்சி தருகிறார். ஐங்கரனின் வலதுபுறத்தில் மாமுனி ஒருவர் வழிபடுவதாக உள்ள சிற்ப அமைப்பு அழகும், அருளும் கூட்டுகிறது. எந்திரப் பிரதிஷ்டைக்கு மேல் வீற்றிருக்கும் இந்த முழு முதற் கடவுளை எல்லா மதத்தினரும் கொண்டாடுவது தனிச்சிறப்பு.


- அரு. இராமநாதன்,
சிதம்பரம்

தண்ணீரானவன்!

விநாயகரின் தந்தை சிவபெருமான் திருவானைக்கா என்னும் திருத்தலத்தில், லிங்க வடிவில் தண்ணீருக்குள் இருப்பது போல், ஆந்திர மாநிலம் சித்தூரிலிருந்து பன்னிரண்டு கி.மீ. தூரத்தில் உள்ள வரசித்தி விநாயகர் கோயில் மூலவரான பிள்ளையார், முழங்கால் வரை தண்ணீருக்குள் இருந்தபடி அருள்பாலிக்கிறார். பிள்ளையாரைச் சுற்றி தண்ணீர் இருப்பதால், அர்ச்சகர் அந்தத் தண்ணீரை அள்ளி பக்தர்களுக்கு புனித தீர்த்தமாகத் தருகிறார். இதுபோல் தண்ணீருக்குள் காட்சி தரும் விநாயகர் வேறு எங்கும் இல்லை என்கிறார்கள். இந்தப் பிள்ளையார் கண்களுக்குத் தெரியாமல் வளர்ந்து கொண்டேயிருப்பதாகவும் சொல்கிறார்கள்.

- எஸ்.லதா சம்பத்குமார்,
திருச்சி

புக்ஷெல்ஃப்





இது ராஜபாட்டை அல்ல! - சிவகுமார்

அனுபவித்த வறுமை, சிறுமையையெல்லாம், பெருமையும் புகழும் சேர்ந்த பின்பு சொல்லிக்கொள்ளக் கூச்சமிருக்கும். அந்தக் கூச்சத்தையும் துடைத்து, தான் பொறாமை கொண்டதைக் கூடத் தயங்காமல் ஒப்புக்கொள்ள வைத்திருக்கிறது சிவகுமாரின் உண்மையும் நேர்மையும். அதே நேரத்தில் உடன் வந்தவர்கள் அந்த மாய உலகில் உருண்டு புரண்டு விழுந்ததைப் பெரிது பண்ணாமல், உயர்ந்தவற்றையே பேசவும் வைத்திருக்கிறது. இப்படிப்பட்ட வரலாறை 'இது ராஜபாட்டை அல்ல' என்று சொன்னால் எப்படி ஒப்புக்கொள்வது? தன்னையுணர்ந்து, தன்னைச் சுற்றியுள்ளதையும் நன்குணர்ந்து நடந்ததால் சிவகுமாரின் பாதை ராஜபாட்டைதான்!

ஆனால், தமது சொந்த குறை - நிறைகளை விண்டுரைத்த அளவுக்குப் பிறருடையதை அலசவில்லை நூலாசிரியர்.

திரையுலக ஜாம்பவான்கள், கொடி கட்டிப் பறந்த கதாநாயக, நாயகியர், வில்லாதி வில்லன்கள், இயக்குநர்கள், தயாரிப்பாளர்கள் என்று அத்தனை பேரையும் நல்லவர்களாக மட்டுமே சித்திரித்திருக்கும் எழுத்து தர்மத்தில், யதார்த்தம் குறைவுபட்டுப் போகிறது. திமிங்கிலங்களும், சுறாக்களும் நிறைந்த உலகிது என்ற முன்னுரைக்கு சற்று முரண்படவும் செய்கிறது. 'வடுவா, உனக்கு எதிரிகளே இருக்க முடியாதுடா' என்று நடிகர் திலகம் வாழ்த்தியதற்கேற்ப, இவர் எல்லோருக்கும் நல்லவராய் இருந்திருக்கிறார், இருக்கிறார்.

இடையிடையே அசத்தும் ஓவியங்கள் ஓவியக்கலைக்கு திரையுலகால் ஏற்பட்ட இழப்பை சத்தம் போட்டுச் சொல்கின்றன. வரி பிசகாமல் வரும் வசனங்கள் பழைய படங்களையும், கலைஞர்களையும் எண்ணி பெருமைப்பட வைக்கின்றன.

இப்போதைய டிஜிட்டல் திரையுலகில் செல்லுலாய்டு கனவுகளோடு நுழையும் இளைய தலைமுறைக்கு உதவும் நூல். சுழலாக இழுத்து, சுனாமியாகத் தாக்கிச் சுழற்றியெறிந்துவிடும் அந்த உலகில், ஸ்திரமாக நிற்கவும், உண்மையில் நடிப்புக் கலைக்கு உயிர் கொடுக்கவும் நினைத்து வருபவருக்கு, வழிகாட்டும் சுயவரலாறு.

- அல்லயன்ஸ்,
244, ராமகிருஷ்ணா மடம் சாலை,
சென்னை - 4. விலை ரூ. 350/-

நானும் வீரப்பனும் - நக்கீரன் கோபால்

சந்தனக் கடத்தல் மன்னன் வீரப்பனின் பலம், பலவீனம் உணர்த்தும் பத்திரிகையாளரின் அனுபவங்கள். காட்டுக்குள் நடக்கும் வீரப்பனுடனான சந்திப்புகளை நூலாசிரியர் விவரிக்கும்போது, நேரில் பார்த்த பிரமை. அபூர்வ புகைப்படங்கள் கட்டுரைக்கு உயிர் கொடுக்கின்றன. மனிதர்களையும், மரங்களையும் சாய்த்து, மூன்று மாநில காவல் துறைகளால் விரட்டப்பட்டு, காட்டு மனிதனாகவே வாழ்ந்து, கொலையுண்டவனை திசை திருப்ப முயன்ற பத்திரிகையாளரின் சாகசங்கள் நன்கு பதிவு செய்யப்பட்டுள்ளன. வீரப்பனும் மனிதன்தான் என்று வாதிடுவோரும், மனித உரிமை ஆணையம் மூலம் போரிடுவோரும், வாசிக்க வேண்டிய நூல்.

- நக்கீரன் பப்ளிகேஷன்ஸ்,
சென்னை - 14 விலை ரூ. 45/-

- விஷ்வக்

கலகல தொடர்

மாம் ஃப்ரம் இண்டியா 7

அனுராதா ரமணன்

பெரிய 'பெங்களூர் கத்தரிக் காய்'க்கு 'கோட் சூட்' போட்டாற்போல இருந்தார் பரமேஸ்வரனுடன் வேலை பார்த்த ராஜகோபாலன். பக்கத்திலேயே நெருப்புக் குச்சியை நிறுத்தி வைத்த மாதிரி அவரது பாரியாள்.

துக்கத்தில் கண்கள் சிவக்க, மூக்கு விடைக்க, சவலைக் குழந்தை மாதிரி விமான நிலையத்தில் அழுது கொண்டு நின்ற பரமேஸ்வரனை, வினோதமாகப் பார்த்தனர் அவர்கள் இருவரும்.

"எல்லாரும் பார்க்கறா... அசடாட்டம் அழாதீங்கோ... பார்த்துண்டேயிருங்கோ... நம்ம ப்ரியா டெலிவரிக்கு நீங்களும் அங்க..."

"குழந்தைக்கு கிலுகிலுப்பைய ஆட்டற மாதிரி இதையே திருப்பித் திருப்பிச் சொல்லாதே சுகந்தா... அந்த தலைப்பாக் காரன் அங்கே இருக்கற மட்டும் என்னை உள்ளே சேர்க்க மாட்டான்... தெரிஞ்சுதா.. நான் சொன்னதெல்லாம் ஞாபக மிருக்கா..."

"ஆஹா..."

"ரெண்டு நாளைக்கு ஒரு தடவை ஃபோன் பண்ணு. உன் மாப்பிள்ளை யோட டெலிஃபோன் பில் ஏறினாப் பரவாயில்லே..."

"சரி..."

"அந்த 'சிங்' கிழவன் முன்னாடி அடிக்கடி போய் நிற்காதே... அவனோட வம்சத்துல உன்னை மாதிரி ஒரு பொம்பளையைப் பார்த்திருக்க மாட்டான்..."

"போறும். சமர்த்து வழியப் பேச வேண்டாம்..."

"அப்புறம்... இன்னொரு விஷயம்... காதை இப்படிக் கொண்டா சொல்றேன்..."

பரமேஸ்வரன், மனைவியின் காதை இழுத்து, காதோடு சொன்னார்...

"அந்த ஜெர்கின் கோட்டை இழுத்து, எல்லா பட்டனையும் போட்டுக்க வேண்டாம். ரொம்ப குளிருன்னா 'ஷால்' இருக்கு இல்லையா... அதால இழுத்துப் போர்த்திக்கோ, கோட் பட்டன் எல்லாத் தையும் போட்டா, தேனிலவு வைஜயந்தி மாலா மாதிரி இருக்கே நீ... நம்பியார் கணக்கா ராஜகோபாலன் 'ஃப்ராங்க் ஃபர்ட்' வரைக்கும் வர்றான்..."

"அதான் கூடவே அவர் சம்சாரம் வர்றாளே... ரொம்பத்தான் மனசை ஓட விடாதீங்கோ... வீட்டுக்கு பத்திரமாப் போய்ச் சேருங்கோ. எனக்கு ரொம்பக் கவலையா இருக்கு..."

"நீ குழந்தைடீ... உனக்கு ஒண்ணுமே தெரியாது. உன்னை நான் அப்படி வச்சுட்டேன்..." சிறு குழந்தை போல அவர் தேம்ப, விவரம் புரியாத ராஜ கோபாலன் காதுவரை சிரித்தபடி, பரமேஸ்வரனைத் தேற்றினார்.

"எதுக்காகக் கவலைப்படறேன்? நான் ஒருத்தன் கூடவே போறேனில்லையா... அதெல்லாம் மாமிய உள்ளங்கையில ஏந்தினாப்பல கொண்டு போய் 'ஃப்ராங்க் ஃபர்ட் ஃப்ளைட்'லே ஏத்தி விட்டுரு வேன்."

"............"

"ஃப்ராங்க் ஃபர்ட்லே இறங்கறதுக் குள்ளே உங்க ஒய்ஃபுக்கு அமெரிக்கன் இங்கிலீஷ், அமெரிக்கன் கல்ச்சர், அமெரிக்கன் ஃபேஷன் எல்லாம் சொல்லிக் கொடுத்துருவேன். அங்கே யிருந்து உங்களுக்கு ஃபோன் பண்ணறப்ப மாமி சொல்லுவா பாருங்கோ... இந்த ராஜகோபாலனைப் பத்தி..."

இதற்கு மேல் அந்த மனிதனைப் பேச



விட்டால், அங்கேயே பரமேஸ்வரன், அவர் கழுத்தைப் பிடித்தாலும் பிடித்து விடுவார் என்று அஞ்சினாள் சுகந்தா... ஆதலால், தானே வலிய வந்து தடுத்தாட் கொண்டாள்.

"போதுமே... ஃபிளைட்லே ஏறின வுடனே 'பர்த்'லே ஏறிப் படுத்தாத் தூங்கியே போயிடுவேன் நான்..."

இத்தனை நேரமும் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த நெருப்புக் குச்சி, 'விஷ்க்'கென, கிழித்துப் போட்டாற் போலச் சிரித்தது.

"ஃபிளைட்லே 'பெர்த்' கிடையாது. உட்கார்ந்தேதான் போகணும். என்ன, 'ஸீட்'டைக் கொஞ்சம் அட்ஜஸ்ட் பண்ணிக்கணும்..."

"அதான் நான் இருக்கேனே... எல்லா அட்ஜஸ்ட்மெண்ட்டும் நான்... ஆவ்!!!"

பொறுமையிழந்த பரமேஸ்வரன், தன் கையிலிருந்த சுகந்தாவின் 'கேரி பேக்'கை, ராஜகோபாலனின் கால் மீது 'ணக்'கெனப் போட்டார்....

ராஜகோபாலன், சிவபெருமான் போல தூக்கிய திருவடியுடன் ஒரு ஆட்டம் ஆடி ஓயும் வரையில் 'நறநற'வெனப் பற்களைக் கடித்தபடியே பார்த்திருந்த பரமு, மனைவியின் இடுப்பில் கை வைத்து, தள்ளிக் கொண்டு போய் சொன்னார்.

''நான் தப்புப் பண்ணிட்டேன். பாலுக்கு பூனையக் காவல் வச்சாப்பல... சுகீ.... எது வேணுமானாலும் ஏர் ஹோஸ்டஸைக் கேளு கண்ணா... இந்தக் கிராதகன், ஆபீஸ்லே வேலை செய்யறப் பவே, லேடீஸ் ஸீட் பக்கம்தான் காக்கா மாதிரி சுத்துவான்... பத்திரமாப் போயிட்டு வாடி என் தங்கம்..."

கணவரின் முகத்தை, கண் கொண்டு பார்க்க முடியவில்லை சுகந்தாவினால்.

அந்த ஒரு கணத்தில் ப்ரியம்வதாவின் மீது கோபம் கூட வந்தது...

'அப்பாவுக்கும் சேர்த்து டிக்கெட் எடுக்காதோ ஒரு பொண்ணு....'

பெட்டிகளைப் பரிசோதித்து, ஒவ்வொரு பெட்டியின் கைப்பிடியிலும் அடையாள அட்டையைக் கட்டி.... விமான நிலையத்தினுள் செல்லும் வரையில் திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டேதான் சென்றாள் சுகந்தா.

என்னமோ, விமான நிலையத்திலேயே தன் கணவர் மட்டும்தான் தனித்து நிற்பது

போன்றதொரு பிரமை சுகந்தாவுக்கு.

இதுதான் சுகந்தாவின் முதல் விமானப் பயணம்... எல்லாருடனும் சேர்ந்து, ஏதோ குறுகலான சந்துகளில் நடப்பது போல நடந்தாளே தவிர - தான் விமானத்துக்குள் பிரவேசித்து விட்டதே தெரியவில்லை அவளுக்கு.

"இங்கே வேற வரிசை வரிசையா சேர் போட்டிருக்காளே... இங்கேயும் காத்திருக்கணுமா?"

அவள் நெ.குச்சியிடம் கேட்க, அவள், இவளைத் திரும்பிப் பார்த்து, கழுத்தை ஒரு வெட்டு வெட்டி, கால் மாத்திரை புன்னகையை உதிர்த்தாள்.

"நாம இப்ப ஃபிளைட்டுக்குள்ள இருக்கோம். வாசல்லே உங்ககிட்ட கிழிச்சுக் கொடுத்தாரே போர்டிங் பாஸ்... அதுலதான் உங்க ஸீட் நம்பர் இருக்கு."

சுகந்தா சற்றே தடுமாறிப் போனாள். கண்ணைக் கட்டி, காட்டில் விட்டது போல...

இதற்குள் கிழங்கு மாதிரி ஒரு வெள்ளைக்கார ஆசாமி, இவளைப் பார்த்துச் சிரித்தபடி வந்தார்...

'ஐயோ... இவர் யார்... எங்கேயும் பார்த்த மாதிரி தெரியலையே... எதுக்காக என்னைப் பார்த்துச் சிரிக்கிறார்... இது ஏதுடா வம்பு...'

இவள் நினைத்து முடிப்பதற்குள், அந்த மனிதர், இவளைத் தாண்டிப் போய் விட்டார்.

அப்புறம்தான் தெரிந்தது... அமெரிக்கர்களின் முகத்தில் இந்தப் புன்னகை நிரந்தரமென்று...

நல்ல வேளையாக இவளுக்கு ஒதுக்கப்பட்ட இருப்பிடமும் ராஜகோபாலன் தம்பதிக்கு அருகில்தான். விமானப் பணிப்பெண் இவளுக்கு ஸீட் பெல்ட்டை எப்படிப் போடுவது என்று சொல்லிக் கொடுத்துவிட்டு நகர...

சுகந்தா நெ.குச்சியின் காதருகே குனிந்து கேட்டாள்...

"ஃப்ளைட் கிளம்ப இன்னும் நேரமாகுமா? இந்த ஜன்னல் கதவைத் திறந்து விட்டா, வெளில அவர் நிக்கறதைப் பார்க்கலாம்..."

மறுபடியும் நெ.குச்சியின் முகத்தில் அதே ஏளனச் சிரிப்பு...

"முதலாவது... ஃப்ளைட் 'ரன்வே'யில ஓடிண்டிருக்கு. இதோ இப்ப டேக் ஆஃப் ஆயிரும்... அப்புறம், அந்த ஜன்னக் கதவைத் திறந்து ஒரு மண்ணையும் பார்க்க முடியாது. 'சிவனே'ன்னு உட்கார்ந்து, வரிசையா ஏர்ஹோஸ்டஸ் கொண்டு வர்றதை எல்லாம் வாங்கிச் சாப்பிடலாம்..."

அவள் சொல்லி முடிப்பதற்குள் பெரும் சத்தத்துடன் விமானம் மேலெழும்பியது...

சுகந்தாவின் மனசுக்குள் பரமேஸ்வரன் உட்கார்ந்தும், நின்றும், நடந்தும் ஃப்ளாஷ்பேக் காட்சிகளாய் ஓடிக் கொண்டிருந்தார்.

"இதப்பார்! ஏஷியன் வெஜிடேரியன் ஃபுட்னு எழுதிக் கொடுத்திருக்கு. பார்த்து சாப்பிடு. வெஜிடேரியன்தானான்னு கேட்டுக்கோ..."

"எதுக்கு? நான் மிளகாய்ப் பொடி தடவின இட்லி பத்திருபதும், ஒரு பிளாஸ்டிக் டப்பாவுல தயிர் சாதமும் எடுத்துண்டிருக்கேன்..."

"அவ்வளவு எதுக்கு?"

"நன்றாத்தானிருக்கு. என் கூட யார் உட்காரப் போறாளோ, என்னவோ? நான் மட்டும் ஒண்டியாச் சாப்பிட முடியுமா?"

"அசடே... ஃபாரினர்ஸ் எல்லாம் இது மாதிரி கண்டவங்ககிட்ட வாங்கிச் சாப்பிட மாட்டாங்க..."

"ஏன்... அவ்வளவு ஆச்சாரமா?"

"அவ்வளவு ஜாக்கிரதைடீ. நீயும் நானும்தான் மிளகாப் பொடி தடவின இட்லிக்கும், புளியோதரைக்கும் கைய

கண்ணியம் தேவை!


தி.மு.க.சார்பில் நடிகர் சரத்குமாரும் அ.தி.மு.க. சார்பில் நடிகர் எஸ்.எஸ்.சந்திரனும் பாராளுமன்ற மாநிலங்களவை உறுப்பினர்களாக உள்ளனர். சரத்குமார் கதாநாயகனாக நடித்து, சமீபத்தில் வெளியாகியுள்ள 'ஏய்' பட சுவரொட்டி, அவர் மீது கதாநாயகி படுகவர்ச்சியாக உட்கார்ந்த நிலையில் அச்சடிக்கப்பட்டுள்ளது. இச்சுவரொட்டி தமிழ் நாடெங்கும் ஒட்டப்பட்டுள்ளது.

மற்றொரு உறுப்பினரான எஸ்.எஸ்.

வாசகர் குரல்

சந்திரனின் ஆபாசம் கலந்த இரட்டை அர்த்த அரசியல் மேடைப் பேச்சு கேட்போரை முகம் சுளிக்க வைக்கத் தக்கது. பத்திரிகை, கலை மற்றும் இலக்கியம் போன்ற துறைகளில் ஈடுபட்டுள்ளவர்கள் மாநிலங்களவை உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டபின், தத்தமது துறைகளில் கண்ணியத்தைக் காப்பது மிக மிக அவசியம். ஏனெனில் அவர்களின் செயல்பாடுகளினால் அவையின் கண்ணியம் குறைக்கப்பட்டு விடக் கூடாதே!

- இரா. சாந்தகுமார்,
சென்னை - 2



நீட்டுவோம்... அதெல்லாம் அவங்க சாப்பிட மாட்டாங்க. நாமும் 'சாப்பிடு'ன்னு வற்புறுத்தக் கூடாது."

"சரி... உங்க ஃப்ரெண்டு, அவர் பெண்டாட்டி... சாப்பிடுவா இல்லையா?"

"அவனை ரொம்ப உபசாரம் பண்ணாதே. ஒட்டுப் புல் மாதிரி ஒட்டிண்டுடுவான். நானே, ஏண்டாப்பா அவனோட உன்னை அனுப்பறேன்னு என்னை நானே திட்டிண்டிருக்கேன்."

"யாரையும் நம்பாம, எடுத்தெறிஞ்சுப் பேசறதுனாலதான் இன்னிக்கு இப்படி ஒண்டியா நிற்க வேண்டியிருக்கு. அன்னிக்கே, சம்பந்திகிட்ட கொஞ்சம் அனுசரிச்சுப் போயிருக்கலாம். வஞ்சிக் கோட்டை வாலிபன்லே ஜெமினியும், வீரப்பாவும் சண்டை போடற மாதிரி, ஜானவாஸத்துல கட்டிப் புரண்டு சண்டை போட்டாச்சு. இப்ப வருத்தப் பட்டு என்ன பலன்..."

"தப்பு என் மேலேங்கறியா? உனக்கு ஊர்ல இருக்கிற எல்லா ஆம்பிளைங்களும் ஜென்டில்மென். நான்தான் ரவுடி. அப்படித்தானே... இன்னொருத்தன் பெண்டாட்டி வாய்லே ஜிலேபியத் திணிக்கிறவன், எந்த மாதிரியான மனுஷனா இருப்பான்..."

குரல் உயர்ந்துகொண்டே வந்து, திடீரெனச் சரிந்தது. பரமு, சுகந்தாவின் தோள் பையில் தேவையானதைத் திணித்துக்கொண்டே சொன்னார்...

"சுகி... சொல்றேனேன்னு கோவிச்சுக்காதே... அந்த பஞ்சாபிக் கிழவனுக்கு நீ சாப்பாடு பரிமாறுகிற வேலையெல்லாம் வச்சுக்காதே..."

"அதெல்லாம் தப்பு இல்லையா..."

"ஒரு தப்புமில்லே. அவன் பெண்டாட்டி போட்டுக்கட்டும். அவன் எதுடா சாக்குன்னு காத்துண்டிருப்பான். நேத்து ராத்திரி என் சொப்பனத்துல கூட வந்தான். நான் கூட டூயட் பாடிண்டே 'பார்க்'லே நடக்கறேன். இவன் குறுக்கே வந்து, என்னைக் கீழே தள்ளிட்டு உன் கூட ஆடறான்... எப்படியிருக்கும் எனக்கு?"

அப்பொழுது சுகந்தா விழுந்து விழுந்துச் சிரித்தாலும், இப்பொழுது நினைத்தால், கவலையாகத்தான் இருக்கிறது...

'மனுஷர் என் மேல இப்படி உசிரையே வசசிருக்காரே... நான் திரும்பி வர்ற வரைக்கும் என்னையே நினைச்சு, உடம்பைக் கெடுத்துக்காம இருக்கணுமே...'

'இன்னி வரைக்கும் ஒரு காபி கலந்து குடிக்கத் தெரியாது... ரெண்டு வேளை காபிக்கு கீழ் வீட்டுல சொல்லியிருக்கேன்... சாப்பாடு 'மீனாட்சி கேட்டரிங்'லே இருந்து வந்துரும்...'

'அதெல்லாம் பிடிக்குமா? வக்கணையா வேணுமே. யாராவது சமைச்சுப் போட்டாக் கூட, ஒரு மரியாதைக்குக் கூட, 'பேஷ், நன்னாயிருக்கு'ன்னு சொல்லத் தெரியாது... 'இதுல ஒரு கொட்டைப் பாக்கு புளி ஜாஸ்தி', 'பருப்பே இல்லாம வெறுங்கைய அலம்பியே ரசம் வச்சுட்டா'ன்னு ஆயிரம் நட்டாங்கு அடிப்பார்...'

வரப் போகும் ஆபத்தை அறியாமலேயே, சுகந்தா, தனதுக் காதல் கணவரின் நினைப்பிலேயே தூங்கிப் போனாள்...

தூங்கட்டும்... அமெரிக்காவில் இவள் எங்கே தூங்கப் போகிறாள்?

(தொடரும்)



கண்ணீர் வடிக்கும் கிரானைட்!

'எவ்வளவு பெரிய சோகத்துக்கும் கண்கலங்காம இருக்கியே... உன் மனசு என்ன கல்லா?' என்று நாம் பலரைக் கேட்போம். அப்படிப்பட்ட அழுத்தக்கார கல் ஒன்று, சுனாமி பாதிப்பைப் பார்த்து கண் கலங்கினால் எப்படி இருக்கும் என்கிற கற்பனைக்கு உயிர் கொடுத்திருக்கிறார் 'ஓம் எக்ஸ்போர்ட்ஸ்' கிரானைட் நிறுவனத்தின் நிர்வாகி அஷோகன். மிக விலையுயர்ந்த கிரானைட் கல்லைத் தேர்ந்தெடுத்து சிற்பமாக்கியிருப்பவரிடம் பேசினோம்...

"சுனாமி சோகத்தை ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாய் வெளிப்படுத்திக் கொண்டிருக்க, நமக்குத் தெரிந்த கிரானைட்டை வைத்து ஏதாவது செய்யலாமே என்று தோன்றி, இந்தச் சிலையை வடிவமைத்தோம். இண்டியன் ஜெட் பிளாக் மெட்டீரியல்ங்கற காஸ்ட்லி கிரானைட்ஸ்ல செய்த இந்தச் சிற்பத்துல பாலிஷிங், பிட்சிங், கார்விங், கிரைண்டிங் என்கிற நாலு வகை எஃபெக்ட்டும் கிடைக்கும். ஐந்தரை அடி அகலம், நான்கு அடி உயரம் கொண்ட இந்த சிற்பத்தோட மொத்த எடை ஒரு டன். சோகத்தை வெளிப்படுத்தும் கண்ணீர்த் துளி மட்டும் முகத்தை விட்டு மூன்று செ.மீ. வெளியில் வந்திருக்கும்" என்றவரிடம்,

"கண்ணிருக்கும் சிலைக்கு வாய், மூக்கு எங்கே?" என்றோம்.

"கண் மட்டும் இருக்கறதால இதை எந்த நாட்டில் வேணும்னாலும் நினைவுச் சின்னமாக வைக்கலாம். மற்றபடி மூக்கு, வாய் இருந்தா பர்மிஷன் கிடைக்காது. இந்தச் சிற்பத்துல இருக்கும் கண்களை மட்டும் செதுக்கியது ஒருவர், மற்ற பகுதிகளை செதுக்கியது இன்னொருவர். இந்தக் கண் ஓர் இந்தியரின் கண்... ஆகவே இதை எந்த நாட்டில் வைத்தாலும் சட்டென்று இது இந்தியரின் கைவண்ணம் என்பதை சுலபமாகக் கண்டுபிடித்து விடலாம். இதன் மதிப்பு ஐம்பதாயிரம்... ஆனால் இது விற்பனைக்கல்ல... சுனாமி நினைவுச் சின்னமாக இந்த கிரானைட் சிற்பத்தை அரசு எடுத்துக்கொள்ள விரும்பினால் இலவசமாகத் தரத் தயார்" என்றார் அஷோகன்.

- முராரி





வலைபாயுதே

'அம்மா' நம்பர் ஒன்!

உலகின் மிக அழகான ஆங்கில வார்த்தையாகத் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறது 'mother'. நூறு நாடுகள், 35,000 வாக்காளர்கள். தேர்தலை நடத்தியிருப்பது britishcouncil.org. மொத்தம் 70 வார்த்தைகளைத் தேர்ந்தெடுத் திருக்கிறது. passion(2), smile(3), love (4), eternity(5) போன்றவை அடுத்தடுத்த இடங்களைப் பிடித்த வார்த்தைகள். பட்டியலிலுள்ள மேலும் சில ஜாலி வார்த்தைகள்: sweet hearts, lollipop, oi, gum, whoops, kangaroo, hen-night. எல்லாம் ஓ.கே. நம்ம எல்லாருக்கும் புடிச்ச வார்த்தை ஒண்ணு லிஸ்ட்லயே இல்ல, என்ன வார்த்தை அது? ice cream. ஒரு வேளை உருகியிருக்குமோ?!

(அ.தி.மு.க.வினருக்கு தேர்தல் விளம்பரத்துக்கு செம ஐடியா!)

எல்லா அழகும் நிறைந்த நம் இந்தியாவை பக்காவா ப்ளான் பண்ணி சுத்திப் பார்க்கணுமா? tourismofindia.com உதவும். எந்தெந்த இடங் களைச் சுற்றிப் பார்க்க லாம், விமான, ரயில் வசதி, தங்கும் வசதி, ஏஜெண்ட்ஸ் என எல்லாவற்றையும் குறைவின்றிப் பரிமாறு கிறது இத்தளம். விடுமுறை நாட்களுக் கென பீச், சாகசம், பாலைவனம், குளிர்ப் பிரதேசம், ஆன்மிகம், வனப்பகுதி எனப் பல வெரைட்டிகளில் டூர் ஐடியாக்களை அளிக்கிறது. பலரின் சுற்றுலா அனுபவங் களும் கட்டுரைகளாகக் கிடைக்கின்றன.

(நான் கூட போன வாரம் எங்க வீட்டு மொட்டை மாடிக்கு டூர் போனேன். கட்டுரையா எழுதலாமான்னு யோசிக் கிறேன்!)

அரை நூற்றாண்டுக்கு முன்பு 'உலகின் மிக அழகான பெண்' என்ற இடத்தில் இருந்தவர்கள் கிரேஸ் கெல்லி, இன்கிரிட் பெர்க்மென், எலிசபெத் டெய்லர். ஆனால் இன்று உலகமே (இணையமும் சேர்த்துத்தான்) கொண் டாடும் அழகுப் பெண்... வேறு யார்... நம் 'ஐஸ்'தான்! சொல்வது cbsnews.com. ஒருமுறை ஐஸ், கோயிலுக்குச் சென்ற போது, பிள்ளையாரை விட்டுவிட்டு பக்தர்கள் ஐஸை தரிசிக்க வந்துவிட்டார் களாம். அதற்கு ஐஸின் ரியாக்ஷன்...: ''அச்சம்பவம் எனக்குள் குற்ற உணர்ச்சியை ஏற்படுத்தியது. நான் கடவுளிடம் மன்னிப்புக் கேட்டேன். அழகு நிலையற்றது. எனக்குத் தெரியும். காலம் அதை மாற்றும்.''

(அட! என்ன அழகான வார்த்தைகள்!)

- ப்ரெளஸர்

அழகே உன்னை

மிஸ் யூனிவர்ஸ், மிஸ் நெப்ட்யூன், மிஸ் ப்ளூட்டோ என்று தொடங்கி, மிஸ் 7வது குறுக்குத்தெரு, மிஸ் பல்லாவரம் பஸ் ஸ்டாண்டு, மிஸ் ஈஞ்சம்பாக்கம் என்று அழகிப் போட்டிகள் பெருகிக் கொண்டே போகின்றன. நீங்களும் அழகிப் போட்டியில் வெற்றிபெற இதோ சில பிரத்தியேக டிப்ஸ்....

★ கேட் வாக் செய்யத் தெரியாதவர்கள் உடனே ஒரு பூனையை வாங்கிக் கொள்ளவும். அதற்கு தினமும் இரண்டு கவர் நாலரை பால் கொடுத்து போஷாக்காக வளர்த்து வரவும். பின்னர் அது எப்படி நடந்து போகிறது என்பதை அருகிலிருந்து கவனித்து, நொடிக்கொரு முறை குறிப்புகள் எடுத்துக் கொள்ள வேண்டும். பின்பு, படித்ததை ரிவைஸ் செய்துவிட்டு, பூனைக்கு பதில் நீங்கள் ஆவின் பால் குடித்துவிட்டு, பூனையைப் போலவே நடக்க பழகிக் கொள்ளலாம். அடிக்கடி 'மியாவ்' என்று மியாவலாம்.

★ ஆரஞ்சு, தக்காளி, ஆப்பிள் போன்ற பழங்களை அப்படியே எடுத்து முகத்தில் பரபரவென்று தேய்த்துக் கொள்ளலாம். நாளடைவில் முகம் ஞானப் பழம் போல் டாலடிக்கும். பலாப்பழம், அன்னாசிப் பழம், காலிஃப்ளவர் போன்றவற்றைக் கூடுமானவரை தவிர்க்கவும். கொஞ்சம் சிராய்க்கும்.



★ மற்றவர்களை கலவரப்படுத்துவதில்தான் அழகு அடங்கியுள்ளது. உதாரணத்திற்கு, புல் மாதிரி குச்சி குச்சியாக தலை முடி வளர்க்கலாம். கற்றை கற்றையாக செங்குத்தாக எழுந்து நின்றால் கூடப் பரவாயில்லை. உயிரே போனாலும் தலையை வாரிக் கொள்ளக் கூடாது. அப்படியே லூசாக, ஆவி போல் விட்டு விட வேண்டும். ஆங்காங்கே சிறிய கலர் மணிகளைக் கோத்துக் கொள்ளலாம்.

★ குதிரை மட்டும்தான் கொள்ளு சாப்பிட வேண்டும் என்று எந்த விதமான கட்டாயமுமில்லை. நாம் கூட சாப்பிடலாம். கொள்ளை நன்றாக வேகவைத்து, கொஞ்சம் டிகாஷன், சர்க்கரை, ஏலக்காய் சேர்த்து, ஒரு கொதி வந்தவுடன் இறக்கி 'மொடக் மொடக்' என வெறும் வயிற்றில் ஆறு தம்ளர்கள் குடிக்க வேண்டும். பின்னர் தம்ளரைக் கீழே வைத்துவிட்டு பிடரியை சிலிர்த்துக் கொண்டு ரிவர்ஸ் கியர் போட்டு, நூறு கிலோமீட்டர் வரை ஓட

வேண்டும். இப்படியே தொடர்ந்து ஓடினால், உடல் இளைத்து ஐஸ்வர்யா ராய் மாதிரி ஆகிவிடலாம்.

★ இஞ்சி, லவங்கம், கிராம்பு, கொத்துமல்லி, ஒரு பல் பூண்டு எல்லாவற்றையும் தனித்தனியே அரைத்து பின்பு ஒன்று சேர்த்து குழைத்துக்கொள்ள வேண்டும். பின்னர் மெகா சீரியல் எல்லாவற்றையும் பார்த்துவிட்டு, தூங்குவதற்கு முன்பு முகத்தில் அப்படியே அப்பிக் கொள்ள வேண்டும். காலையில் கண் விழித்துப் பார்த்தால் இப்பொழுதுதான் தூங்கி எழுந்ததைப் போல் முகம் ஃப்ரெஷ்ஷாக இருக்கும்.



ஆராதிக்கிறேன்!

லைட்டாக மசாலா வாசனை அடித்தால் பெர்ஃப்யூம் அடித்துக் கொள்ளவும்.

★ விரல் நகங்களைப் பராமரிப்பது மிக முக்கியம். இதற்காக அதிக நேரம் செலவழிக்க வேண்டியதில்லை. ஒரு விரலுக்கு 2 மணி நேரம் என, ஒரு நாளைக்கு 20 மணி நேரம் வைத்துக் கொண்டால்கூடப் போதும். பத்து நிமிடங்களுக்கு ஒரு முறை நகங்களை சோப்பு போட்டு அலம்பிக் கொள்ளலாம். பின்னர் அவற்றை ஊதி ஊதி காய வைத்து, கொஞ்சம் சாம்பிராணி காட்டி விட்டு மென்மையாகத் தடவித் தடவிக் கொடுக்கலாம்.

★ கண்ணுக்கு மை அழகு. அதற்காக ரோட்டில் தார் போடுவதைப் போல குச்சியைக் கொண்டு குழைத்துக் குழைத்து அப்பிக்கொள்ளக் கூடாது. 'லைட்டாக' அப்ளை செய்ய வேண்டும், அவ்வளவுதான். அதேபோல்தான் லிப்ஸ்டிக்கும், உதட்டில் பட்டையடிக்கக் கூடாது. பட்டும் படாமல் மேலுதட்டுக்கு ஒரு நிறமும் கீழுதட்டுக்கு ஒரு நிறமும் அண்டர்லைன் செய்துகொண்டால் போதுமானது. பவுடர்கூட கால் கிலோவிற்கு மேல் போட்டுக்கொள்ளக் கூடாது.


★ அழகிப் போட்டிக்கு பொது அறிவு அவசியம். ஐ.ஏ.எஸ். படிப்புக்குக் கொஞ்சம் குறைச்சலாகப் படித்தால் போதும். சில உதாரணங்கள்... வரலாறு ('இந்தியாவிற்கு சுதந்திரம் கிடைத்து விட்டதா? ஆம் என்றால் எப்பொழுது? இல்லை என்றால் ஏன்?') அஸ்ட்ரானமி ('பௌர்ணமி அன்று நிலவுக்குச் செல்வது சாத்தியமா?')

★ லபோ லபோ என்று கத்த பழகிக் கொள்ளுங்கள். நாளைக்கே தப்பித்தவறி உங்களை அழகியாகத் தேர்ந்தெடுத்துவிட்டால்கூட, புறங்கையை மடக்கி வாயில் வைத்து 'அய்யய்யோ' 'அய்யய்யோ' என்று கேமரா முன்னால் கதற வேண்டும் அல்லவா?

- மருதன்

பதில் மரியாதை

தேன்மொழி



"திருமண வாழ்த்துக்கள்!"

"வாழ்க பல்லாண்டு."

சரவணனும் அவன் புது மனைவி சித்தாராவும் வாழ்த்து மழையில் நனைந்து கொண்டிருந்தார்கள்.

மண்டபம் கொஞ்சம் கொஞ்சமாக காலியாகிக் கொண்டிருந்தது. நெருங்கின உறவினர்கள் மட்டும் ஆங்காங்கே கூடி நின்றனர்.

சரவணன், தனது தம்பியை அழைத்து அவன் காதில் எதையோ கிசுகிசுத்தான்.

ஃபோட்டோகிராஃபர் நெருங்கி வந்தார்.

"ஒரு நிமிஷம் ப்ளீஸ், சில பேர் வரணும்" என்றான்.

"யாருங்க?" புரியாமல் பார்த்தாள் சித்தாரா.

"அதோ அவங்க..." சரவணன் கைகாட்ட திரும்பிப் பார்த்தாள்.

"வாங்க ப்ளீஸ்... எல்லோரும் அப்படி முன்னே வந்து நில்லுங்க. இப்ப எடுங்க ஸார்."

கூட வந்து நின்றவர்களைப் பார்த்ததுமே முகம் மாறியது சித்தாராவுக்கு.

"என்னங்க இது...?" காதோரம் கிசுகிசுத்தாள்.

"என்ன சித்தாரா... இவங்கள்லாம் யாருன்னு தெரியலையா? அவர் நம்ம கல்யாண சமையல்காரர், இவர் பந்தல் போட்டவர்... அதோ அவரு மண்டப வாட்ச்மேன், இவங்க வாத்தியக்காரங்க... எல்லோருமே நம்ம கல்யாணத்துல பங்கெடுத்தவங்க. நம்ம அப்பா, அம்மா, கூடப் பிறந்தவங்க எல்லாம் கல்யாணம் நல்லா நடக்கணும்னு ஆளுக்கொரு வேலையை எடுத்துக்கிட்டு அலைஞ்சாங்க. பணத்தைக் கொட்டிச் செலவழிச்சாங்க. ஆனா இவங்கதான் அந்த வேலைகளுக்கும் பணத்துக்கும் நல்லபடியா நடந்த கல்யாணம்ங்கிற வடிவம் கொடுக்க அக்கறை எடுத்து உழைச்சவங்க. இதுக்குப் பிறகு இவங்களை அதிகம் மீட் பண்ணப் போறதுமில்லை. அதனால இவங்களையும் மதிக்கணும். இவங்க கூட ஒரு ஃபோட்டோ கூடவா நாம எடுத்துக்கக் கூடாது... ம்?"

அவன் பேசப் பேச... அந்த வயதான சமையல்காரர் முன்னே வந்தார்.

"நாங்களும் இதுவரை எத்தனையோ விசேஷங்களுக்கு வேலை செஞ்சிருக்கோம். ஆனா இது மாதிரி ஒரு மரியாதையை யாரும் செஞ்சதில்லை தம்பி... நீங்க ரெண்டு பேரும் நல்லா இருக்கணும்."

கணவனின் உயர்ந்த குணம் சித்தாராவுக்குப் புரிய, "ஸ்டார்ட் கேமரா" என்றாள் உற்சாகமாய்.



மனிதர்கள் ஜாக்கிரதை!

அந்த ஊரில் குடை இல்லாமல் யாரும் வெளியே கிளம்புவது கிடையாது. அப்படி ஒரு பழக்கம்.

ஓர் ஆள் ஓட்டலுக்குச் சாப்பிடப் போனார். கையில் இருந்த குடையை நாற்காலியின் முதுகில் மாட்டினார். அதன்பிறகு கை கழுவிக் கொண்டு வந்தார்.

“இட்லி - வடை கொண்டு வா!” என்றார். கொண்டு வந்தார்கள். சாப்பிட்டு முடித்து புறப்பட்டார்.

வாசல் பகுதிக்கு வந்து காசைக் கொடுத்துவிட்டு, தெருவில் இறங்கி நடந்தார். கொஞ்ச தூரம் போயிருப்பார்.

அப்போதுதான் திடீர் என்று அந்த ஞாபகம் வந்தது. குடையை, சாப்பிட்ட இடத்திலேயே விட்டுவிட்டு வந்துவிட்டோமே...!

உடனே திரும்பி அவசரம் அவசரமாக அங்கே ஓடினார். மூச்சு வாங்கியது. ஓட்டல் வாசலில் நுழைந்தவுடன் கவனித்தார். இவர் மாட்டிய இடத்தில் குடை அப்படியே இருந்தது. ‘அப்பாடா!’

ஆனாலும் எதிரே உள்ள நாற்காலியில் உட்கார்ந்து ஒருவர் சாப்பிட்டுக் கொண்டிருந்தார். இவர் நேராக அந்த மேசையை நெருங்கினார். கொஞ்சம் யோசித்தார்.

எச்சரிக்கை உணர்வோடு... அங்கே சாப்பிட்டுக் கொண்டிருந்தவரைக் கேட்டார்.

“நீங்க... குப்புசாமியா?”

“இல்லீங்க... நான் மாடசாமி!”

“ஓ... அப்படிச் சொல்லுங்க... இதோ இந்தக் குடை குப்புசாமியோடது... ஹி... நான்தான் குப்புசாமி!” என்று சொல்லி ‘லபக்’கென்று அந்தக் குடையை எடுத்துக் கொண்டு அவசரமாக வெளியேறினார்.

இந்தக் காலத்தில் சக மனிதர்களிடம் கூட நாம் இவ்வளவு சாமர்த்தியமான அணுகுமுறையைக் கையாள வேண்டியிருக்கிறது. இல்லையென்றால் ‘அந்தக் குடை என்னுடையது’ என்று சொன்னாலும் சொல்லி விடுவார்கள். அறிவு வளர வளர, எச்சரிக்கை உணர்வும் அதிகமாகத் தேவைப்படுகிறது.

இரண்டு தத்துவப் பேராசிரியர்கள். ஆற்றோரமாக நடந்து வருகிறார்கள். நீண்ட நேரம் பேசிக் கொள்ளவில்லை. பிறகு ஒருவர், மெல்ல ஆரம்பித்தார்.

“ஆற்றில் மீன்கள் எவ்வளவு ஆனந்தமாகத் துள்ளிக் குதிக்கின்றன!” என்றார்.

அவ்வளவுதான்! உடனே அடுத்தவர்,


“மீன்கள் ஆனந்தமாகக் குதிக்கின்றன என்பது உனக்கு எப்படித் தெரியும்? நீ என்ன மீனா?”

“எனக்குத் தெரியும் தெரியாது என்பது உனக்கு எப்படித் தெரியும்? நீ என்ன நானா?”

மறுபடியும் இருவரும் பேசிக் கொள்ளாமலேயே ஆளுக்கொரு திசையில் நடந்து போனார்கள்!

(பேசலாம்)

தென்கச்சி சுவாமிநாதன்



* டாக்டர் ஆர்.முருகேசன்

"மூக்குதான் என்னோட மைனஸ்! சரியான கருடன் மூக்கு! 'ஏய் மூக்கா'ன்னு பட்டப் பேரு வேற!", "வவ்வால் மாதிரி என் காது படு கண்றாவி! தலைமுடி வளர்த்து மறைச்சுப் பார்க்கிறேன், முடியலே!", "நாற்பது வயசுதாங்க ஆகுது! அதுக்குள்ளே கிழத்தோற்றம்! புருவம் சரிஞ்சு, மோவாய்க்குக் கீழே தொழுதொழுன்னு சதை தொங்குது!" - தோற்றத்துக்கு முக்கியத்துவம் தரும் போட்டியான உலகில், அழகு பற்றிய

என்ன விலை அழகே...?

அழுகுரல்கள் இவை. இவற்றை உற்சாகக் குரல்களாக மாற்றிக் காட்டியிருக்கிறது நவீன காஸ்மெட்டிக் சர்ஜரி உலகம். ராமதாஸ், திருமாவளவன் கோபிக்காதிருக்க அதை 'அழகு அறுவை சிகிச்சை' என்று அழைக்கலாம்.

''முகத்தில் மட்டும்தான் என்றில்லை. உச்சி முதல் பாதம் வரை, முப்பத்தாறு வகையான காஸ்மெடிக் சர்ஜெரிகள் இன்று பிரபலம்.'' என்கிறார் சென்னை அப்பல்லோ மருத்துவமனையின் தலைமை காஸ்மெடிக் அறுவை நிபுணர், டாக்டர் ஆர்.முருகேசன். ''பிளாஸ்டிக் சர்ஜரியின் ஒரு பிரிவுதான் காஸ்மெடிக் சர்ஜரி. பிளந்த உதடுகள், கைகால் ஒட்டிப் பிறத்தல் உள்ளிட்ட பிறவிக் குறைபாடுகள், வாகன விபத்து, தீ விபத்து காரணமாக உருமாறிய பகுதிகள் ஆகியவற்றை பழுது நீக்கி, சரி செய்வதுதான் பிளாஸ்டிக் சர்ஜரி. இதிலிருந்து அடிப்படையிலேயே வேறுபடுகிறது காஸ்மெடிக் சர்ஜரி. பழுதோ, குறைபாடோ இல்லாத உருவத்தையும், வெளிப்புற அங்கங்களையும் மேலும் அழகுபடுத்துவதுதான் காஸ்மெடிக் சர்ஜரி.

பிளாஸ்டிக் அறுவை சிகிச்சை நிபுணரைக் காட்டிலும் பொறுப்பும், கவனமும் காஸ்மெடிக் அறுவை சிகிச்சை நிபுணருக்கு இரண்டு மடங்கு அதிகம். ஒரு தேர்ந்த ஓவியனுக்குரிய திறமை அவருக்குத் தேவைப்படுகிறது. உடற்கூறு, பாரம்பரியத் தோற்றம் இரண்டையும் கவனத்தில் கொண்டு, அவர் சர்ஜரியை வடிவமைப்பார்'' எனும் முருகேசன், அழகு அறுவை சிகிச்சையை முக்கியமான மூன்று பிரிவுகளில் அடக்குகிறார்.

''எங்களின் முதல் முக்கியத்துவம் முகம். அதில் சென்டர் ஆஃப் அட்ராக்ஷனாக இருப்பது மூக்கு. சப்பை மூக்கு, பறவை மூக்கு, அகண்ட மூக்கு பெரிய மூக்கு துவாரம் என மூக்கில் தோற்றக் குறைவுகள் உண்டு. இவற்றை மூக்கு துவாரங்கள் வழியே லேப்பராஸ்கோபிக்

* ஃபேஸ் அப்லிப்ட் அறுவை சிகிச்சை



* முன்



* பின்



• முன்



• பின்

முறையில் அறுவை மூலம் சரி செய்கிறோம். மூக்கிலுள்ள குறுத்தெலும்பை சரியான அளவுக்குக் கொண்டு வருவது, குறுத்தெலும்பு குறைபாடுள்ளவர் எனில் சைலாஸ்டிக் இம்ப்ளாண்ட் எனப்படும் செயற்கை குறுத்தெலும்பைப் பொருத்தி விடுதல் இன்று சர்வ சாதாரணம். அதே போல ஒடுங்கிய மோவாய் எனில் கீழ் தட்டுக்கு உள்ளே, வாய் வழியே அறுவை மேற்கொண்டு செயற்கை மோவாயைப் பொருத்துவதால், தையல், தழும்பு என்ற பேச்சுக்கே இடமில்லை. இவை தவிர, பருத்த உதடுகள், தொங்கிய இமைகள், டபுள்சின் எனப்படும் அதீத கன்னங்கள், ஒடுங்கிய கன்னங்கள் அனைத்துக்கும் பொது மயக்க மருந்து (லோக்கல் அனிஸ்தீஷியா) இல்லாமல் மரப்பு மருந்து மூலமே இரண்டு மணி நேரத்தில் அறுவை சிகிச்சை செய்து முடிக்கிறோம். மருத்துவ மனையில் தங்க வேண்டிய அவசியமும் இல்லை" எனும் இவர் "காஸ்மெடிக் சர்ஜரியில் கொழுப்பு நீக்கும் அறுவை

• ஒடுங்கிய தாடைக்கு குட்பை



• முன்



• பின்

சிகிச்சைதான் இந்தியாவில் அதிகம் செய்யப்படுகிறது" என்கிறார். கன்னம், மோவாய்க்குக் கீழே, மார்பகம், வயிறு, தொடை, இடுப்பு உட்பட, கொழுப்பு கூடு கட்டும் பகுதிகளில் அறுவை இன்றி, மூன்று மில்லி மீட்டர் அளவுகொண்ட துளையிட்டு கொழுப்பை சிரிஞ்சு கொண்டு உறிஞ்சி எடுத்து விடுகிறோம்" என்று சொல்லும் டாக்டர் முருகேசன், மகப்பேறுக்கு பிந்தைய தழும்புகளை நீக்க 'டைட் ஸ்கின் சர்ஜரி' என்ற புதிய நுட்பத்தை இந்தியாவில் முதன் முறையாக அறிமுகப்படுத்தியிருக்கிறோம் என்கிறார்.

ஸ்ரெட்ச் மார்க்குகள்தான் என்றில்லை. அம்மைத் தழும்புகள், மச்சங்கள், பருக்கள் விட்டுச் செல்லும் பள்ளங்கள் போன்றவற்றுக்கும்கூட காஸ்மெடிக் சர்ஜரியில் நிரந்தரத் தீர்வுகள் வந்துவிட்டன.

"இவை தவிர வழுக்கைத் தலையில் கொத்துக் கொத்தாக ஹேர் டிரான்ஸ்பிளாண்ட் செய்யும் பழைய முறைக்கு விடை கொடுத்து, இன்று பின் தலையிலிருந்து பெறப்படும் முடிகளை, ஒவ்வொன்றாக முன் பகுதியில் நடவு செய்யு 'மைக்ரோ ஹேர் டிரான்ஸ்ப்ளான்டேஷன்' ஆசியாவில் சென்னையில் மட்டுமே வெற்றிகரமாகச் செய்யப்பட்டு வருகிறது" என்கிறார். "காஸ்மெடிக் சர்ஜரி என்றாலே காஸ்ட்லி சர்ஜரி என்ற தவறான பிரசாரம் செய்யப்பட்டு விட்டது. இருதய அறுவை சிகிச்சைக்கு ஆகும் செலவில், மூன்றில் ஒரு பங்கு மட்டுமே இதற்கு ஆகிறது. நாற்பது முதல் ஐம்பதாயிரம் மட்டுமே அதிக பட்ச கட்டணம்" என்கிறார் டாக்டர் முருகேசன்.

கட்டுரை, படங்கள் : **ஸ்ரீசக்கரம்**

கண்மணி

முகத்தைக் காட்டாமல் குரலால் மட்டுமே மக்களுக்கு அறிமுகமாகி அசத்திக் கொண்டிருக்கிறார். சென்னை சூரியன் எஃப்.எம்.மின் நம்பர் ஒன் ரேடியோ ஜாக்கி.

ஹலோ... நான் கண்மணி பேச றேன். பி.எஸ்.ஸி. கெமிஸ்ட்ரி, எம்.ஏ. சோஷியாலஜி படிச்சிருக்கேன். சிறுகதை, நாவல்கள் நிறைய எழுதினேன். எழுதுறேன்.. எழுதிக்கிட்டே இருக்கேன்... முக்கியமான தகுதி... நான் நல்ல வாயாடி...

குரல் மூலமா பல பேரை சந்தோஷப் படுத்தறதை சந்தோஷமா நினைக்கிறேன். இந்த மிகப்பெரிய வாய்ப்பை எனக்குத் தந்த சூரியன் எஃப்.எம்.ல சேர்ந்ததி லிருந்து, இன்னிக்கு வரைக்கும் என் னோட புரொக்ராமுக்கு புரொடியூசர் மற்றும் ஆர்.ஜேவா நானே இருக்கேன். மக்கள் மனசுல இடம் பிடிச்சிருக்கேன்.

என்னோட ரசிகர்கள்ல ரெண்டு பேர் மறக்க முடியாதவங்க.. ஒருத்தர் என் குரலை மட்டும் கேட்டுட்டு என்னைத் திருமணம் செய்துக்கணும்னு ஆஃபீஸ் வாசல்ல வந்து தர்ணா பண்ணினாரு. ஆனா ஃபோட்டோவைப் பார்த்திருந்தா வந்தே இருக்கமாட்டாருன்னு நினைக் கிறேன். இன்னொருத்தர் தன்னை விதம் விதமா ஃபோட்டோ எடுத்து எனக்கு அனுப்பிட்டு, என்னையும் அதே மாதிரி ஃபோட்டோ அனுப்பச் சொன்னாரு.

ரொமான்ஸ் மாதிரி மூட் அவுட் ஆன சம்பவமும் உண்டு. ஒரு சமயம் நேயர் ஒருத் தர் ஃபோன்ல பேச வேண்டிய டாபிக்கை விட்டுட்டு 'சும்மா ஏதாவது பேசலாம்'னு சொல்லி, ஏதேதோ பேச ஆரம்பிச்சிட் டாரு. அதைக் கேட்டு கிட்டத்தட்ட பத்ர காளி மாதிரி ஆயிட்டேன். இருந்தாலும் அதை வெளிப்படுத்தாம, அவரை கட் பண்ணிட்டேன்.



ஒரு ஹீரோயினுக்கு டப்பிங் தர சமீபத்துல ஒரு சான்ஸ் வந்தது. நானும் டிரையல் பேசிட்டு படத் துக்கு பேர் வச்சாச்சான்னு கேட் டேன். உடனே அங்கிருந்தவங்க எல்லாரும் அதிர்ச்சியாயிட்டாங்க. விஷயம் என்னன்னா, அந்த ஹீரோ யின், சதா. படம் அந்நியன். இருந் தாலும் எனக்கு ஜலதோஷம் பிடிச் சிருந்ததால அந்த மெகா சான்ஸ் மிஸ்ஸாயிடிச்சி.

ஒரு மனுஷனுக்கு அழகா இருக்க வேண்டியது ரெண்டு... ஒண்ணு அவனது மனசு... இன் னொண்ணு அவன் பேசற வார்த்தை. சொல் எதுவாக இருந்தாலும் சரி... அது நேர்த்தியான முறையில தயா ரிக்கப்பட்டிருந்தா அதுதான் உண்மை யான அழகு... இது எல்லாத்துக்கும் பொருந்தும்.. பை..."

பிரமீளா

தமது அழகான குரலால் நடிகைகளுக்கு வாழ்வளிப்பவர். கோலிவுட்டின் நம்பர் ஒன் டப்பிங் ஆர்ட்டிஸ்ட்.



"ஹாய்... ஐயாம் பிரமீளா. இயற்கையாவே நான் எப்பவும் ஏதாவதொரு பாட்டை முணுமுணுத்த படியே இருப்பேன். ஒரு நாள் இதை என் அக்கா வோட பக்கத்து வீட்டுக் காரர் கவனிக்க, அவர் மூலமா 98ல இந்த வாய்ப்புக் கிடைச்சுது. வாய்ஸ் நல்லா இருந்த தால வாய்ப்புகள் தொடர்ந்து வர ஆரம்பிச் சிடிச்சி. இன்னிக்கு தமிழ் சினிமால இருக்குற டாப் ஹீரோயின்ஸ் எல்லாருமே, என் குரல் மூலமாகத்தான் சினிமா வில பேசறாங்க. முக்கியமா சோனியா அகர்வால் மாதிரி நார்த் சைடுலேந்து வர்றவங் களுக்கு, என் வாய்ஸ் கரெக்டா பொருந்திடும்... 'காதல் கொண்டேன்' முடிஞ்ச பிறகு சோனியா அகர்வாலே எனக்கு போன் பண்ணி, 'எனக்கு லைஃப் கொடுத்ததே உங்க வாய்ஸ் தான்'னு சொல்லி நன்றி சொன்னாங்க.

சினிமால மட்டுமில்லாம மௌனிகா, ஸ்ரீபிரியா மஹா லட்சுமி, மெட்டி ஒலி 'லீலா', ஆடுகிறான் கண்ணன் காயத்ரி பிரியான்னு நிறையப் பேருக்கு டெலிசீரியல்ஸ்ல டப் பண்றேன். மனுஷங்களுக்குக் கொடுத்தது பத்தாதுன்னு நியூ எக்ஸாசிஸ்ட்ங் கற ஹாலிவுட் படத்துல வர்ற பேய் கேரக்டருக்கு, இங்க நான்தான் தமிழ் வாய்ஸ் தந்தேன். இதில் இன்னொரு விசேஷம் என்னன்னா, இந்தப் படத்தோட ஹீரோ யினுக்கும் என்னோட வாய்ஸ்தான். இதுமட்டு மில்லாம மிக்கி மவுஸின் கேர்ள் ஃப்ரெண்ட், ஸ்பைடர்மேனின் லவ்வர் போன்ற கேரக் டர்களுக்கும் நான்தான் டப்பிங் பேசிட்டு வர்றேன். இப்போ 'பட்டையைக் கிளப்பு'ங்கற படத்துல ஒரு பாட்டும் பாடியிருக்கேன்.

என்னைப் பொறுத்தவரைக்கும் அழகுன்றது மனசுதான். மனசையும் அழகையும் பிரிச்சிப் பார்க்கவே முடியாது."

- முகுந்தன்

படம் : ராஜன்

பங்குச் சந்தை

விதி மாறுது... விலை ஏறுது!

வி. கோபாலன்

சமீபத்தில் மத்திய அரசின் ஒரு முக்கியமான கொள்கை மாற்றத்தைப் பற்றி செய்தி ஒன்று வெளியாகி இருந்தது. ஊழியர்களின் வருங்கால வைப்புத் தொகையை நிர்வகிக்கும் நிறுவனம் (Employees Provident Fund Organisation), அந்த வைப்புத் தொகையின் ஒரு பகுதியை பங்கு மார்க்கெட்டில் நல்ல கம்பெனிகளின் பங்குகளில் முதலீடு செய்யலாம் என்பதுதான் அந்தக் கொள்கை மாற்ற அறிவிப்பு. இதுவரை இந்த வைப்புத் தொகையை மத்திய அல்லது மாநில அரசு சம்பந்தப்பட்ட கடன் பத்திரங்களில் மட்டும்தான் முதலீடு செய்யலாம், என்று ஒரு விதி இருந்தது.



இந்த விதியை சற்று தளர்த்தி பங்கு மார்க்கெட்டிலும் முதலீடு செய்யலாம் என்று அந்த அறிக்கை கூறுகிறது. இதனால் பங்கு மார்க்கெட்டில் ஓரளவுக்கு பங்குகளின் விலை ஏறலாம்.

மற்றொரு செய்தி- இது ஒரு பிரபல பொருளாதார ஆங்கில தினசரியில் வெளியாகி இருக்கிறது. இந்தியாவில் செயல்படும் வங்கிகள் இதுவரை தனது டெபாஸிட் பணத்தில் ஐந்து சதவிகிதம் வரை பங்கு மார்க்கெட்டில் முதலீடு செய்யலாம். இந்த முதலீட்டு அளவை கூடுதல் டெபாஸிட்களுக்கு (Incremental Deposits) பத்து சதவிகிதமாக உயர்த்த மத்திய நிதி அலுவலகமும், ரிஸர்வ் வங்கியும் தீர்மானித்திருப்பதாக அந்தச் செய்தி கூறுகிறது. தற்போது இந்தியாவில் உள்ள எல்லா வங்கிகளின் டெபாஸிட் தொகை ரூபாய் பதினேழு லட்சம் கோடி. இந்த டெபாஸிட் தொகை வருஷத்திற்கு சராசரியாக பதினைந்து சதவிகிதம் கூடுகிறது. அதனால் ஒவ்வொரு வருஷமும் வங்கிகளின் டெபாஸிட் தொகை, இரண்டரை லட்சம் கோடி அதிகமாகும். இந்தக் கூடுதல் டெபாஸிட்டில் பத்து சதவிகிதம், அதாவது 25000- கோடி ரூபாய் அளவுக்கு வங்கிகள் பங்கு மார்க்கெட்டில் முதலீடு செய்யத் தீர்மானித்தால், இதுவும் ஓரளவுக்கு பங்குகளின் விலை ஏற்றத்திற்குக் காரணமாகும்.

பல வருஷங்களுக்கு முன்பு ICICI எனப்படும் Industrial Credit and Investment Corporation என்ற நிறுவனம், பார்லிமெண்டின் ஒப்புதலுடன் அமைக்கப்பட்டது. தொழில் வளர்ச்சிக்காக பெருமளவில் கடன் வழங்க இந்த நிறுவனம் உருவாக்கப்பட்டது. நாளாவட்டத்தில் தொழில் வளர்ச்சிக்காக வங்கிகளே பெருமளவில் கடன் கொடுக்க ஆரம்பித்தன. அதனால் ICICI நிறுவனம் சில வருஷங்களுக்கு முன்பு ICICI Bank என்ற வங்கியைத் தானே நிறுவியது. பின்பு தாய் ஸ்தாபனமான ICICI நிறுவனம், ICICI வங்கியுடன் பூரணமாக ஐக்கியமானது. இப்போது ஒரே நிறுவனமாக ICICI வங்கி என்ற பெயரில் செயல்படுகிறது.

இந்தியாவில் உள்ள பெரிய வங்கிகளில் இது மூன்றாவது இடத்தை வகிக்கிறது. ICICI வங்கியின் பங்குகளை வாங்கலாம். எதிர்காலத்தில் இதன் விலை ஏற வாய்ப்புண்டு. ○

அருள்வாக்கு

காமாக்ஷியின் கடாக்ஷ வீக்ஷண்யத்தின் பெருமையைச் சொல்லுகிறார். அவளுடைய கண் பார்வை எத்தனை தூரமும் தாண்டி விழுமாம். ஒரு தாயார்க்காரி பச்சைக் குழந்தைகளைத் தன் பார்வைக்குள்ளேயே தான் வைத்துக் கொள்வாள். அம்பாளுக்கு நாம் எல்லோரும் பச்சைக் குழந்தைகள்தான். பெரிய பெரிய காரியம் சாதித்தவர்கள், அகடவிகடம் செய்கிறவர்கள் எல்லோரும்கூட அவளுக்குப் பச்சைக் குழந்தைகள்தான். மிருகங்கள், பட்சிகள், புல் பூண்டு எல்லாவற்றுக்கும் தாயார்க்காரி அவள். எல்லை இல்லாத பிரபஞ்சத்துக்கு அம்மா அவளே. இத்தனையும் அவள் பார்வைக்குள்தான் இருக்கின்றன. எனவே அவளுடைய கடாக்ஷத்துக்கும் எல்லையில்லை. அது நீண்டு நீண்டு போய், தகுதியே இல்லை என்று எட்டாத் தொலைவில் நிற்கிறவர்கள் மீதும் விழுகிறது. அந்தக் கண்கள் பாதி மூடி, பாதி விரிந்திருக்கிற நீலோத்பல புஷ்பம் மாதிரி இருக்கின்றனவாம். ஜலத்தில் நனைந்த நீலோத்பலம் மாதிரி பரம சீதளமாக இருக்கிறது, அவளுடைய திருஷ்டி. நீண்ட நேத்திரங்கள், நீலமான நேத்திரங்கள், குளிர்ந்த நேத்திரங்கள் - இதனால் நீலோத்பலத்தை உவமிக்கிறார். 'இப்படி நீள நெடுக எங்கு பார்த்தாலும் போய்க் கொண்டிருக்கும் உன் கடாக்ஷப் பிரவாகத்தில், என்னையும்கூட முழுகும்படியாகச் செய்தருளேன்' என்கிறார். 'மாம் அபி' - 'என்னைக் கூட' என்கிறார். "எனக்கு உன் கடாக்ஷம் கிடைக்க நியாயமே இல்லை. என்றாலும் தீனனான என்னையும் உன் பார்வையால் ஸ்நானம் பண்ணிவையம்மா" என்கிறார். 'தீனம்'. 'மாமபி' என்று மிக மிக விநயத்துடன் சொல்லுகிறார். பரமேசுவராவதாரமான ஆசார்யாள் 'எனக்கு யோக்கியதை இல்லாவிட்டாலும் ஏன் கேட்கிறேன் என்றால், இப்படிக் கடாக்ஷிப்பதனால் உனக்கு ஒன்றும் நஷ்டம் வந்து விடவில்லை என்பதாலேயே கேட்கிறேன்' என்கிறார். தோஷமுள்ளவர்களைப் பார்த்தாலும்கூட அவளுடைய பார்வைக்குத் தோஷம் வராது - எந்த ஹானியும் வராது - ந ச தே ஹாநிரியதா. 'உனக்கு நஷ்டமில்லை என்பது மட்டுமில்லை. எனக்கோ இதனால் பரம லாபம் சித்திக்கிறது. நான் தன்யனாகிறேன்' என்கிறார். 'அனேனாயம் தன்யோ பவதி' தனத்தை உடையவன் தன்யன். அம்பாளின் கடாக்ஷத்தால் அருள் செல்வம் என்ற தனம் கிடைக்கிறது. அதற்குமேல் பெரிய செல்வம் எதுவுமில்லை.



- ஜகத்குரு காஞ்சி காமகோடி
ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி
சங்கராச்சார்ய சுவாமிகள்

31. தர்க்க சாத்திரம்

"மண்ணுக்கும், மரம் செடி கொடிகளுக்கும், நீருக்கும், காற்றுக்கும் கூட உயிர் இருக்கிறதா?" என்ற கேள்விக்கு, வேதங்களும், சாத்திரங்களும், பழந்தமிழிலக்கியங்களும் 'நிச்சயம் உண்டு' என்றுதான் பதிலளிக்கின்றன. உயிருள்ள மனிதர்களும், விலங்குகளும் தரக்கூடிய உணர்ச்சிகளை விட, ஒருபடி அதிகமாகவே இவை மனிதனுக்குத் தருகின்றன என்ற உண்மையை, அந்த இரவில் சோழ நாட்டு மண் பராந்தகனுக்கு உணர்த்தியது. நீண்ட காலத்துக்குப்பின் சோழ நாட்டுக்குள் நுழைந்தவனுக்கு அந்த மண்ணும், வயல் வெளிகளிலிருந்து கிளம்பிய நெல்லின் மணமும், காற்றில் அசைந்தாடிய மரம் செடி கொடிகளும், மனதுக்கு நிறைவையும் மகிழ்ச்சியையும் அளித்ததால், மௌனமாகவே புரவியை நடத்திக் கொண்டிருந்தான் பராந்தகன். அந்த மண்ணை விட்டுத் தான் பிரிந்தபோது இருந்த நிலைக்கும், தற்போது திரும்ப சோழ நாட்டைத் தான் அடையும் போது உள்ள நிலைக்கும் இருந்த மாறுதல்கள், அவன் மனதை நிறைத்துக்கிடந்தன.

"பராந்தகா, ஏன் நெடுநேரமாக மௌனமாகி விட்டாய்?" பகதத்தனின் கேள்வி அவன் மௌனத்தைக் கலைத்தது.

"ஒன்றுமில்லை பகதத்தா. இதே குடந்தைக்கு நான் முன்பு வந்தபோது இருந்ததற்கும், இப்போது இருப்பதற்கும் என்னிடம் எத்தனை மாறுதல்கள் என்பதை எண்ணினேன்."

பகதத்தன் இலேசாக நகைத்துவிட்டுக் கூறினான். "அப்பனே, மாறிக் கொண்டேயிருப்பதுதான் உலகின் மாறாத நியதி."

"உண்மைதான். ஆனால் அந்த மாற்றங்கள் அத்தனை நன்மையளிக்கக் கூடியவையல்ல என்று தோன்றினால்?"

"ஒருவருக்கு நன்மையென்று தோன்றுவது, இன்னொருவருக்குத் தீமையாகத் தெரிகிறது. மாற்றம் நியதியென்றால் அதன் விளைவுகளும் நியதிதான் பராந்தகா. மாற்றத்தை ஏற்கும்போது, அதன் விளைவுகளையும் ஏற்கத்தான் வேண்டும். விளைவு விரும்பாததாக அமைந்தால், மறுபடி மாற்றத்தைக்காண மனம் விரும்புகிறது. முயற்சிகளும் தொடர்கின்றன."

"உன் தத்துவம் புரியவில்லை பகதத்தா."

"நான் அர்ச்சுனனுக்கு சிவபெருமான் அளித்த பாசுபதாஸ்திர மந்திரத்தையா கூறினேன், புரியவில்லையென்பதற்கு?"

"உன் புராணத்தை நிறுத்திவிட்டு தெளிவாகக் கூறு."

"சரி, உன் வாழ்வில் ஏற்பட்டுள்ள மாற்றங்களையே சிந்தித்துப் பார். இந்தக் குடந்தைக்கு நீ வந்தபோதுதான் உன்னிடமும் மாற்றம் தொடங்கியது. வயலும், வாய்க்காலுமே கதியென்று கிடந்தாய். உன்னிடம் ஏற்பட்ட மாற்றம் ராஷ்டிரகூடரை விரட்ட வேண்டுமென விரும்ப வைத்தது. அந்த விருப்பமும், அதற்கான முயற்சிகளும் உன்னை இந்த நிலைக்கு மாற்றியது. வயலையும், நெல்லையும், மாடுகளையும் பார்த்துக் கொண்டிருந்தவன், இப்போது மன்னர்களையும், இளவல்களையும், படைத்தலைவர்களையும் பார்க்கிறாய். படைகளை நடத்துகிறாய். வயற்காட்டில் சேற்றில் மாடுகளை ஓட்டிக் கொண்டிருந்தவன் நீயென்பதை யாருமே, யாருமேயென்ன, நீயே நம்புவது கடினமாகத்தானே இருக்கிறது? இல்லையா?"

சரித்திரத் தொடர்

மகுட ஹாரம்

விஷ்வக்ஸேனன்

''உண்மைதான் பகதத்தா.''

''ஆனால் இந்த மண்ணுக்கு நன்மை என்று நீ நினைக்கும் மாற்றம், இதுவரை இங்கே அதிகாரம் செய்து கொண்டிருந்த ராஷ்டிர கூடருக்குத் தீமை. இதைத்தான் முதலிலேயே சொன்னேன்... ஆனால்...''

"ஆனால் என்ன பகதத்தா?"

"தகுதியுள்ளவன் பாதிக்கப்பட்டால் தான் மாற்றங்கள் ஏற்படுகின்றன என்பதும் உண்மைதான். நீ பாதிக்கப்படு முன்னரே இந்த மண்ணில் அதே நிலைமை தானே நிலவியது?"

பராந்தகன் பார்த்த பார்வையில் வியப்பு தெரிந்தது.

"என்ன அப்படிப் பார்க்கிறாய் பராந்தகா?"



"இத்தனை தத்துவமும், தர்க்கமும் யாரிடம் கற்றாய் நீ?"

பகதத்தன் பலமாக நகைத்தான். "வேறு யாரிடம்? எல்லாம் உன் சகோதரி கார்குழலியிடம்தான்" என்றான் நகைத்தபடி. தொடர்ந்து "தர்க்கமும் கூட தகுதியுடையவர்களுடன் புரியும்போதுதான் தன்னையும், கேட்பவர்களையும் உயர்த்துகிறது. ஏனென்றால் தர்க்கம் என்பது உண்மைகளின் திறவுகோல்" என்றான்.

"நீங்கள் சந்திக்கும் போது இப்படித்தான் தர்க்கம் செய்து கொண்டிருப்பீர்களா?"

"ஆம். ஆனால் அது இன்னும் பல சுவைகளுடன் இருக்கும்."

"இந்த தர்க்க சாத்திரத்தை நானும் கற்றுக் கொள்ள வேண்டும் பகதத்தா."

"அப்பனே, அறிவும் தர்க்கமும் இந்த சோழ நாட்டு மண்ணின் மணம். சிறு தூறல் விழுந்தாலும் தன்னால் எழும். வெறும் தூறலுக்குப் பதிலாக, பெரும் மழையாகவே இளவரசி குமுதவல்லி வந்து கற்றுத் தருவாள். கவலைப்படாதே. கொஞ்ச நாட்கள் பொறு" என்று பகதத்தன் மீண்டும் பலமாக நகைத்தான்.

பகதத்தனின் நகைப்பு சட்டென்று நின்றது. புரவியையும் நிறுத்தினான் அவன்.

''என்ன பகதத்தா? ஏன் நின்றுவிட்டாய்?''

"அதோ பார்."

பகதத்தன் சுட்டிக் காட்டிய திசையில் உற்று நோக்கினான் பராந்தகன்.

தூரத்தில் குடந்தை நகரின் கோபுரங்கள் மங்கலான தீபங்களுடன் தெரிந்தன. காவிரிக்கரை உயர்ந்து தெரிய, கரையோரத்து மரங்கள் இலேசாக அசைந்து, காவிரியின் பிரவாகத்துடன் ஏதோ

ரகசியம் பேசிக் கொண்டிருந்தன. மரங்களின் அடியில் கூடாரங்கள் சிலவும், சில அவிழ்த்து சுருட்டப்பட்டும் தெரிந்தன. அருகே பல பேழைகளும், மூட்டைகளும் கிடக்க, பல ராஷ்டிரகூட வீரர்கள் சாய்ந்தும், உருண்டும் படுத்து உறங்கிக் கொண்டிருந்தனர். ஓரிரு பந்தங்கள் காற்றில் அலைபாய்ந்தபடி எரிந்தன.

"பகதத்தா, பல்லவ மன்னர் சோழ நாட்டிலிருக்கும் ராஷ்டிர கூடர்கள் அனைவரையும் மகாராணியின் பெயரால் காஞ்சிக்கு வந்து சேர்ந்துவிட ஓலையனுப்பியிருப்பதாகக் கூறினார். இவர்களுக்கு ஓலை கிடைக்கத் தாமதமாகியிருக்க வேண்டும்."

"அப்படித்தானிருக்க வேண்டும். நகருக்குள் இன்னும்கூட ராஷ்டிர கூடர்கள் இருக்கலாம்."

"எனக்கும் ஊர்த்தலைவரைக் காண வேண்டும். நாம் தெற்கு வாயில் வழியே நகருக்குள் செல்வோம்,வா."

தெற்கு வாயிலின் பெரும் கதவுகள் அன்றும் திறந்தே கிடந்தன. உள்ளே நுழைந்ததும் தென்பட்ட வீதிகள் வெறிச்சிட்டுக் கிடக்க, மூடிக்கிடந்த இல்லங்களில் மங்கலான தீபங்களின் ஒளி தெரிந்தன.

சற்றுத் தொலைவு வந்ததும் புரவியை நிறுத்திய பராந்தகன் குதித்து இறங்கினான்.

பகதத்தனும் கீழே குதித்தான்.

வீதியின் பக்கங்களிலும், நீண்டு வளைந்து திரும்பிய வீதியின் முனையையும் ஒருமுறை பார்த்த பராந்தகன்,

"பகதத்தா, இதே இடத்தில்தான் அன்று ராஷ்டிரகூட வீரர்களால் வழி மறிக்கப்பட்டேன். அன்றும் இப்படித்தான் இருள் சூழ்ந்து கிடந்தது. வீதிகளும் வெறிச்சோடிக் கிடந்தன. அன்று எனக்கு எதுவும் நேராமல் ஊர் திரும்பியிருந்தால், நீ கூறியபடி எந்த மாற்றமும் ஏற்பட்டிருக்காது."

"பின் காவிரிக்கரைக்கு எப்படிச் சென்றாய்?"

"நான் வந்தது ஊர்த்தலைவரைக் காண. என்னை வழி மறித்தவர்கள், அவர் காவிரிக்கரையிலிருப்பதாகக் கூறி என்னை அழைத்துச் சென்றார்கள். அன்றுதான் என்னிடம் சோழ உக்ரோதயத்தை அளித்து அந்த சோழ வீரன் உயிர் துறந்தான்."

பராந்தகன் வார்த்தைகளை முடிக்கு முன்பாக, வீதியின் முனையில் புரவிகள் பல பாய்ந்து வரும் ஒலி கேட்டது.

இருவரும் திரும்பினார்கள்.

ராஷ்டிரகூட வீரர்கள் பதின்மர் புரவிகளில் வந்து கொண்டிருந்தனர். புரவிகளின் பக்கங்களில் கட்டப்பட்டு தொங்கிய மூட்டைகளும், பேழைகளும் இரவு முழுதும் அவர்கள் நடத்திய கொள்ளைகளைத் தெரிவித்தன.

வீதியின் நட்ட நடுவில், அந்த இரவு நேரத்தில் இரு புரவிகள் நிற்பதையும், அருகே சோழ வீரர்களாகத் தெரிந்த இருவர் நிற்பதையும் ராஷ்டிரகூடர்கள் கவனித்து விட்டதால், தொலைவில் இருக்கும் போதே வாட்களை உருவிக் கொண்டு அதிவேகமாக இருவரையும் நெருங்கினார்கள்.

"பராந்தகா, வருபவர்கள் துரியோதனாதிகள்தான். காஞ்சிக்குத் திரும்புமுன் இறுதியாகக் கொள்ளைக்கு என்ன கிடைக்குமென்று சுற்றிவிட்டு வந்து கொண்டிருக்கிறார்கள். வா, இவர்களைக் கொஞ்சம் நடுவீதியில் நடனமாடவிட்டுப் பார்க்கலாம்" என்றான் பகதத்தன்.

பராந்தகன் பதிலேதும் கூறவில்லை. நெருங்கி வந்து கொண்டிருந்தவர்களையும், முன்னால் வந்து கொண்டிருந்த அவர்களது தலைவனையும் கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்தான்.

"பகதத்தா."

"சொல் பராந்தகா."

"முன்னால் வந்து கொண்டிருப் பவனு

"என்ன திடீர்னு இவ்வளவு கறுத்துட்டீங்க?"
"கட்சியில ஓவரா 'இருட்டடிப்பு' பண்றாங்க!"
- அம்பை தேவா



டன் எனக்கொரு வழக்கு இருக்கிறது.''

''வழக்கா! என்ன கூறுகிறாய் நீ?''

இவன்தான் அன்று என்னை வழி மறித்து காவிரிக்கரைக்கு அழைத்துச் சென்றவன். ஊர்த் தலைவருக்கு என் தந்தை அளிக்க வேண்டிய பொற் காசு களை என்னிடமிருந்து பறித்துக் கொண்ட வன்.''

''ஆகா, ஆகா, மிக்க மகிழ்ச்சி பராந் தகா. உன் வழக்கை இன்று தீர்த்து விட லாம். என்ன ஒரு எதிர்பாராத சந்திப்பு! மாண்டவ்ய ரிஷிக்கு தர்ம தேவதை சொன்ன விதி என்பது இதுதான், பராந் தகா'' என்ற பகதத்தன் நகைத்தான்.

ராஷ்டிரகூட வீரர்கள் நெருங்கி வந்து இருவரையும் சூழ்ந்து கொண்டார்கள். வீரர் தலைவனும் உருவிய வாளுடன் நெருங்கி வந்தான். இரவு நேரத்தில் தனித்து இரு சோழ வீரர்கள் வீதியில் நிற் பதும், ராஷ்டிர கூட வீரர்கள் சூழ்ந்து கொண்டபின்பும் பதற்றமின்றி ஏதோ சிரித்துப் பேசிக் கொண்டு அவர்கள் நிற் பதும், வீரர் தலைவனுக்கு வியப்பையும், எரிச்சலையும் அளித்திருக்க வேண்டும். பராந்தகன் நின்ற இடத்திலிருந்து அசை யக்கூடவில்லை. வாளிருந்த பக்கம் கூட அவன் கரம் செல்லவில்லை.

பராந்தகனை நெருங்கிய வீரர் தலை வனின் விழிகளில் சந்தேகச் சாயை புலப் பட்டது. ஓங்கிய வாளுடன் பராந்தகனை நெருங்கியவன், ''அடேய், நீ சோழ வீரன் தானே? என்ன செய்கிறாய் இங்கு? எங்கள் எதிரில் நிற்க என்ன துணிச்சல் உனக்கு?'' என்றான் இரைந்து.

பராந்தகனின் பதில் மிகுந்த பணி வோடு வந்தது. ''ஆம் ஐயா, நான் சோழ நாட்டவன்தான். வண்டாழஞ்சேரியைச் சேர்ந்தவன். ஊர்த் தலைவரைக் காண வந்தேன். என் பெயர் பராந்தகன்.''

வீரர் தலைவனின் முகத்தில் திகைப்பு பூரணமாகப் பரவியது. எதிரில் நிற்பவன் யாரென்பது கண நேரத்தில் புரிந்தது அவனுக்கு.

''ஐயா, அன்று நான் ஊர்த் தலை வருக்குத் திருப்பி அளிக்கக் கொண்டு வந்த பொற்காசுகளைப் பறித்துக் கொண்டீர் கள். தயை கூர்ந்து அதைத் திருப்பியளித்து விடுங்கள்'' என்றான் பராந்தகன் வெகு நிதானமாக.

(தொடரும்)

மைக்ரோவேவ் மாமி





ரக்ஷக் மில்க் கேக்!

ஹலோ ரசிகாஸ்...! என்ன, போன வாரம் பண்ணின தியலுக்கும், ஆப்பத்துக்கும் ஏகப்பொருத்தமா இருந்திருக்குமே... சரி, இந்த வாரம் 'ரக்ஷக் மில்க் கேக்' பண்ணலாம். இதை பிரிப்பேர் பண்ணத் தேவையான ஐட்டம்ஸை வாங்க ரொம்பவும் அலையத் தேவையில்லை. 'வீட்லயே இருக்கறதாப் பார்த்து சொல்லக் கூடாதா மாமி'ன்னு மதுரை கீதா லெட்டர் போட்டிருக்கா... ஸோ, நோட் பண்ணிக்கோங்கோ, ஈஸியா... கவனமா...

நாலு கப் பால் பவுடர், ஒரு கப் சர்க்கரை, ஒன்னரை கப் பால், அரை கப் ஆயில்... அத்தோட ரெண்டு ஏலக்காயை பொடிச்சு வச்சிக்கோங்கோ. கூடவே பிஸ்தாவையும் (பெங்காலி பொங்கல் பண்ண வாங்கினப்போ மீந்து போன பிஸ்தாவை என்ன பண்றதுன்னு கேட்டிருந்தியே... போரூர் அலமேலு... எடுத்துக்கடியம்மா...) ரெடியா வச்சிக்கோங்கோ.

முதல்ல ஒரு பாத்திரத்துல பாலைக் கொட்டி, அதன் மேல சர்க்கரையும் கலந்து, அஞ்சு நிமிஷத்துக்கு நன்னா கொதிக்க விடுங்கோ. இப்போ அதுல ஏலக்காய்ப் பொடியை லேசாத் தூவி விடுங்கோ. கொதி வந்துடுத்துன்னா, பால் பவுடரை கொஞ்சம் கொஞ்சமா பால்ல கலந்துண்டே வாங்கோ... நன்னா கிளறிண்டே இருக்கணும்... இல்லன்னா என்ன ஆகும்னு நான் சொல்லத் தேவையில்ல! இப்போ கொஞ்சம் ஆயிலையும் கலந்து, தொடர்ச்சியா கிளறிண்டே இருக்கணும், அந்த மிக்ஸர் பாத்திரத்துல ஒட்டாத வரைக்கும். இப்போ இந்த மிக்ஸரை வேற ஒரு பாத்திரத்துல கொட்டி, நன்னா ஆறிடுத்துன்னா, அதை அழகழகான ஸ்பியர், ஓவல் ஷேப்புல உருண்டை பண்ணி, அதன் மேல பிஸ்தாவ கட் பண்ணி செருகி வச்சேன்னா, முடிஞ்சது வேல. 'ரக்ஷக் மில்க் கேக் பண்ணுங்க'ன்னு பத்து கடுதாசி போட்ட கோயம்புத்தூர் மாலாவுக்கு, சாப்பிடும் போது கொஞ்சம் நன்றி சொல்லிடுங்கோ. ○



புதுமணத் தம்பதி ஸ்ரீகாந்த் தேவா (சிம்மம்) ஃபெபி (மகரம்)க்கு மதிப்பும் அந்தஸ்தும் கௌரவம் சேர்க்கிற வாரம்.

நடக்குமென்பார்; நடக்கும்!

அக்னிசாமா பக்கம்

23. 2. 2005 முதல் 1. 3. 2005 வரை

மேஷம் : அழகுக்கு அழகு சேர்க்கறது அன்பும், கருணையும்தான். அதுக்கு அருளோடு தெய்வபலம் உங்க பக்கத்தில அழகா வந்து நிக்கறதால, எடுத்த காரியமெல்லாம் அமைதியா வெற்றிகரமா நடக்கும். துணிவும் நம்பிக்கையும் கூட நின்னு துணை புரியும். புது அறிமுகங்கள் சிலது கிடைக்கும். ஆபீஸ்ல உற்சாகத் திருப்பங்கள் நேரும். பதவி உயர்வு, ஊதிய உயர்வு சிலருக்குக் கிட்டும். தொழில், வியாபாரத்தில வரவேண்டிய பழைய பாக்கிகள் தானா வரும். கடன்கள் தீர்ந்து நிம்மதி கிடைக்கும். குடும்பத்தில சுபகாரிய முயற்சிகள் கைகூடி குதூகலம் நிறையும். வெளிநாட்டி லிருந்து எதிர்பார்த்த நல்ல செய்தி வந்து சேரும். பெண்களுக்கு எண்ணம் போல எல்லாம் நடக்கும்.

ரிஷபம் : அகத்தின் அழகு முகத்தில தெரியும்பாங்க. உள்ளுக்குள்ள உண்மையை மறைச்சு அழகாப் பேசிக்கிட்டிருந்தவங்க, இனி விலகிப் போயிடுவாங்க. அதனால தைரியமா நீங்க எதிலேயும் ஈடுபடலாம். வி.ஐ.பி.க்கள் ஆதரவு கூடும். பணநடமாட்டம் தாராளமாவே இருக்கும். ஆபீஸ்ல உங்க முயற்சிகள் கூடிவர்ற நேரம் இது. புதிய முயற்சியேதும் இருந்தா அதை தொடங்கவும் சரியான நேரம். தொழில், வியாபாரத்தில இதுவரை இருந்த நெருக்கடி மறையும். எதிர்பார்த்த உதவிகளும் கிடைக்கும். புதிய தொழில்கள்ல ஈடுபடற நேரம் உருவாகும். குடும்பத்தில இதுவரை இருந்த குழப்பம், சஞ்சலம் எல்லாம் மறைஞ்சு நிம்மதி கிட்டும். பெண்களுக்கு புதிய பொருள், ஆடை, ஆபரணச் சேர்க்கை மகிழ்ச்சி கூட்டும்.

மிதுனம் : அழகோடு அறிவு சேருவது தாங்க அபூர்வம். உங்க அழகு முழுக்க உங்க திறமையிலதாங்க இருக்கு. அதோட அறிவும் ஆற்றலும் சேர்ந்து பெருமை தேடித்தர்ற நேரம்க இது. சின்னச் சின்ன குறுக்கீடுகள், தடைகள் எல்லாம் உங்க திறமையை உயர்த்திக் காட்டும். பயணம் போகும்போது கொஞ்சம் எச்சரிக்கையா இருப்பது அவசியம். கல்வி, ஆராய்ச்சின்னு இருக்கிறவங்க மேன்மை அடைவாங்க. ஆபீஸ்லயும் புதிய திருப்பங்கள் சிலது காத்திருக்கு. தொழில், வியாபாரம்னு இருக்கிறவங்களுக்கு கொடுக்கல், வாங்கல் கை கொடுக்கும். குடும்பத்தில நெருக்கடி மறைஞ்சு, தாராள பணவசதி உண்டாகும். பெண்களுக்கு உற்சாகமான வாரம்.

கடகம் : 'திருவாரூர் தேர் அழகு, மன்னார்குடி மதில் அழகு'ன்னு ஒவ்வோர் ஊருக்கும் ஒரு அழகு இருக்கிற மாதிரி, உங்க அழகே துணிவும், தன்னம்பிக்கையும்தாங்க. அதோட தெய்வீக ஈடுபாடும், பிரபுதனவான்களோட ஆதரவும் கூடி எல்லாக் காரியத்தையும் வெற்றிகரமா முடிச்சுக் கொடுக்கிற வாரங்க இது. பண வசதி தேவைக் கேற்றபடிதான் இருக்கும், அதனால சிக்கனமா இருந்தா நல்லது. ஆபீஸ்ல இருந்த சிக்கல்கள் தீர்ந்து அனுகூல

மான திருப்பம் உண்டாகும். தொழில், வியாபாரத்தில லாபம் கூடும். வெளிநாட்டுத் தொடர்பு ஆதாயம் தரும். குடும்பத்தில இதுவரை தாமதமாகி வந்த சுப வேலைகள் கூடி வரும். பெண்களுக்கு ஆடை ஆபரணச் சேர்க்கை மகிழ்ச்சி தரும்.


சிம்மம் : பொன்னால செய்த அழகான குடத்துக்குப் பொட்டு வெச்சுப் பார்க்கிற அழகு போல, உங்க மதிப்பும், அந்தஸ்தும் உங்களுக்கு கௌரவம் சேர்க்கிற நேரங்க இது. திட்டமிட்ட காரியங்கள் எல்லாம் நல்லபடியா நிறைவேறி மகிழ்ச்சி தரும். ஆபீஸ்ல இதுவரை தாமதமாகி வந்த உங்க கோரிக்கைகள் நிறைவேறும். உத்தியோக விஷயமா வெளியூர் / வெளிநாடு போகவும் வாய்ப்பு கிட்டும். தொழில், வியாபாரம்னு இருக்கிறவங்களுக்கு அபிவிருத்தி உண்டாகும். வங்கி உதவி எதிர்பார்த்திருந்தா கிடைச்சுடும். குடும்பத்தில கருத்து வேற்றுமை மறைஞ்சு ஒற்றுமை பலப்படும்.

கன்னி : அழகுங்கறதே மனசைப் பொறுத்ததுன்னு அனுபவஸ்தர்கள் சொல்ற மொழி. உங்க மனசில அன்பும் அறிவும் திருப்திகரமான சிந்தனைகள் வாரம் பூராவும் நிலவி, பார்க்கறதெல்லாம் அழகாவே தெரியும். தெய்வ பலமும், ஈடுபாடும் கூடி இன்னும் அழகு சேர்க்கும். முக்கியமானவங்க ஆதரவும் கூடும். ஆபீஸ்லயும் இது உற்சாகமான வாரம். சிலருக்குப் புதுப்பதவி, இடமாற்றம்னு ஏற்படலாம். தொழில், வியாபாரத்தில இதுவரை இருந்த சிக்கல்கள் தீரும் - கூட்டுத் தொழில்ல ஆதாயம் உண்டாகும். குடும்பத்தில மகிழ்ச்சி நிலவும். ஒற்றுமை அதிகரிக்கும். தேவைக்கேற்ற பண வரவு உண்டாகும்.

துலாம் : மயிலுக்குத் தோகையும், சிங்கத்துக்குப் பிடரியும் அழகு. இடம் மாறினா அழகாயிருக்காது. அதே மாதிரி நெருக்கடி, குழப்பம்னு மாறிப் போயிருந்த உங்க அக அழகு, மறுபடி உங்களுக்குக் கிடைக்கிற வாரங்க இது. துணிவும் நம்பிக்கையும் கூடி உங்களை இன்னும் அழகாக் காட்டும். ஆபீஸ்லயும் எதிர்ப்புகள் மறைஞ்சு புதிய திருப்பங்கள் உண்டாகும். தொழில், வியாபாரத்தில கொடுக்கல், வாங்கல் சமயத்தில உதவும். புதிய தொழில்லயும் அனுகூலமான பலன்கள் கிட்டும். குடும்பத்தில சுபகாரிய முயற்சி நிறைவேறி குதூகலம் கூட்டும். உடன்பிறந்தவர் ஆதரவால பெண்களுக்கு மகிழ்ச்சி கூடும்.

விருச்சிகம் : கண்ணுக்கு மை அழகு. கவிதைக்குப் பொய்யழகுன்னு எதிர்மறையா இருக்கறதை அழகுன்னு சொல்றதுபோல, எதிர்ப்பா இருக்கறதும், தடையா இருக்கறதும் உங்க திறமைக்கும், அறிவுக்கும் அழகைக் கூட்டப்போவுது. உங்க நிதானமும், அமைதியான போக்கும் திட்டமிட்டபடி எல்லாக் காரியங்களையும் கச்சிதமா முடிச்சி பெருமை சேர்க்கும். ஆபீஸ்லயும் அனுகூலக் காற்று உங்க பக்கமா வீசி மகிழ்ச்சி தரும். புதுமுயற்சிகள் வெற்றி தரும். தொழில், வியாபாரத்தில எதிர்பாராத தனலாபம் கிட்டும்.

பரிகாரம்



அழகுக்கு உலகம் அடிமை செய்கிறேன் என்கிறது. அக அழகான அன்பை ஆராய்வது அடுத்த கட்டம்தான். 'மெய்யழகு பொய்யழகா? அக அழகு மெய்யழகா?' என்பதற்கு பதில் தெரிந்தாலும், உலகம் எதிர்மறையாகத்தான் பார்க்கிறது. எந்த அழகானாலும் சரி, வேண்டியதை வேண்டியபடி அருள அழகன், குமரன், காத்திருக்கிறான். தெற்கு பார்த்த ராஜகோபுரம் உள்ள கோயில் பரிகாரங்களுக்கு ஏற்ற இடம் என்கிறது சாஸ்திரம். எல்லாவித தோஷங்களுக்கும் பரிகாரமாய், வேறு திசை கோபுரமே இல்லாமல் சித்தர்கள் அழகனுக்குக் கட்டிய கோயில் திருச்செந்தூர். முக அழகு, அக அழகு எந்தக் குறையானாலும், நீங்கி, வாழ்வு அழகு பெற, பரிகாரம் காண இந்த அழகனைக் கண்டு வேண்டினாலே போதும்.

- வி



குடும்பத்தில சுபமங்கள யோகம் கூடி வந்து சந்தோஷம் தரும். கல்யாணம், பிள்ளைப் பேறுன்னு காத்திருக்கிறவங்களுக்கு சுபவேளை கூடி வந்துடும்.

தனுசு : அழகிப் போட்டிகள்ல ஜெயிக்கணும்னா அடுக்கடுக்கா பல போட்டிகளைத் தாண்டித்தான் வரணும். கடைசியில ஜெயிச்ச பிறகு கிடைக்கிற சந்தோஷம் அப்போதான் திருப்தியைத் தரும். அதே மாதிரி தடைகள், சிக்கல்கள் எல்லாத்தையும் தாண்டி, திருப்தியா ஜெயிக்கிற வாரங்க இது. பொருளாதாரம் கொஞ்சம் கூடுதலா சிக்கல் ஏற்படுத்தும் - கொஞ்சம் கவனமா இருந்தா போதும். ஆபீஸ்ல கொஞ்சம் சுமுகமாப் பழகுங்க. பல சிக்கல்களை அது தவிர்க்கும். தொழில், வியாபாரத்தில நிதானமான போக்கு அனுகூலமான பலனைத் தரும். பொருளாதாரம் நிதானமா முன்னேறும். குடும்பத்தில கருத்து வேறுபாடுகள் மறைஞ்சு ஒற்றுமை கூடும்.

மகரம் : அழகான உறவுகளா இயற்கையிலேயே மலரும் வண்டும், நிலவும் வானும், கடலும் காற்றும் இருக்கிற மாதிரி, உங்க நம்பிக்கையும் தெய்வ பலமும் அமைஞ்சு எதிர்ப்புகளைக் குறைச்சு, எல்லாக் காரியத்தையும் வெற்றிகரமா முடிச்சு வைக்கிற வாரங்க இது. உங்க மதிப்பும் அந்தஸ்தும் அழகா உயரும். ஆபீஸ்ல சில முன்னேற்றமான திருப்பங்கள் நேரிடும். தொழில், வியாபாரத்தில வர வேண்டிய பாக்கிகளெல்லாம் வந்து சேரும். கூட்டுத் தொழில் நல்ல முன்னேற்றம் காணும். குடும்பத்தில புது சொத்து, வீடு, வாகனம்னு நல்ல வரவுகள் கூடி மகிழ்ச்சி தரும்.

கும்பம் : அழகு படுத்தறதுக்குப் பொறுமையும், அளவும் தெரியணும். அளவா உங்க திறமையும், அறிவும் கூட்டி காரியங்களைப் பண்ணினா, எதிலேயும் அழகா ஜெயிப்பீங்க. பொருளாதாரம் கொஞ்சம் ஏற்ற இறக்கமா இருந்தாலும் வாரக் கடைசியில அழகா வந்து கை கொடுக்கும். ஆபீஸ்ல சிறப்பான வாரம். அனுகூலமான திருப்பங்கள் காத்திருக்கு. அழகா பயன்படுத்துங்க. தொழில், வியாபாரம்னு இருக்கிறவங்க புது முயற்சிகள்ல கவனமா ஈடுபடுங்க. அகலக்கால் வைச்சு அவஸ்தைப் படாதீங்க. கூட்டு முயற்சி காப்பாற்றும். குடும்பத்தில எதிர்ப்புகள், சிக்கல்கள் மறைஞ்சு சுபகாரியம் ஈடேற வழி கிட்டும்.

மீனம் : அழகான புன்னகை ஆயிரக் கணக்கான ரூபாய்க்கு வாங்குற நகையை விட மதிப்பு வாய்ந்ததுங்க. முன்னேறுகிற காரியங்களாலயும், பொருளாதார ஏற்றத்தாலேயும் அந்தப் புன்னகை உங்க முகத்தில நிரந்தரமா இருக்கற வாரங்க இது. ஆபீஸ்லயும் சுமுகமான சூழ்நிலையும், முன்னேற்றமான போக்கும் உங்க புன்னகைக்கு தெம்பு சேர்க்கும். தொழில், வியாபாரத்தில நிதானமான முன்னேற்றம் கிட்டும். வெளிநாட்டுத் தொடர்பு ஆதாயம் தரும். குடும்பத்தில இதுவரை இருந்த சிரமதசை மாறி, குழப்பங்கள் தீர்ந்து, மகிழ்ச்சிகரமான நேரம் கூடிவரும். ●



• உதவாத நக்கல்!



• பழிக்குப் பழிக்குப் பழிக்குப்...

● ராஜ்குமார், காராப்பாடி

? இலங்கையில் சுனாமியால் பாதிக்கப்பட்ட ஒரு குழந்தையை ஒன்பதுக்கும் மேற்பட்ட தம்பதிகள் உரிமை கொண்டாடுவது பற்றி...

! நியாயத்தை டி.என்.ஏ. பரிசோதனை மூலம் உறுதி செய்ய, விஞ்ஞானம் சட்டத்துக்கு உதவிய விந்தை நிகழ்ந்திருக்கிறது. நீதி வழங்கப்பட்டிருக்கிறது.

● ஆர்.ரங்கநாதன், சென்னை - 17

? சானியா மிர்ஸா ஆட்டம் எப்படி?

மூன்று தீர்ப்புகள்.

● பூ. சீனிவாசன், சென்னை - 26 ●

? ஈரானிலிருந்து, பாக். உள்பட நான்கு நாடுகளின் வழியாக இந்தியாவுக்கு எரிவாயு குழாய்கள் நிறுவ, பெரிய முதலீட்டில் திட்டம் நிறைவேற்றப்படவுள்ளதே... பாகிஸ்தானின் நம்பகத்தன்மையின்மையும் காஷ்மீர் பிரச்னை தீர்க்கப்படாத நிலையையும் கருதும்போது இது சாத்தியமானதா? புத்திசாலித்தனமானதா?

! திட்டம் சாத்தியமானதுதான். நாலு நாடுகளும் பயன்பெறுமாறும் பங்கேற்குமாறும், அதனை வடிவமைப்பது புத்திசாலித்தனமானது.

● அ.ஜஹ்பர் காதர், வினாத்திகுளம்

? போலி நிருபர்கள் பற்றி...? அவர்களிடம் ஏமாறாமல் இருக்க ஆலோசனை?

! அடையாள அட்டையைக் கேட்கணும். பப்ளிசிடி ஆசையை விட்டுத்

போலி நிருபர்கள்

! ஆட்டம் அபாரம் என்பதைத்தான் அவர் நிரூபித்துக் கொண்டிருக்கிறாரே. கவலை அளிப்பன அவர் காலில் ஏற்பட்டுள்ள உபாதை; அளவுக்கு மீறிய புகழ். இரண்டும் சேர்ந்து சறுக்கி விடாமல் இருக்க வேண்டும்.

● வசீகரன், சென்னை - 18

? குருமூர்த்தி மீது தமிழக அரசு வழக்கு போட்டுள்ளது பற்றி..?

! குருமூர்த்தியுடைய எழுத்தின் போக்கும், நோக்கும், கருத்தும் தராசுக்குப் பல சந்தர்ப்பங்களில் ஏற்புடையதாக இருந்ததில்லை. எனினும், காவல்துறை சங்கரராமன் கொலை வழக்கில் சொதப்பிக் கொண்டிருக்கிறது. அதை மறைத்து, மக்கள் கவனத்தை திசை திருப்பும் முயற்சியில் மேலும் புதை சேற்றில் சிக்குகிறது என்பதிலும் தராசுக்குச் சந்தேகமில்லை. ஆதாரம்: இது வரை வெளியாகியுள்ள

தொலைக்கணும்.

● என்.சுந்தரபாண்டியன், சென்னை

? "நான் திருச்சியில் போட்டியிட்டு,

• அன்றும்...



• ...இன்றும்!



போலீஸ் அமைச்சராகி, கலைஞரை நள்ளிரவில் கைது செய்தவர்களையும் அதற்குக் காரணமானவர்களையும்

பழி தீர்க்காமல் விடமாட்டேன்" என்று அந்நகரின் பொதுக் கூட்டத்தில் பேசியுள்ளாரே டி.ஆர்.பாலு?

! பழி; பழிக்குப் பழி; பழிக்குப் பழிக்குப் பழிக்குப் பழி- இது ஜனநாயகம் அல்ல; பழிநாயகம்.



• டபுள் டேஞ்சர்!

...பற்றி..?

● த. விஜயகுமார், மன்னார்குடி

? வங்கிகளை 36 சதவிகித மக்கள்தான் பயன்படுத்துகிறார்கள் என்ற நிதியமைச்சரின் கூற்று பற்றி...?

! இருக்கலாம் ஐயா. ஆனால் அந்த 36 சதவிகிதத்தினர்தான் நாட்டோட பொருளாதார வளர்ச்சி / வீழ்ச்சியை நிர்ணயிக்கறவங்க. அது பாக்கியுள்ள 64 சதவிகிதத்தினரையும் பாதிக்கத்தான் செய்யும்.

● டி.சுப்ரமணியம், மேலையூர்

? 'பராசக்தி - கண்ணம்மா'- ஒப்பிடுக?

! பராசக்தி - இளமை சக்தி

கண்ணம்மா - முதுமைப்பா!

● ஆர்.மாதவராமன், கிருஷ்ணகிரி

? சாதனையாளர் நாராயண் கார்த்திகேயன் பற்றி...?

! ஃபார்முலா ஒன்னில் முதன் முதலாகப் பங்கேற்கும் இந்திய இளைஞர். தோற்றாலும் பரவாயில்லை. ஸெரினாவுடன் மோதித் தோற்ற சானியாவின் சாதனைக்கு இணையாகும்.

● கே.தெய்வசிகாமணி, சென்னை - 30

? "பாகிஸ்தானிலிருந்து கிரிக்கெட் வீரர்களை மட்டும்தான் கூப்பிட்டு விளையாட வேண்டுமா? அங்கேயுள்ள 'சிறந்த' தீவிரவாதிகளையும் வரவழைத்து ஆடச் சொல்லலாமே'' என்று பால்தாக்கரே கூறியுள்ளாரே...?

! அப்புறம் பால் தாக்கரே தலைமையில் இங்குள்ள தீவிரவாதிகளை அங்கே அனுப்ப நேருமே; அதற்குத் தயாராயிருக்கிறாரா...?



• கனவுச் சிறுத்தை!



• திசை திருப்பல்!

நீங்கள் கேட்டவை — தராசு

● எம். சம்பத், வேலாயுதம்பாளையம்

? '39 பாராளுமன்றத் தொகுதிகளில் மறு தேர்தல் என்றால், 234 சட்டமன்றத் தொகுதிகளிலும் மறுதேர்தல் நடத்த வேண்டும்' என்று ஈ.வி.கே.எஸ் இளங்கோவன் சொல்கிறாரே?

! கவலைப்படாதீங்க. இரண்டு தரப்பும் வார்த்தைகளால் வாண வேடிக்கை நடத்தி முடிப்பதற்குள் பொதுத் தேர்தலே வந்துவிடும்.

● எஸ். கதிரேசன், பேரணாம்பட்டு

? விடுதலைச் சிறுத்தைகள் தலைவர் திருமாவளவனுக்குக் கூட முதலமைச்சர் கனவு இருக்கிறதாமே...?



• 36 & 64!



• பூஜா பலன்!

! பிரதமர் கனவே சிலருக்கு இருக்கும் போது, முதலமைச்சர் கனவு அப்படியொன்றும் பிரமாத விஷயமில்லை.

● ப. காளிதாசன், வேட்டனூர்

? 'குண்டர் சட்டம்' என்றால் என்ன...?

! குண்டர்கள் மீது பாய வேண்டிய சட்டம். சில சமயம் அப்பாவிகள் மீதும் அதனை காக்கி உடை குண்டர்கள் பிரயோகிக்கக் கூடும்.

● எஸ்.கே.வாசன், பாபநாசம்

? வீரப்பன்- கிணறு வெட்ட பூதம் கதையா...?

! உல்டா கதை. பூதத்தை வெட்டியாச்சு. (புதையல் இருக்கற) கிணறுதான் எங்கேன்னு தெரியலை.

● என். உஷா தேவி, மதுரை ❑

? சட்டம், குற்றவாளிகள் செய்த குற்றத்துக்குத் தண்டனை தருகிறதே தவிர, அவர்களைத் திருத்துவதற்கு என்ன செய்கிறது?

! தண்டனை தருவதே அவர்கள் திருந்த வேண்டும் என்பதற்காகத்தான். தனிமைச் சிறை அவர்களைச் சிந்திக்க வைக்கும்; ஆத்ம பரிசோதனை செய்து கொண்டு திருந்த உதவும் என்பது சட்டத்தின் இறுதி நோக்கம். ஆனால், நடைமுறையில் சிறைகளின் அமைப்பும் நிலைமையும், அதற்கு எதிர்மறையான விளைவுகளையே ஏற்படுத்துகின்றன.

● வி.எம். செய்யதுபுகாரி,
அதிராம்பட்டினம்

? 'சுனாமியை அரசியலாக்கியவர் கருணாநிதி' என்கிறாரே ஜெயலலிதா?

! அரசியலையே சுனாமியாக்கியவராச்சே ஜெயலலிதா!

● வே.நா. கதிர்வேல், வேலூர் - 6

? நமது கலாசாரம் சீரழிந்து கொண்டே வருவதற்குப் பெண்களும் ஒரு முக்கியக் காரணமாக உள்ளனரே?

! பெண்க'ளு'ம் என்று 'உம்' சேர்த்திருக்கிறீர்கள்... அதில்தான் இருக்கிறது விஷயமே. பெண்கள் என்ன தனித்தீவிலா வாழ்கிறார்கள்? இந்த சமுதாயத்தின் அங்கம்தானே அவர்களும்! கலாசாரச் சீரழிவுக்கு அவர்கள் பொறுப்பாவதைவிட, அச்சீரழிவால் அவர்கள் பாதிக்கப்படுவதே அதிகம்.

● வே.பாலா, திண்டுக்கல்

? "குற்றப்பத்திரிகையை, கோயிலில் வைத்து வழிபடுவது எப்படித் தவறாகும்? மாணவ - மாணவிகள் தேர்வுக்குச் செல்லும் முன்னரும், புதுக் காரியங்கள் ஆரம்பிப்பதற்கு முன்பும் கோயிலுக்குப் போவது போல்தானே இதுவும்..." என்று முதல்வர் நியாயப்படுத்துகிறாரே?

! மாணவ - மாணவியர் தனி நபர்கள். காவல் துறையினர் மதச்சார்பற்ற அரசின் ஊழியர்கள். பிரேம்குமார் தனிப்பட்ட முறையில் போய் சாமி கும்பிட்டால் யாரும் குறை சொல்ல முடியாது. அரசு சார்பில் குற்றப் பத்திரிகையைக் கோயிலில் கொண்டு வைக்கும்போதுதான் ஆட்சேபணை எழுகிறது - அது தவறு என்பதாலும், சுகம்புத்தனம் என்பதாலும். ○

❑ ரூ.100/- பரிசு பெறுபவர்:

என். உஷாதேவி,
விக்னேஷ் வில்லா,
7B, சுபேதார் தோப்பு
நியூ பங்கஜம் காலனி,
மதுரை - 625 009

* ரூ. 50/- பரிசு பெறுபவர்:

பூ. சீனிவாசன்,
சாயி லோக் அபார்ட்மெண்ட்ஸ்,
பிளாட் 46, எண் 27,
குமரன் காலனி இரண்டாவது தெரு,
வடபழனி, சென்னை - 26

மாதம் இருமுறை

குமுதம் பக்தி

மார்ச் 1, 2005

ஸ்பெஷல்

நலமும் வளமும் தரும்

நமசிவாய துதிகள்

தனிப் புத்தகம்



பிரதோஷத்தின் கதை

மினி புத்தகம்



வாஸ்து தோஷம் போக்கும் ஸ்வர்ண அலங்கார பெருமாள் புகைப்படம் இணைப்பு

25-ம் தேதி கடைகளில்...

கடலுக்குப் போன

மன்னை சதிரா

"ஏய் பவுனு... மண்ணெண்ணெய் வாங்கக் கொடுத்த காசை கோயில் உண்டியல்ல போட்டியா?'' ஆக்ரோஷமாகக் கத்தினான் அவள் மச்சான் முருகேசன்.

"என்னய்யா பேசறே? போன மாசம் உடம்பு முடியாம, மீனு புடிக்கவே போக முடியாம வீட்ல உழுந்து கிடந்தியே.... அப்ப நீ நல்லாயிரணும்னு வேண்டிக்கிட்ட நேர்த்திக்கடன். அதைத் தீர்த்தது தப்புங்கிறியா?''

"நேர்த்திக் கடனை தீர்த்துட்டில்ல, இன்னைக்கு அந்த சாமிகிட்டேயே போய் கடன் கேட்டு மண்ணெண்ணெய் வாங்கி, அடுப்பை எரியவுடுடி, போக்கத்தவளே. சாமிதான் படியளக்கிறாப்பில''

"தா, நீ சொன்னாலும் சொல்லாட்டியும் புள்ளையார் சாமிதான்யா படியளக்குது. போன மாசம் பூரா தொழிலுக்குப் போகாம படுத்துக் கிடந்தியே, அப்ப யாரு படியளந்தா, சாமிதான்.''

"என் உயிரைப் பணயமா வைச்சு கடலுக்குள்ளே போய் நான் மீன் புடிக்கிறேன். நீ என்னடான்னா சாமின்றியா... கையிலே பைசா இல்லே, போயி கள்ளி பொறுக்கி சோறாக்கு... இனிமேலாவது புத்தியா பொழைச்சுக்க, போடி. பிரசங்கம் பண்ண வந்துட்டா.''

பவுனுக்கு அழுகையாக வந்தது. தன்னைப் பற்றிப் பேசினதுக்குக் கூட அவள் வருத்தப்படவில்லை. தான் கும்பிடும் சாமியைத் திட்டுகிறானே, நம்ப மாட்டேன் என்கிறானே என்றுதான் ஆதங்கம்.

முருகேசன் நாத்திகவாதி. மற்றபடி நல்லவன்தான். இந்த ஒரு விஷயத்தில்தான் இருவருக்குள்ளும் முரண்பாடு. மற்றபடி எல்லா விஷயங்களிலும் ஒற்றுமை இருவருக்குள்ளும்.

முருகேசு வெள்ளனவே மீன் பிடிக்கக் கிளம்பினான்.


"என்னடா முருகேசு, இன்னைக்கு வெள்ளனவே கிளம்பிட்டே?'' என்றான் தோழன் பக்கிரி.

"நேத்து ஜனங்க விநாயகர் சதுர்த்தின்னு புள்ளையார் பொம்மைகளைத் தூக்கிட்டு வந்து கடல்ல கரைச்சதுல எடைஞ்சலாகி, மீனே பிடிக்க முடியல. அதான் இன்னைக்கு வெள்ளனவே கிளம்பிட்டேன். சாமின்னு சொல்றானுங்க... அதையே கடல்ல போட்டு அடிக்கிறானுங்க... என்ன சாமியோ... பக்தியோ''

ஆதங்கப்பட்ட முருகேசு கரையில் நின்ற படகைத் தண்ணீருக்குள் தள்ளி, ஏறி அமர்ந்து துடுப்பைப் போட்டான்.

கடனுக்கு வாங்கிய வஞ்சிர மீனைக் கழுவியபடியே பவுனு அவள் இஷ்ட தெய்வமான பிள்ளையாரை வேண்டினாள். "சாமி என் புருஷன் ஒத்தையிலே மீனு புடிக்கப் போயிருக்கு. அதுக்கு நிறைய மீனு கிடைச்சு நல்லபடியா வரணும். புள்ளையாரே, உனக்கு ரெண்டு தேங்காய் உடைக்கிறேன்.''

முருகேசு வலையைப் போட்டான். கொத்துக் கொத்தாக மீன்கள் வலையில் சேர்ந்தன. பூரித்துப் போனான். நடுக்கடலைத் தாண்டியும் போய் மீன்களை அள்ளினான். எல்லையற்ற சந்தோஷத்தோடு கரை திரும்புகையில்-



திடீரென பெரிய சுனாமி அலை வந்து படகையே திருப்பிப் போட்டது. அதற்கப்புறம் நடந்தது அவனுக்கு நினைவில்லை.

கரையில் நின்ற பவுனு, முருகேசைக் காணாமல், அக்கம் பக்கம் உள்ள மீனவர்களைக் கூப்பிட்டு முருகேசைத் தேடச் சொன்னாள். போனவர்கள் எல்லாம் வெறுங்கையோடு திரும்பினார்கள்.

நேரம் ஓட, ஓட, பவுனு அழுதழுது தன் பிள்ளையாரை வேண்டியபடி கரையிலேயே அமர்ந்து விட்டாள். 'எம் புருஷன் சொன்னது மாதிரி புள்ளையாருக்கு சக்தி இல்லையோ? சாமி என்பதெல்லாம் பொய்யா?' குழம்பித் தவித்தாள்.

விடியற்காலையில் -

பக்கிரி ஓடி வந்தான். "பவுனக்கா, ஓடியாங்க. நம்ம முருகேசு கரை ஒதுங்கிக் கிடக்கான். உசிரு இருக்கு. சீக்கிரம் வாங்கக்கா."

விநாயகர் சதுர்த்தியை முன்னிட்டு குப்பத்தில் வைத்து வழிபடப்பட்டு, முதல் நாள் கடலில் தூக்கி வீசப்பட்ட பிள்ளையார் சிலை அருகே கிடக்க, முருகேசன் கரை ஒதுங்கிக் கிடந்தான். குப்பத்தார் கூடி அவன் மூர்ச்சையைத் தெளிய வைத்தனர். விழிகளால் பவுனைத் தேடினான்.


"மச்சான்!"

"பவுனு, சாமிதான் காப்பாத்துன்னு நீ சொன்னப்ப மறுத்தேன். அதுக்காகத்தான் அந்த சாமி எனக்கு பாடம் சொல்லிக் குடுக்க நேராவே வந்துட்டாரு."

"என்ன மச்சான் சொல்றே?"

"என்னைக் காப்பாத்தினது யாரு தெரியுமா? நீ கும்பிட்ட புள்ளையார்தான். மூழ்கிப் போன நான் நீந்தி, நீந்தி களைச்சுப் போயி, மயக்கமா ஆயிட்டேன். இந்த கட்டைப் புள்ளையார் சிலைதான் என்னை ஏந்தி கரைக்குக் கொண்டு வந்து சேர்த்தது. நேரில் வந்து புரிய வெச்சிட்டாரு உன் சாமி பவுனு" நெகிழ்ந்து உருகின முருகேசனை கண்ணீரோடு அணைத்துக் கொண்டாள் பவுனு.

மச்சான்!



அழகு ஸ்பெஷலுக்காக ஒரு முதியோர் இல்லத்துக்குப் போய், அங்குள்ள பாட்டிகளைக் கொண்டே, 'உங்களில் அழகுப் பாட்டி யார்?' என்று தீர்மானிக்கும்படி கேட்டுக்கொள்ளுவது என்று முடிவெடுத்து, சென்னை மைலாப்பூரிலிருக்கும் 'அன்னை இல்லம்' சென்றோம். ஆதரவற்ற முதிய பெண்மணிகளுக்கான இல்லம். அன்னை இல்லத்தின் பிரதான ஹாலில் எல்லாப் பாட்டிகளையும் ஒன்று சேர்த்து, 'முதியோர் இல்லத்தில் அவர்கள் மற்றவர்களுடன் பழகும் விதம், உதவுகிற மனப்பான்மை போன்ற அக அழகு குண நலன்களின் அடிப்படையில், அழகுப் பாட்டி தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்' என்று தேர்தல் கமிஷன் கணக்காய் விதிமுறைகளும் வகுத்து, மெதுவாக அவர்களிடம் பேசக் கொடுத்தோம்.

கலகலப்பாய் பேச்சை ஆரம்பித்தார், முக்கால் செஞ்சுரி போட்ட லட்சுமிப் பாட்டி. ''இங்கே நாங்க எல்லாரும் ஒரே குடும்பம் போல வாழறோம். எல்லாருமே வயசானவங்கதான்னாலும், இங்க எல்லா வேலைகளையும் நாங்களேதான் செஞ்சுக்கறோம்'' என்று சொல்கிறபோதே,



• தோசை ரெடி

இன்னொரு பாட்டி இடைமறித்து, தன் பக்கத்தில் உட்கார்ந்திருக்கும் இன்னொரு பாட்டியின் இரண்டு தோள்களையும் பிடித்தபடி, ''இவங்க தினமும் காலைல எழுந்ததும், எல்லாருக்கும் காப்பி போட்டுக் கொடுப்பாங்க. சூப்பரா காப்பி போடுவாங்க. ஓட்டல்ல கூட காப்பி அவ்வளவு ருசியா இருக்காது!'' என்றார். 'காபி பாட்டி' முகத்தில் இலேசான வெட்கம்.

ரங்கநாயகி என்ற பாட்டி, இங்க சில பேர் தான் ரொம்ப வயசானவங்க. இதோ கூன் முதுகோட இருக்காங்களே, இவங்க பேரு செல்வநாயகி. எழுபத்தெட்டு வயசாகுது. இன்னிக்கும், அவங்கதான் தரைபெருக்குவாங்க. 'முதுகு வலிக்கப் போகுது'ன்னு சொன்னா, 'மூணு வேளை நல்லா சாப்பிட்டுட்டு, தெம்பாத்தானே இருக்கேன். வேலை செஞ்சா ஒண்ணும் குறைஞ்சிடமாட்டேன்'னு பிடிவாதமா துடைப்பத்தை வேறு ஒருத்தர் எடுக்க விடமாட்டாங்க'' என்றார்.

''இந்த பரிமளா இருக்கே... வெங்காயத்தை உரிச்சு, பொடிப்பொடியா நறுக்கறதுல எக்ஸ்பர்ட். வடை தட்டினா, இவங்க



• 'அலைபாயுதே...'

நறுக்கித் தர்ற பொடி வெங்காயத்தாலயே, ருசி கூடும்'' என்று சர்ட்டிபிகேட் கொடுத்தார்.

தினமும் காலையில் இந்தப் பாட்டிகளிலேயே இரண்டு பேர், பக்கத்து காய்கறி கடைக்குப் போய், அன்றைக்கு வேண்டிய காய்கறிகளை வாங்கிக்கொண்டு வந்துவிடுகிறார்கள். காய்கறிகள் வந்தவுடன், குளித்துவிட்டு ரெடியாய் இருக்கிற பாட்டிகளில் இரண்டு மூன்று பேர், சாம்பார், பொரியலுக்குத் தேவையான காய்கறிகளைக் கச்சிதமாய் நறுக்கிக் கொடுத்துவிடுவார்களாம்.

ஹேமா பாட்டிக்கு செவிக் குறைபாடு. ஹியரிங் எய்டு பொருத்திக் கொண்டு இருக்கிறார். அவரிடம், "ஒரு பாட்டுப் பாடு!" என்று இரண்டு பேர் சொன்ன மறுவிநாடி, அவர் தயக்கமே இல்லாமல், ''என்ன

பாட்டுப் பாட?" என்று கேட்க, நேயர்களின் விருப்பம் "அலைபாயுதே!".

மறுநிமிடம் தமது ஹியரிங் எய்டை சரிப்படுத்திக் கொண்டு, தாளம் போட்டபடி பாட ஆரம்பித்துவிட்டார். அவர் வந்து பார்க்கிறார். "நாங்க ஒரு டீ.வி. சீரியல் விடமாட்டோம்! கோலங்கள், ரோஜா, கல்கி கடைசியா மெட்டி ஒலி பார்த்திட்டு, டீ.வி.யை அணைச்சிட்டு, ஒன்பதரைக்கு தூங்கப் போயிடுவோம்" என்கிறார் பரிமளா.

மெதுவாக அவர்களிடம் "இங்கே இருக்கிற பாட்டிகளிலேயே சூப்பர் பாட்டி என்று ஒருவரைத் தேர்ந்தெடுக்கணும்னா யாரைத் தேர்ந்தெடுப்பீங்க?" என்ற கேள்வியைக் கேட்டதுதான் தாமதம்... "அது மாதிரி யாரையுமே குறிப்பிட்டுச் சொல்ல முடியாது. சொல்லவும் கூடாது" என்றார்கள் கோரசாக.



* நாங்க எல்லோரும் அழகிங்கதான்!

அழகுப் (ே)பாட்டி!

முழுப் பாட்டையும் பாடி முடித்த பிறகு, கைத்தட்டல். உள்ளே படுத்துக் கொண்டிருந்த சுலோசனா பாட்டியை வலுக்கட்டாயமாய் எழுப்பி, "நீ நல்லா பாடுவியே! நீயும் ஒரு பாட்டுப் பாடு!" என்று சொல்ல, அவரும் "என்ன பாட்டு வேணும்?" என்றார். மறுபடியும் ஒரு நேயர் விருப்பம் நிறைவேறியது.

ராத்திரி நேரத்தில் உப்புமா, இட்லி, பொங்கல், தோசை என்று ஏதாவது இருக்கும். அதுவும் தோசை என்றால், லட்சுமிப் பாட்டி அடுப்படியில் நின்று கொண்டு மடமடவென்று தோசை வார்த்துப் போட, தெரசா எல்லாருக்கும் தட்டில் கொண்டு வந்து போடுவார். "ஒரே ஆளு தொண்ணூறு தோசை சுடுவாங்க! அந்த ஸ்பீடைப் பார்க்கணுமே!" வியந்து பேசினார் ராஜம் பாட்டி.

உடம்பு சரியில்லை என்றால் பக்கத்திலேயே இருக்கும் டாக்டர் சாண்டில்யா

"எங்க எல்லாருக்குமே சோகமான ஒரு பின் கதை உண்டு. அதுல இருந்து விடுபட்டு, இந்த ஹோம்ல வந்து சேர்ந்திருக்கோம். பழைய கசப்பான வாழ்க்கையை மறந்து, இங்கே நிம்மதியா இருக்கோம்."

"நாங்க ஏதோ பாவம் பண்ணியிருக்கோம். அதுக்கான பலனை ஏற்கெனவே அனுபவிச்சிட்டோம். நாங்க பண்ணின புண்ணியம் இங்கே வந்து சேர்ந்திருக்கோம்."

"எங்களையெல்லாம் போட்டோ எடுத்து உங்க பத்திரிகையில போடுங்க. நாங்கள்லாம் எவ்வளோ சந்தோஷமா இருக்கோம்னு, எங்களை இங்கே அனுப்பி வெச்சவங்க தெரிஞ்சுக்கட்டும்"

இப்படியாக ரியாக்ஷன்கள் வர, 'பார்க்கப் போனால் இங்கே எல்லாருமே அழகுப் பாட்டிகள்தான்!' என்ற முடிவுக்கு நாம் வர வேண்டி இருந்தது.

- கௌதம்

படங்கள் : ஸ்ரீஹரி

இளமை கல்கி





"கமல் செம ஸ்மார்ட்!"

யாா் இந்தப் பெண்... தெரிகிறதா? பாலசந்தரின் 'கையளவு மனசு' சீரியலில் கீதாவின் கடைக்குட்டியாக நடித்து, மழலைக் குரலில் ஸ்வரங்கள் பாடி... யெஸ்... பேபி தீபிகாதான் இன்று 'உள்ளக் கடத்தல்' படத்தின் மூலம் பாடகி தீபிகாவாக மாறியிருக்கிறார். இன்றைய டீன்-ஏஜ் கேர்ளான இவரிடம் ஒரு சிட்சாட்.

இசை : என் வாழ்க்கையே இசையில் தான் அடங்குகிறது. படிப்பா, இசையா என்று வந்தால்கூட, படிப்பை டீலில் விட்டுவிடுவேன். இசைக்காக எதையும் துறப்பேன். என் இமைகள் துடிப்பதும் இசைதான் தெரியுமா?

பள்ளி வாழ்க்கை : ப்ரீ.கே.ஜி. முதல் இப்பொழுது படிக்கும் +2 வரை பதினைந்து வருடங்களாக ஒரே ஸ்கூலில் படிப்பதால், பிரியும் சமயத்தில் ஏக்கமா இருக்கு. ப்ச்.. +2 ஃபெயிலானாலும் மீண்டும் ஸ்கூலுக்குள் நுழைய முடியாதே!

தமிழ் : பேசுவேன். மெல்ல படிப்பேன், எழுதுவேன்.

அரசியல் : அடடா, சினிமா பத்தி கேட்டிருக்கலாமே. நியூஸ் பேப்பர்ல பார்க்குற லல்லு பண்ற லொள்ளுகள் மட்டும் தெரியும்.

கய்ஸ் : ஓவரா படிக்கற பசங்கதான் பேசவே மாட்டாங்க. மத்தபடி ஆண் - பெண் நட்பு தப்பேயில்லை. வாழ்க்கையில நட்பைவிடப் புனிதமான உறவு வேறென்ன இருக்கு?

கடவுள் வரம் : வரம் தருவதாக கடவுள் கூறினால், அவர் சாய்ஸுக்கே விட்டுவிடுவேன். பதிலுக்கு என் அற்புத இசையை கடவுளுக்கு அன்புக் காணிக்கையாக்குவேன்.

ஐஸ்வர்யா ராய் : Eyes ரொம்ப அழகா இருக்கும். என்னைவிட என் குரு சுதா ரகுநாதனுக்கு ஐஸை ரொம்பப் பிடிக்கும்.

ஹீரோஸ் : இளம் ஹீரோக்களை விட ஷாருக்கான், கமல்ஹாசன் பிடிக்கும். அதிலும் கமல் இந்த வயதிலும் ப்பா... செம ஸ்மார்ட்!

- செந்தில்

படம் : **ஸ்ரீஹரி**







இளமையைக் கண்டுபிடியுங்க!

நகர வாழ்க்கையில், காலைல எந்திரிக்கும்போதே டென்ஷனும் நம்மகூட சேர்ந்து கண் விழிச்சுக்குது. எப்படா ரிலாக்ஸ்டா சண்டே வரும்னு மனசு படபடன்னு தேடும். மக்கள் டென்ஷனைக் குறைக்க கடற்கரைச் சாலைக்குப் போவாங்க... ஆனா சுனாமியால அதோட கிரேஸும் குறைஞ்சிடுச்சு. இப்ப புதுசா சென்னை சேமியர்ஸ் ரோட்டுல, உங்களின் புத்துணர்ச்சியை உங்களுக்குள்ளேயே தேடி எடுக்க ஓர் அருமையான இடம் வந்திருக்கு. அது 'ஒரைசா' ('தாய்' மொழி வார்த்தை). 'ஸ்பா'வுட் இணைந்தது. 100% இயற்கை மூலிகைகளால் செய்யப்படும் மஸாஜ் குளியல் முதல் அனைத்து அழகு சிகிச்சைகளும் இங்கே களை கட்டப் போகுது. எல்லாம் உங்கள் தோலின் தன்மைக்கேற்ப, பரிசோதிக்கப்பட்ட பின்பே செய்கிறார்கள். 'உங்களுக்குள் புதைந்து போன புத்துணர்ச்சியை, இளமையை, இங்கே வந்தால் நீங்களே மீட்டெடுக்கலாம்' என்கிறார்கள் இங்குள்ள தாய்லாந்து அழகு நிபுணர்கள். ஆனால் இங்கு கிடைக்கும் அழகிற்கும், அமைதிக்கும் விலை கொஞ்சம் அதிகமாகத்தான் கொடுக்க வேண்டியதிருக்கிறது. பின்ன, அழகுன்னா சும்மாவா!

- முகில்

இளமை கல்கி



விஜய் டி.வியின் 'மக்கள் யார் பக்கம்' நிகழ்ச்சியின் மூலம் சின்னத்திரை ரசிகர்களைத் தன் பக்கம் இழுத்தவர் இளம் அரசியல் விமர்சகர் கோபிநாத். அவருடன் ஒரு சந்திப்பு...

என்னதான் ஆனது உங்களின் 'மக்கள் யார் பக்கம்' நிகழ்ச்சிக்கு...?

"எலெக்ஷன் சமயத்துல வந்த ஒரு சீஸன் புரொக்ராம் அது. அதனால அதை தாற்காலிகமா நிறுத்தியிருக்காங்க... அரசியல் களம் சூடுபிடிக்கும்போது மீண்டும் வரக்கூடும்."

டி.வி.யில் அரசியல் விமர்சகராக ஆரம்பித்து, இப்போது சினிமா விமர்சகராக மாறியுள்ளீர்கள்... சிரமமாக இல்லையா...?

"தமிழ்நாட்டைப் பொறுத்தவரைக்கும் சினிமா வேறு, அரசியல் வேறுங்கற நிலைமை இல்லை... நான் சொல்றது நிகழ்வுகளை வைத்து. அதனால எந்தக் கஷ்டமும் இருக்கறதா தெரியலை..."

அரசியலில் நடுநிலை எடுத்தது போல சினிமா விமர்சனத்திலும் எடுக்க முடியுமா...?

"நிச்சயமா எடுக்க முடியும். சினிமா விமர்சனம்ங்கறது எதுவுமே நாங்க சொல்றது இடையாது. முழுக்க முழுக்க பொதுமக்கள், ரசிகர்களின் கருத்து. அதே சமயம், நானும் ஒரு நல்ல சினிமா ரசிகன். ஆக, விமர்சனம் நடுநிலையோடுதான் இருக்கும்."

அருண்ஷோரி என்றால் உங்களுக்கு ரொம்பப் பிடிக்குமாமே...?

"ஹலோ... நீங்க எங்க வர்றீங்கன்னு புரியுது... அருண்ஷோரியை ஒரு ஜர்னலிஸ்டா ரொம்பப் பிடிக்கும். அதுக்காக அவரை மாதிரி நானும் அரசியலுக்கு வரணும்னு அவசியமில்லை. அதே சமயம் எனக்கு அரசியல் பிடிக்கும். இல்லைன்னு சொன்னா அது ஏமாற்று வேலை."

உங்கள் இளமை ரகசியம்?

"மனசை சுத்தமா வைத்திருந்தா அழகு தானா வரும்."



"நானே கற்றுக்கொண்ட நீச்சல்!"

உங்களுடைய ரோல் மாடல்...?

"நானே ஆற்றில் குதித்து நானே கற்றுக் கொண்ட நீச்சல். ஆனா நான் யாருக்காவது ரோல் மாடலா இருக்கணும்னு நினைக்கிறேன். அதுக்காக கஷ்டப்பட்டு உழைக்கிறேன்."

- கிருஷ்ணா

ஆண்கள் ஏன் ஜொலிப்பதில்லை?

நமது நாட்டில் ஆணாதிக்கம் அதிகமுள்ள துறைகளில் ஒன்று விளையாட்டு. அது கிரிக்கெட்டாகட்டும் அல்லது ஹாக்கியாகட்டும்... ஆண்களுக்கு உள்ள மவுசில் ஒரு சதவிகிதமும் பெண் வீரர்களுக்கு இல்லாத நிலையில், ஆச்சர்யமாக அத்லெடிக்ஸில் மட்டும் இந்நிலைமை தலைகீழாக இருக்கிறது.

பி.டி.உஷாக்களும், அஞ்சு ஜார்ஜுகளும் நிரம்பியிருக்கும் அத்லெடிக் ஃபீல்டில், சர்வதேசப் போட்டிகளில் பெண்கள் வாங்கிக் குவிக்கும் மெடல்களுக்கு மத்தியில், ஆண்கள் வெறுங்கையுடன் திரும்புவது ஏன் என்று சர்வதேசப் போட்டிகளில் இந்தியா சார்பாக கலந்து கொண்டு வரும் தமிழக லாங் ஜம்ப் வீரரான வேய்ன் பெப்பினிடம் கேட்டோம். அவரது வாதங்கள் இதோ...



★ ஆண் பெண் என்றில்லை... பொதுவாகவே நம் நாட்டில் விளையாட்டுக்கு முக்கியத்துவம் கொடுப்பது கிடையாது. நானே கல்லூரியில் நுழையும்வரைக்கும் விளையாட்டை ஒரு ஹாபியாகவே வைத்திருந்தேன்.

★ உலக அரங்கில் ஏன் கார்ல் லீவிஸ், மைக் பவுல் போன்றோர் பேசப்படுகிறார்கள்? வெளிநாடுகளில் ஒரு ஜிம்னாஸ்டிக்கிற்குத் தயாராவது போல் இங்கு யார் பயிற்சியெடுப்பார்கள்? இங்கு எங்களுக்கு அளிக்கப்படும் சாதாரணப் பயிற்சிகளால் எப்படி உலகத்தின் பார்வையை எங்கள் மீது திருப்புவது?

★ பெண்களுக்கென்று அரசாங்கம் பல சலுகைகளையும் உதவிகளையும் அளித்து வருகிறது. ஆண்களும்தான் அதே அளவு சாதனைகள் படைக்கிறோம். ஏன் எங்களிடம் மட்டும் பாராமுகம் காட்டுகிறது அரசு?

★ பெண்கள் ஆண்களைப் போல் குடும்பச் சுமைகளை சுமப்பது கிடையாது. அதனால் அவர்களால் விளையாட்டில் அதிகளவு ஈடுபாடு காட்ட முடிகிறது. இதில் கிடைக்கும் முன்னேற்றங்களை வைத்து, ஸ்போர்ட்ஸ் கோட்டாவில் வேலையும் வாங்கி விடுகிறார்கள்.

★ தட்டிக் கொடுக்க ஆளில்லாததால் திறமையும் ஆர்வமும் இருந்த போதிலும், போட்டிகளில் சிறு தோல்விகள் அடைந்தாலும் வீட்டிலிருந்து கேள்விகள் எழும். 'விளையாட்டை நம்பி மோசம் போகாதே. ஒழுங்கா படித்து வேலை தேடு' என்று வீட்டிலிருந்து வேண்டுதலும் கட்டளையும் எழும்பொழுது, எங்களால் என்ன செய்ய முடியும்?

★ விளையாட்டு வீரனுக்கு சத்துள்ள உணவுக்காக நிறையச் செலவாகும். ஒரு சாதாரண ப்ளேயருக்கு இதெப்படி சாத்தியமாகும்?

★ தமிழ்நாட்டில்தான் ஆண்களால் சாதிக்க முடியாமல் போய்விடுகிறது. ஆனால் கேரளாவில் ஆண் - பெண் இருவருக்கும் ஒரே மாதிரி ஊக்கம் கொடுக்கிறது அம்மாநில அரசு.

- எழில்

படம் : ராஜன்

உண்மையான நடுநிலை!



படம் : ராஜன்

தமிழகத்தின் பாரம்பரியமிக்க பத்திரிகையான கல்கிக்கு எங்கள் வீட்டில் மட்டுமல்ல... எல்லோர் வீட்டிலும் தனி இடம் உண்டு. அதற்குக் காரணம் கல்வி, கலை, அரசியல், விளையாட்டு, மருத்துவம் என்று அனைத்துக்கும் உரிய முக்கியத்துவம் கொடுத்து, அனைவருக்கும் புரியும் வகையில் செய்திகளைத் தருவதுதான். அரசியல் செய்திகளில் துல்லியமான கணிப்பும், உண்மையான நடுநிலையும் இருப்பதால்தான் ஒவ்வொரு புதன் கிழமையன்றும் தவறாது கல்கியைப் படித்து விடுகிறேன்.

\- ஜி.கே.வாசன்


வியக்க வைக்கும் வெள்ளி
92.5 பியூரிட்டி ஸ்டர்லிங் சில்வர் - உலகத்தர முத்திரையுடன்.
வெள்ளி பொருள்களையும், ஆபரணங்களையும் கலை
அழகுடன் நிறம்பட உருவாக்கி, உங்களுக்காக தரத்துடன்
தருகிறோம். அழகு என்பது எல்லோராலும் விரும்பக்கூடிய
ஒன்று. அகத்தின் அழகு முகத்தில் தெரியும் என்பது
பழமொழி. முகத்தின் அழகு நீங்கள் அணியும் எங்கள்
V.B.J-யின் வெள்ளி ஆபரணங்களிலே என்பது இன்றைய
உண்மை.
இதுமல்லாமல் உலகப் புகழ் பெற்ற வெள்ளி
ஆபரணங்களை இங்கிலாந்து, ஜெர்மனி, இத்தாலி, ஜப்பான்
போன்ற நாடுகளிலிருந்து தருவித்துத் தங்களுக்கு அளிக்கத்
தயாராக வைத்துள்ளோம்.
இந்த புத்தாண்டு V.B.J-யின் வெள்ளி ஆபரணங்களின்
ஆண்டாக மலர......
...... உங்கள் அனைவரையும் வெள்ளி உலகிற்கு அன்புடன்
அழைக்கிறோம்.
VBJ Silver Jewellery
"Rani Seethai Hall" Parallel to Ge
nnai - 600 006.
ne: 28292003/ 2004/ 2006. Visit us at
ummidi2000@yahoo.com

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN / PMG (CCR) 572 / 03 - 05 *
Licensed to post without prepayment under PMG's Licence No. WPP 358 / 03 - 05 * Registered as a Newspaper in Srilanka